மகாமதிப் பாவலர்

டாக்டர். செ. பசுலுமுகியிதீன்

மகாமதிப் பாவலர்

டாக்டர் செ. பசுலுமுகியிதீன் எம்.ஏ., பி.எச்.டி.

பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
மஜ்ஹருல் உலூம் கல்லூரி
ஆம்பூர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ., தரமணி, சென்னை-600113.

சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் அறக்கட்டளைச்
சொற்பொழிவு வரிசை — 1 (19 & 20-3-86)
SADHAVATHANI SEYGU THAMBIP PAVALAR ENDOWMENT LECTURE No. 1
Endowment Lecture Publication No. 12

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	MAKĀMATIPPĀVALAR
Author	:	Dr. S. FAZULU MOHIDEEN, M.A.,Ph.D. Prof. & Head of the Department Mazharul Uloom College Ambur, 635802.
Publisher and Copy right	:	International Institute of Tamil Studies, T. T. T. I. Post, Taramani, Madras - 600113.
Publication No	:	121
Language	:	Tamil
Date of Publication	:	19-3-1986
Edition	:	First
Paper used	:	14 Kg. Tamilnadu Creamwove
Size of the book	:	21 × 14 cms.
Printing types used	:	10 pt.
Number of copies	:	1200
Number of pages	:	VI+108
Price	:	Rupees Eleven only
Printers	:	Jayasree Printers 238, Pycrofts Road, Triplicane, Madras-5.
Binding	:	Card Board
Artist	:	A. Veluchamy
Subject	:	Biographical sketch of Seygu Thambip Pavalar

பதிப்புரை

டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 113.

நிறுவனம் நிறுவியுள்ள பல்வேறு அறக்கட்டளைகளுள் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அறக்கட்டளையும் ஒன்று இந்நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர் பெருமக்களுள் ஒருவராக, நாஞ்சில் நாட்டின் நன்கொடையாகத் திகழ்ந்தவர் பாவலர் அவர்கள். அவர்களின் பெருமையைத் தரணியெங்கும் பரப்புதற்கு விழைந்து செயலாற்றும் 'சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவுப் பணிக் குழுவினர்', அதற்காக நிறுவனத்தில் இவ்வறக் கட்டளையை நிறுவியுள்ளனர். அவர்கட்கு நிறுவனம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வறக்கட்டளையின் முதற்சொற்பொழிவாகப் பாவலரையும், பாவலரின் நூல்களையும் அறிமுகப்படுத்தும் இந்நூல் அமைகிறது. பாவலரின் ஆழ்ந்த தமிழ்ப் பற்றையும், அகன்ற கல்வியினையும், நூலாசிரியர், பேராசிரியர் டாக்டர் பசுலு முகியிதீன் தெளிவாகக் காட்டியுள்ளார். மறைந்து நிற்கும் பாவலரின் பெருமையைத் தமிழகம் அறிந்து கொள்ள உதவும் விளக்காக நூல் அமைந்துள்ளது. இதனை நன்கு உழைத்து, சிறப்பாகப் பகுத்து அமைத்துள்ள நூலாசிரியர் டாக்டர் பசுலு முகியிதீன் அவர்களைப் பாராட்டிப் போற்றி மகிழ்கின்றேன்.

நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கட்கும் எங்கள் நன்றி. நூலைச் செம்மையுற வெளியிடப் பணி புரிந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுப் பொறுப்பாளர் டாக்டர் ச. சிவகாமி அவர்கட்கும் நன்றி. நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்துள்ள ஜெயஸ்ரீ அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி.

சென்னை
10-3-86

அன்பன்
ச. வே. சுப்பிரமணியன்.

என்னுரை

சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் அறக்கட்டளைச் சொற்பொழிவின் பலனாக வெளியிடப்படும் இச்சிறிய நூல், அப்பாவலரின் வாழ்க்கை வரலாற்றோடு அவர் தம் படைப்புக் களையும் தமிழுலகம் ஓரளவு அறிந்துகொள்ளத் துணை நிற்கும்

நான் பி. எச். டி. ஆய்வுக்காக "செய்கு தம்பிப் பாவலரின் இலக்கியங்கள் — ஒரு திறனாய்வு மதிப்பீடு" என்ற தலைப்பை எடுத்ததுமே, நமது நிறுவன இயக்குநர் பேராசிரியர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியனார் அவர்கள், பாவலரைப் பற்றி இன்றைய தமிழ் மக்கள் அறிந்து கொள்ளத் தக்க விதத்தில் நூல் ஒன்றினை எழுதி வெளியிடுமாறு என்னைப் பணித்தார்கள். அப்போதே இந்நூலுக்குக் கால்கோள் நிகழ்வுற்றது. தொடர்ந்து என் ஆய்வுக்குச் சேகரிக்கப்பட்ட செய்திகளினூடே இந்நூலுக் குரிய செய்திகளும் வந்து திரண்டன. நான் என் ஆய்வை முடித்துப் பட்டத்தைப் பெற்று விட்ட பின்னரும், இந்நூலை முழுமையாக்கி வெளியிடும் சூழல் வாய்க்காதிருந்தது. இன்று அதற்கான நல்ல வாய்ப்பை நம் இயக்குநரவர்களே அமைத்துத் தந்து விட்டார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக விரைவாகப் பல ஆய்வு நூல் களைக் காணும் வாய்ப்பைத் தமிழுலகத்துக்கு ஏற்படுத்தித் தந்த பெருமை டாக்டர் ச. வே. சு. அவர்களைச் சாரும். அவ்வாய்ப்பு களுக்கான களங்களாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள அறக்கட்டளைகள் பலவற்றுள், சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அறக்கட்டளையும் ஒன்று. இவ்வறக்கட்டளையின் முதற்சொற்பொழிவை ஆற்றும் அரிய வாய்ப்பை எனக்கே தந்ததோடு, அதை இந்நூலாக நிறுவனத் தின் சார்பில் வெளியிடும் பொறுப்பினையும் ஏற்று, நல்லதோர் அணிந்துரையையும் வழங்கியுள்ளார்கள். கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய பேராசிரியர் டாக்டர் ச. வே. சு. அவர்களுக்கு, நான் என் இதயநன்றியைத்தான் எப்படி வெளிப்படுத்துவேனோ?

இந்நூலைக் கண்ணுறும் தமிழ் மக்கள் பாவலர் பற்றிய ஒரு தெளிவான கருத்தைத் தம் உள்ளத்தின் கண்ணே உருவாக்கிக் கொள்ள இயலுமேல், அதுவே யான் பெற்ற பேறு.

இந்நூல் வெளிவரப் பல்லாற்றானும் உதவிய அன்பர்கள் அனைவர்க்கும், குறிப்பாக அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கி ஊக்கமூட்டிய என் ஆய்வு வழிகாட்டியும் இந்நிறுவனப் பேராசியருமான கலைமாமணி டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

7-3-1986 செ. பசுலு முகியிதீன்

உள்ளுறை

பயணம்

கோட்டாறு

'மருதமும் நெய்தலும் மயங்கியங் கெங்கும் புரையறு செல்வம் நிலைபெற வளரும்'[1] 'நாஞ்சில் நாடு இன்றைய குமரி மாவட்டத்திற்குட்பட்ட தோவாளை, அகத்தீசுவரம் என்னும் இருகோட்டங்களும் இணைந்த நிலப்பகுதி. நன்செய் வளம் செறிந்த இந்நன்னாட்டின் நடுவிடமாகத் திகழ்வது கோட்டாற்றுப் பழம்பதி. நிலனுழுதுஉடல் வளர்க்கும் நெல்லேருழவர்களும் புலனுழுது உயிர் வளர்க்கும் சொல்லேருழவர்களும் குலம் சிறக்க வாழும் கோட்டையாக இயன்றது இவ்வூர்.

நாகர்கோவில் என இந்நாளில் வழங்கும் நகர்ப்பகுதி முழுவதுமே ஒருகாலத்தில் கோட்டாறு எனவே வழங்கி வந்துள்ளது. 'கோட்டாறான மும்முடி சோழபுரத்து நாகர் கோவில்'[2] என்னும் கல்வெட்டுத் தொடர் இதனை உணர்த்தும். பழையாறு எனப்படும் வளைந்த (கோட்டமான) ஆற்றின் கரையில் அமைந்ததால், கோட்டாறு எனப்பட்டது இவ்வூர். வாட்டாறு என்னும் ஆற்றின் கரையில் இருக்கும் ஊர் 'வாட்டாறு' எனப் பெயர் பெற்றது போல இப்பெயரும் அமைந்ததுஎன்பர்.[3]

---

1. சுந்தரம் பிள்ளை, பெ. — 'மனோன்மணீயம்' — அங்கம் 2 களம் 1 வரி 78-79.
2. T. A. S. Vol. IV P. 163.
3. சதாசிவம், செ. — சேரநாடும் செந்தமிழும் (1953) பக். 113.

'கொல்லம் தோன்றிய கோட்டாறு' என்னும் பழமொழி ஒன்று வழங்கிவருவதால், கொல்லம் ஆண்டு தொடங்கிய போதே இவ்வூர் தோன்றியிருக்கலாம். எனவே, ஏறத்தாழ 1160 ஆண்டுப் பழமையால் ஏற்றம் பெற்ற ஊராகும் இது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'பாண்டிக் கோவை' என்ற நூலிலும்,[4] பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாடப்பட்ட 'கலிங்கத்துப் பரணி' என்ற நூலிலும்[5] 'கோட்டாறு' என்ற பெயர் குறிப்பிடப் படுகின்றது. கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டிலிருந்து-அஃதாவது இராசராச சோழன் காலத்தி லிருந்து 'கோட்டாறான மும்முடி சோழபுரம்'[6] எனவும், பதினைந் தாம் நூற்றாண்டிலிருந்து-அஃதாவதுகேரள வேந்தர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 'கோட்டாறான சோழ கேரளபுரம்'[7] எனவும் வழங்கியுள்ளது இவ்வூர். ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் நாகர் கோவில் என வழங்கப் பட்டாலும் இந்நகரின் இதயமாக உள்ள அங்காடித் தெரு முதல் முஸ்லிம் பெருங்குடி மக்கள் பெருக வாழும் இளங்கடை உள்ளிட்ட எல்லை வரையிலும் அமையும் நிலப்பரப்பு இன்றளவும் கோட்டாறாகவே உள்ளது.

பக்கமெல்லாம் பச்சைப் பயிர்ப் போர்வையால் பார்வைக்கு விருந்தளிக்கும் இவ்வூருக்குத் திக் கெட்டும் புகழ்மணக்க வாழ்ந்த செம்மலர் பலரைப் பெற்றெடுத்த பெருமை உண்டு. கி.பி. எட்டாம் நூற்றாண்டை ஒட்டித் தஞ்சைத் தரணியை அரசாண்ட பெரும்பிடுகு முத்தரையனைப் பெருமைப் படுத்திப் பாடிய புலவர்களுள் கோட்டாற்று இளம் பெருமானார் என்பவரும் ஒருவர் என்ற குறிப்பு[8] உள்ளது. சோணாடு வரையிலும் தொடர்ந்த சொற்றமிழ்ப் புலமை இவ்வூருக்கு அக்காலத்திலேயே இருந்தமையை இஃது உணர்த்தும். ஏறத்தாழ எழுநூறு ஆண்டு களுக்கு முன்னர் இளங்கடைப் பகுதியில் இஸ்லாமியர் இல்லமைத்து வாழத்தொடங்கியதிலிருந்து இவ்வூரின் பெருமை கடல் கடந்தும் பரவியது. இப்பகுதியில் தோன்றிச் சன்மார்க்க அறிவும் தமிழறிவும் வாய்க்கப் பெற்றுப் பழுத்த சூஃபி ஞானப்

---

4. இறையனார் அகப்பொருளுரை — மேற்கோள் பாடல்-5 (கழகம் 1958) பக். 42.
5. சயங் கொண்டார் — கலிங்கத்துப் பரணி-தாழிசை 95.
6. சதாசிவம், செ. — சேரநாடும் செந்தமிழும் (1953) பக். 117.
7. சதாசிவம், சேரநாடும் செந்தமிழும் (1953) பக். 117.
8. செந்தலை சிவன் கோயில் கல்வெட்டு (செந்தமிழ் — தொகுதி 6) பக். 6-12.

புலவர் பெருமக்கள் தம் இலக்கியப் படைப்புக்களை உலகு முழுவதும் உலவ விட்டிருக்கின்றனர். ''மெய்ஞ்ஞானத் திருப் பாடற்றிரட்டு'' என்னும் நூலினைத்தந்த ஹசரத் ஞானியார் சாகிபு என்ற செய்கு முகியித்தீன் மலுக்கு முதலியார், ''ஐம் கூத்து மாலை''யைச் செப்பிய மேனா ஹாஜியார் என்ற செய்கு முகியித்தீன் காதிரி, ''வேதாந்த ரத்தின மாலை''யை விளம்பிய செய்கு முகம்மது மதினாசாகிபு, ''புகழ்ச்சி மாலை''யைப் புகன்ற செய்கு முகம்மது மீரான் முகியித்தீன் காதிரி, ''சிவஞானதீபம்'' என்ற நூலைச்செய்தளித்த ஜமாலியார் செய்யிது அபூசாலிஹ் சாகிபு, செய்யிது சிந்தா ஷாஹ் மதார் சாகிபு, ''திரு மெய்ஞ்ஞான சாகரத் திருப்பாடற்றிரட்டு'' நூலைத் தந்த செய்குபாவா செய்கு சுலைமானுல் காதிரி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். மேலும், சீறாப் பெருங் காப்பியத்தைக் கீர்த்தனை வடிவில் பாடிக் கீர்த்திபெற்ற செயிராக்கரு என்ற செய்யிது அபூபக்கர் புலவரும் இக்கோட்டாற்றுப் பதியில் தோன்றி யவரே. இன்னோரன்ன புலவர் பெருமக்கள் தோன்றியதால், 'பாட்டாறு பெருக்கெடுக்கும் கோட்டாறு' என்னும் பாராட்டுக்கு உரிய இவ்வூரில்தான் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் விறல்மிகு சொல்வேந்தர்—ஒரும் அவதானம் ஒரு நூறு செய்திந்தப் பாரில் புகழ்படைத்த பண்டிதர்[9]—மகாமதி செய்கு தம்பிப் பாவலர் தோன்றிச் செந்தமிழைச் செழுந்தமிழாக்கினார்.

பிறப்பு-இளமை-கல்வி

ஹசரத் ஞானியார் சாகிபவர்களின் வழி வந்த ஆமினா அம்மையாரின் அருமகவாகத் தோன்றியவரே செய்கு தம்பிப் பாவலர். தந்தையார் பெயர் பக்கீர் மீரான். 31-7-1874-இல் பிறந்த செய்குதம்பி, ஐந்தாம் வயதில் திரு குர்ஆனை ஓதத் தொடங்கி, எட்டாவது வயதில் முடித்துக் கொண்டதும், இளங் கடைப் ஆதாரப் பள்ளியில் அரை வகுப்பில் சேர்க்கப்பட்டார். இருபதே நாட்களில் முதல் வகுப்புக்கு அனுப்பப்பட்ட தம்பி, படிப்படியாக ஆறு திங்களில் நான்கு வகுப்புகளையும் கடந்து விட்டார். இந்த ஆறு திங்கள் பள்ளி வாழ்க்கையே—நான்கு வகுப்பு வரை கற்ற கல்வியே அவருக்குக் கிடைத்தது. மேலும் கல்வியைத் தொடரப் பொருள் நிலை இடந்தரவில்லை. இங்கு அவர் படித்தது மலையாள மொழியை.

செய்கு தம்பியின் அறிவு வேட்கை அவரை அண்மையிலுள்ள பட்டாரியர் தெரு சங்கர நாராயண உபாத்தியாயரிடம் தள்ளிச்

9. கவிமணி தேசிக விநாயகம் — மலரும் மாலையும்

சென்றது. அவர் நடத்திய திண்ணைப் பள்ளியில் சேர்ந்து தமிழ்க் கல்வியைக் கற்கத் தொடங்கினார். தாம் நீண்ட நாட்களாகத் திரட்டிப் பாதுகாத்து வைத்திருந்த அரை வெண்பொற்காசினை வெற்றிலையில் பொதிந்து ஆசானுக்குத் தக்கிணையாகக் கொடுத்தார். செய்கு தம்பியின் கல்வி வேட்கையையும் அதற்கிடையூறாக இருந்த நல்குரவையும் நனி உணர்ந்த நல்லாசான் அந்த அரை வெண்பொற்காசினையும் அவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டு அறிவு விருந்தை ஆர்வத்துடன் படைக்கலானார். செய்கு தம்பி,

''பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன் குறிப்பிற்சார்ந்
திருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத் தனாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவாயாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போதல்''

என நன்னூலார்[10] நவின்றதற் கிணங்க நடந்து, நாளடைவில் நன்னூல், இலக்கண விளக்கம், தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல்களையும், திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம், வில்லி பாரதம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், நைடதம் ஆகிய இலக்கியங்களையும் கற்றுத் தெளிந்தார். இதன் பயனாகத் தம் பதினைந்தாம் வயதிலேயே அந்தாதி, பிள்ளைத்தமிழ், பல்வகைச் சித்திரகவிகள் இவற்றைப் பாடும் ஆற்றலைப் பெற்றார்.[11]

பதிப்பாசிரியர்

ஹசரத் ஞானியார் சாகிபவர்களின் மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டினைப் பிழையறப் பதிப்பிக்க அன்னாரின் வழித் தோன்றலான செய்யிது தாகா சாகிபவர்கள் விரும்பினர். அன்னாரின் ஞானமார்க்கத்தைச் சார்ந்தவரும் நனிபெரும் வள்ளலுமான மேலப்பாளையம் ஷம்சுத்தாசீன் தரகனாரவர்கள் தக்க பொருளைத் தந்துதவி, மிக்க புகழைப் பெற முன்வந்தனர். இதன் பொருட்டுச் சென்னைக்குப் புறப்பட்ட செய்யிது தாகா

10. பவணந்தி முனிவர் — நன்னூல் 40.
11. சதாசிவம், செ. — சேரநாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் வரலாறு (1947) பக். 56, 57

சாகிபவர்கள், தமிழறிவும் சமய அறிவும் சரிவர வாய்க்கப் பெற்ற ஒருவரின் துணை தேவை எனக் கருதியவர், அவ்வாறு துணை நிற்கத்தக்கவர் தம் மைத்துனரான செய்கு தம்பியே எனத் தேர்வு செய்தார். எனவே, தம் பத்தொன்பதாம் வயதில் சென்னை மாநகர் நோக்கிச் சென்றார் செய்கு தம்பி. அக்காலத்தில் சென்னையிலுள்ள ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடமே நூற்பதிப்பில் முன்னணியில் நின்றது. எனவே, அங்கேயே தாம் கொணர்ந்த நூலினைப் பதிப்பித்துக் கொண்டு கோட்டாறு திரும்பினார் தாகா சாகிபு. ஆனால், செய்கு தம்பியின் பிழை திருத்தப் பணியில் பெரிதும் கவரப்பட்டுவிட்ட அச்சக உரிமையாளர் இட்டா பார்த்தசாரதி நாயுடு, அவரைத் திரும்பிச் செல்ல விடவில்லை. தம் நிறுவனத்தில் பதிப்பாகும் பிற நூல்களுக்கும் பிழை திருத்தும் பணியினைச் செய்திட வேண்டினார். செய்கு தம்பியும் தீர யோசித்துவிட்டு இசைவு தெரிவித்தார். திங்களொன்றுக்கு ரூ 60/-வீதம் சம்பளம் என உறுதி செய்து அங்குள்ள பிழை திருத்தாளர்களின் தலைவராகச் செய்கு தம்பியை நியமித்தார் நாயுடு. அன்று முதல் அப்பதிப்பகத்தில் வெளியான நூல்கள் அனைத்தும் செய்கு தம்பியின் பார்வைக்குப் பின்னரே அச்சேறின. அவரால் பிழை பார்க்கப் பட்ட நூல்கள் அனைத்தும் அவரது நினைவுப் பேழையில் பதிவாகியும் விடும். அவரது வியத்தகு நினைவாற்றலைப் பற்றி அவர் மைந்தர் திரு கே. பி. எஸ். ஹமீது [12], ''என் தந்தையார் அவர்களுக்கிருந்த அதிசயிக்கத்தக்க நினைவாற்றல் அவர்கள் காலத் தலைமுறையில் வேறு யாருக்கும் இருந்ததாக யாரும் கூற நான் இதுவரைக் கேட்டதில்லை'' என்றும், ''எந்த ஒரு நூலையும் ஒரு தடவை படித்து முடிக்கும் பொழுதே அந்நூலின் மற்றொரு பிரதியை அவர்கள் தங்கள் மனத்திரையில் பகர்ப்பெடுத்து வைத்துக் கொள்வது வழக்கமாம்'' என்றும் எழுதுகின்றார். ''அவர்களிடம் அமைந்திருந்த நினைவாற்றல்போல் வேறு எவரிடமும் இருக்க நான் கண்டதில்லை'' என்கிறார் அவரின் மாணாக்கர்களில் ஒருவரான முதுபெரும் புலவர் சாத்தாங்குட்டிப் பிள்ளை[13].

செய்கு தம்பியின் சீரிய பார்வையுடன் பதிப்பாகும் நூலில் எந்த விதமான பிழையும் இருக்காது என்ற எண்ணம் பார்த்த சாரதி நாயுடுவுக்கு இருந்ததைப் போலப் பார்த்திருந்த மற்றவர்

---

12. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 56.

13. ஷை பக். 25.

களுக்கும் ஏற்பட்டு விட்டது. எனவே, பிற பதிப்பகத்தார் சிலரும் செய்கு தம்பியின் உதவியை நாடி வந்தனர். இதனால் அவர்க்குப் பொருள் வருவாயும் மிகுந்தது. இளமைக் கால வறுமை நிலையை மறந்து இனிதே வாழும் இன்ப நிலை இக்கால நிலையில் ஏற்பட்டது. தமக்குப் போக எஞ்சியதைப் பிறர்க்குத் தானமும் செய்யலாயினர்.

பாவலர்

நாயுடு தம் நிலையத்தில் அவருக்குச் சிறப்பான—உரிய இடத்தைக் கொடுத்துப் போற்றி வந்தார். நாளும் நாளும் நல்லறிஞர் பலர் வந்து அவரிடம் அளவளாவி மகிழ்வர். பலர் ஆங்காங்கே அழைத்துச் சென்று சொற்பொழிவு ஆற்றச் செய்து கேட்டு இன்புறுவர். நாயுடு சீறாப்புராணத்துக்கு உரை இயற்ற வேண்ட, அதனையும் செவ்வனே செய்து முடித்தார் செய்கு தம்பி. சில உரைநடை நூல்களையும் உருவாக்கினார். 'யதார்த்தவாதி', 'இஸ்லாமிய மித்திரன்' என்னும் இதழ் களையும் நடத்தினார். தம் பாவன்மையை வெளிப்படுத்தக் கிடைத்த வாய்ப்புகளையும் நன்குப் பயன்படுத்தினார். அப்பாவன்மையைக் கண்டு வியந்த பட்டணத்துச் சான்றோர்கள் 'பாவலர்' என்ற பட்டத்தைச் செய்கு தம்பியோடு ஒட்டச் செய் தனர். அன்று முதல் 'பாவலர்' என்றால் அது செய்கு தம்பிப் பாவலரையே குறிக்கும் பெயராயிற்று.

கதிர் வேலருக்கு எதிர்வேலர்

வடலூர் இராமலிங்க அடிகளின் பாடல் தொகுதியை அவர் தம் சீடர்கள் 'அருட்பா' எனப் போற்றி வருகையில் யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரின் மாணாக்கர்கள் 'அஃது அருட்பா அன்று; மருட்பாவே' என மறுத்தனர். இது தொடர் பாக இருதிறத்தார் பக்கம் நின்றும் எதிர் வாதங்கள் நடை பெற்றன. இருவேறு பட்ட அறிக்கைகளும் நூல்களும் வெளி வந்தன. அருட்பாக் கட்சியில் தொழுவூர் வேலாயுத முதலியார், கோ. வடிவேலுச் செட்டியார், மறைமலையடிகள் ஆகியோரும், (மருட்பா என வாதிடும்) எதிர்க் கட்சியில் கதிர் வேற்பிள்ளை, அவர் மாணாக்கரான திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்விரு சாரார் தம் சொற் போர்கள் சென்னை நகரத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளாக அக் காலத்தே இருந்தன.

புலவர் கூட்டத்தைப் பெரிதும் கவர்ந்து வந்த இந்நிகழ்ச்சி கள் பாவலரின் பண்பட்ட உள்ளத்தையும் பற்றியதில் வியப்

பில்லை. வாதத்திறன் வாய்க்கப் பெற்ற பாவலரும் சொற் போரில் பாய்ந்து விட்டார். அவரது நுழைவால் அருட்பாக் கட்சி ஆற்றலும் புதுத்தோற்றமும் பெற்றது. எதிரிகளின் சொற்களைக் கொண்டே தம் தருக்கவாதத்திறனால் மறுப்புரை கூறினார். இறுதியில் அருட்பாக் கட்சியே வெற்றியும் பெற்றது. பாவலரைக் 'கதிர்வேலருக்கு எதிர்வேலர்' எனப் போற்றினர். ''பாவலர் ஐயா அவர்கள் எங்கள் பேராசிரியர் மறைமலை அடிகளாருடன் நின்று, இராமலிங்க வள்ளலார் பாடல்கள் அனைத்தும் அருட்பாக்களே என்று தக்க ஆதாரங்களுடன் பேசி அருட்பாக் கட்சிக்கு வெற்றி தேடித்தந்தார்கள். அவருடைய பேச்சில் தர்க்க வாதத் திறமை நிறைந்திருந்ததாக அக்கால அறிஞர்கள் வியந்து பாராட்டியதை நான் பல முறைக் கேட்டிருக்கிறேன்'', என்கிறார் நாரண துரைக்கண்ணனார்.[14] ''திருவருட்பா 'எம்மதமும் சம்மதம்' எனக் கொள்ளும் சர்வ சமயப் பொது மறையாகும். அதனால் நாஞ்சில் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் அருட்பாக் கட்சியில் சேர்ந்து வள்ளலாரின் புகழ் பாடினார். எண்ணற்ற மேடைகளில் ஏறி, கதிர் வேலரின் வைதிக வாதங்களை மறுத்துப் பேசினார். அதனால் கதிர்வேலருக்கு எதிர் வேலர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார்'' என்கிறார் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்.[15]

அவதானப் பயிற்சி

மருட்பா மறுப்பால் பாவலர் புகழ் மேலும் பரவியது. புலவர்கூட்டம் அவரை மொய்க்கத் தொடங்கியது. தத்தம் அலுவல்களை மறந்து அவருடனேயே பொழுதைப் போக்கிய புலவர் பலர். அவரைவிட்டு நீங்காமல் உடனிருந்தவர்களுள் காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடு அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.[16]

ஒரு நாள் முதுகுளத்தூர் கலியாண சுந்தரம் பிள்ளை ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக் கூடத்திற்கு வந்திருந்தார். மாடியில் இருந்த பாவலரைச் சந்தித்து நீண்ட நேரமாக அளவளாவிக் கொண்டிருந்தவர், பேச்சினிடையே தமக்கு அவதானம் செய்யத் தெரியும் என்றும் கூறினார். அப்போது பாவலருக்கு,

---

14. ஷை பக். 71.
15. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (1964) பக். 417.
16. கம்பராமாயணத்துக்கு முதலில் உரையெழுதியவர் என்பர்.

''சேனையுடன் வஞ்சத் திருட்டும் மருட்டுமவ
தானப் புரட்டும் தனம்பறிக்க—மானிடர்க்குச்
செய்யுங் கபடமகாச் சித்திரிப்பும் ஆகாசப்
பொய்யுங் கலந்து புகட்டினாள்''

என்னும் விறலிவிடு தூதுப் பாடலடிகள் நினைவுக்கு வந்தன. இவ்வடிகளில் வேசி ஒருத்தி பெற்றெடுத்த பெண் குழந்தைக்குச் சேடி, சேனையுடன் புகட்டியவற்றுள் அவதானப் புரட்டும் ஒன்று என்பது குறிப்பிடப் படுகிறது. எனவே, பாவலரும் அவதானம் என்பதை ஒரு புரட்டு என்றே கருதினார். இதனால் பிள்ளையவர்களின் பேச்சைப் புறக்கணித்த வண்ணமிருந்தார். இதைக் குறிப்பால் அறிந்த பிள்ளை, பாவலரிடம் ''ஐயா, நான் கூறுவது பொய்யோ வீண் புரளியோ அல்ல; அஃதொருகலை; அக்கலையை என்னால் மெய்யாகவே செய்து காட்ட இயலும்'' என உறுதிபடக் கூறியதும், மறுநாள் பிற்பகல் 2 மணிக்குச் சோதித்து விடுவது என முடிவு செய்து கொண்டனர்.

மறுநாள் குறித்த நேரத்தில் பிள்ளையவர்கள் வந்தனர். பாவலர் தம்முடன் குப்புசாமி நாயுடு என்பவரையும் அழைத்துக் கொள்ள, மூவருமாக மாடிக்குச் சென்று கதவுகளைத் தாளிட்டுக் கொண்டனர். அவதானத்தில் ஒரு பகுதியான கண்டப் பத்திரிகைச் சோதனையை நடத்திட விரும்பிய பாவலர், ஒரு வெண்பாவை எழுதி அதன் ஒரு படியை நாயுடுவிடம் கொடுத்து விட்டு மற்றொரு படியைத் தாம் வைத்துக் கொண்டு அதன் எழுத்துக்களுக்கு எண் இட்டு, ஒவ்வோர் எழுத்தாகக் கண்டித்து எண்வரிசை பிறழச் செய்து, பின் ஒவ்வொன்றாகப் பிள்ளையவர்களிடம் கொடுத்தார். முதலில் முதுகை நெளித்தும் முகத்தைச் சுளித்தும் வாங்கிக்கொண்ட பிள்ளையவர்கள், போகப் போக ஒரே நிலையிலிருந்து வாங்கிக் கொண்டிருந்தார். 'சரி முடிந்தது' என்றார் பாவலர். பிழையறப் பாடலைக் கூறினர் பிள்ளை. பாவலருக்கும் நாயுடுவுக்கும் உண்டான வியப்புக்கு அளவில்லை. அவதானத்தின் அருமையை அறியாது முன்பு புறக்கணித்து விட்டமைக்கு வருத்தம் தெரிவித்துப் பிள்ளையின் திறனைப் பாராட்டினார் பாவலர்.

பாராட்டொலி சிறிது நின்ற போதுதான் தாளிடப் பட்டிருந்த கதவு தட்டப்படும் ஒலிகேட்டது. திறந்து பார்க்கும் போது முதலாளி நாயுடுவின் மைந்தர் நின்று கொண்டிருந்தார். 'நடந்தது என்ன?' எனக் கேட்டறிந்தவர், தாமும் அக்கலைத் திறனைக் கண்டுகளிக்க விரும்புவதாக விளம்பினார். அலுவலகத்துக் குமாஸ்தாக்களும் ஆவல் கொண்டனர். அவர்

களின் பேராவலைக் கண்ட பிள்ளையவர்கள் மீண்டுமொரு முறை செய்து காட்ட முன் வந்தார். இப்போது இரண்டு குமாஸ்தாக்கள் கண்டப் பத்திரிகை கொடுத்தனர். ஒருவர் ககரம் மிகுதியாய் வரும் நெடிய தொடர் ஒன்றினையும், மற்றவர் டகரம் மிகுதியாய் வரும் நெடிய தொடர் ஒன்றினையும் எழுதிக் கண்டித்துக் கொடுத்தனர். முன் போன்ற நெளிப்பு, சுளிப்பு எதுவும் இல்லாமலேயே வாங்கிக் கொண்ட பிள்ளையவர்கள், தொடர்கள் முடிந்ததும் 'சொல்லலாமா?' என்றார். அருகிலிருந்த பாவலர் 'நான் சொல்லட்டுமா?' என்றதும் பிள்ளை வியந்து 'நீங்களும் சொல்வீர்களா?' என்று கேட்டார். 'இதோ' என்று இருதொடர்களையும் இடையூறின்றிக் கூறி விட்டார் பாவலர். யாவரும் வியந்தனர்; பிள்ளையவர்கள் முகம் வியர்த்தனர். பாவலர் உடன் தானே, தாம் அவ்வாறு கூறியது தவறு என உணர்ந்து பிள்ளையவர்களைச் சமாதானப்படுத்தி அன்போடு அனுப்பி வைத்தார். அன்று முதல் பாவலர்க்கு அவதானக் கலையில் விருப்பம் மிகுந்தது. அன்றாடம் அலுவலகம் அடைபடுவதற்குச் சற்று முன்வரையுள்ள நேரம் எல்லாம் அவதானப் பயிற்சியிலேயே கழிந்தது. பாவலரும் நாளுக்கு நாள் அப்பயிற்சியில் முன்னேற்றம் கண்டு வந்தார்.

சோடசாவதானி

தம் பெற்றோரையும் உற்றார் உறவினரையும் பிற்றைநிலை முனியாது கற்ற கல்வியை உவந்தளித்த உபாத்தியாயரையும் கண்டு மகிழும் விருப்பம் பாவலர்க்கு உண்டானது. எனவே, 1906 ஆம் ஆண்டில் கோட்டாற்றை அடைந்தார். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தம் ஆசிரியப் பெருந்தகையைக் கண்டதும் கழிபேருவகை கொண்டு மெய்யாரத் தழுவிச் சென்னை நிகழ்ச்சிகளைச் செவ்வனே எடுத்துரைத்தார். எழுபது வயதுக் கிழவராகியிருந்த சங்கர நாராயணர் அப்போது பாக்கியம் பண்டாரம் அவர்களின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்து வந்தார். தம் மாணாக்கரின் வளர்ச்சிநிலை கண்டு சான்றோன் எனக் கேட்ட தாயெனத் தருக்குற்றார் சங்கரர். தாம் அவதானக் கலையிலும் பயிற்சி பெற்றிருப்பதாகப் பாவலர் பகர்ந்ததும் ஆசிரியரின் மகிழ்ச்சிக்கு அளவு இல்லை. உடனிருந்து கேட்டவர்கள் அவ்வுயர்கலையை நிகழச்செய்து உவப்புடன் கண்டுகளிக்க விரும்பி, பாவலரைச் சின்னாட்கள் கோட்டாற்றிலேயே தங்குமாறு வேண்டினர். பாவலரும் இசைந்தார்.

அக்காலையில், ஆற்றக்கோயா எனப்படும் செய்யிது முகம்மது அபூபக்கருல் ஐதுரூஸ் தங்கள் அவர்கள் தம்

சீடர்களைக் காணும் பொருட்டுக் கொச்சியிலிருந்து கோட்டாற்றுக்கு வருகை தந்திருந்தார்கள். அவர்களிடம் அளவளாவியிருந்த மக்கள் பாவலரின் சிறப்பியல்புகளைப் பற்றியும் குறிப்பிட நேர்ந்தது. அச்சிறப்புக்களுள் அவதானம் பற்றிக் கூறியதும், ஆற்றக்கோயா தங்களவர்களும் பாவலரை அழைத்து அருகிருத்தி நலன் விசாரித்து அவரது அவதான அறிவு பற்றியும் உசாவித் தெரிந்து கொண்டார்கள். சூழ்ந்திருந்த மக்கள் அரங்கொன்றமைத்து அவதானக் கலை நிகழச் செய்து காண வேண்டுமென விரும்பவே பாவலரும் உடன்பட்டார். தங்களவர்களை அவ்வரங்கினுக்குத் தலைமை வகிக்க வேண்டினர். பதினாறு அவதான உறுப்புக்களைக் கொண்ட சோடசாவதானம் செய்வதென முடிவுசெய்யப்பட்டது.

கோட்டாறு அரிப்புத் தெருவிலுள்ள மாலிக்தீனார் பள்ளி வாயிலின் முன்னே பெரிய பந்தல் அமைக்கப் பட்டது. அறிஞர் கள் பலர் கூடினர். அவர்களுக்குள்ளே பாக்கியம் பண்டாரம், வேலாயுத முதலியார், மீனாட்சிநாயுடு, செய்யிது தாகா சாகிபு, சங்கர நாராயண உபாத்தியாயர், குறுந்தெரு சங்கர நாராயண பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இறைநாம உச்சரிப்பு, கைப்பணி, தலைவரோடு உரையாடல், சுவைப்புலனறிவு, இலக்கியம், இலக்கணம், வெண்பா இருபால் கேட்டுக் கூறுதல், கண்டப் பத்திரிகை, கவிபாடல், ஒலிவேறுபாடு உணர்தல், நெல் எறிதல், கல் எறிதல், கண்டத் தொகை, கிழமை கூறுதல், நூறு சொல்லுதல், சீட்டாடல் என்னும் பதினாறு (சோடச) அங்கங்களைக் கொண்ட சோடச அவதானம் ஆற்றக் கோயா தங்களின் அருந் தலைமையில் ஆரம்பமாயிற்று. சோதனை செய்வோர் இருமருங் கிலும் எண்மர் வீதம் இருக்கை கொண்டனர்.

தலைவரின் தகவு சான்ற முன்னுரைக்குப் பின், பாவலர் எழுந்து அவதானத்தின் அருமை பெருமைகளை அவையோருக்கு எடுத்துக் கூறித்தாம் செய்யப் போகும் சோடசாவதானத்தின் முறைமையினை வரிசைப் படுத்திப் பின்னர்,

''வாயொன்று சொல்லவும் கையொன்று செய்யவும்
வாய்த்ததமிழ்
ஆயென்ற போதத னேர்விடை கூறவும் ஆசினிக்கு
ஈயென்ற சொல்லை யிணைக்கலம் இட்டிசை
யின்னவையோ
டேயென்ற ஆறும் அவதானம் செய்பவர்க்
கியைந்தவையே''

என்னும் கட்டளைக் கலித்துறைப் பாடலைக் கூறிமுடித்துக் கொண்டு அவதானம் செய்ய ஆயத்தமானார். **'மெய்ஞ்ஞான நாதா, மெய்ஞ்ஞான நாதா'** என முணு முணுத்த வண்ணம் கையில் இலாடச் சங்கிலியுடன் மேடைமீது உலாவினார்.

முதலில் பாவலரின் ஆசிரியப் பெருந்தகை சங்கர நாராயண உபாத்தியாயர் 'அகத்தின் பெருமை புறத்தினும் போகி யகன்றதுவே' என்னும் ஈற்றடியைக் கொடுத்துக் கட்டளைக் கலித்துறைப் பாடலொன்றைப் பாடுமாறு கட்டளையிட்டார். அடுத்து, குறுந்தெரு சங்கர நாராயணப் பிள்ளையவர்கள், ''கரத்திற்கு மூவிரண்டு கால்' என்னும் ஈற்றடிக்கு வெண்பா இயற்ற வேண்டினார். நாஞ்சில் நாட்டினரால் பெரும் புலவராக மதிக்கப்பட்ட தாழைக்குடிப் பிள்ளையவர்கள், திருக்குறளிலுள்ள 26 எழுத்துக்கள் அடங்கிய பாடல் ஒன்றைக் கண்டித்து எழுத்துக் களின் வரிசை பிறழுமாறு செய்து கண்டப்பத்திரிகை கொடுத்தார்.

இலக்கிய இலக்கண வினாக்களும் இடையிடையே கேட்கப் பட்டன. பிற சோதனைகளும் நடந்தன. கண்டப் பத்திரிகை யாளருக்கு,

''அஞ்சிற்கொள் வாசகமொன் றுண்டே யருமறையில்
நெஞ்சிற் கொள் வீரதனை நேர்ந்து''

என்று மறுமொழி பகர்ந்தார் பாவலர். கொடுத்த எழுத்துக் களோடு இப்பாடல் பொருந்தாமை கண்டு பிள்ளையவர்கள் குறுக்கிட்டார். பாவலர் நகைத்த வண்ணம் இப்பாடலின் பதவுரை கூறி விளக்கி, இதனால் அறியப்படும் குறட்பா,

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''[17]

என்பதாகும் என எடுத்துரைத்து, இக்குறட்பாவின் இன்னொரு நயத்தையும் பெற வைத்தார். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' எனபதை வன்மையாக வற்புறுத்தவே வள்ளுவர், ஐந்து வல்லின எழுத்துக்களைக் கொண்ட இக்குறட்பாவினை இயற்றியுள்ளார் என்பதாகும் அது. இதனைக் கேட்ட அவையினர் பெருவியப் பெய்தினர்.

இனி, கொடுக்கப்பட்ட ஈற்றடிகளுக்கு முறையே,

''அகத்திற் சுகத்தை யடையாமல் வாழும் அசடர்களைச்
சகத்திற் கொருமுக மாகித் தகவினில் தங்கியிரு

17. திருக்குறள் - 391.

நகத்திற் கறிவுரை நல்கும் முகம்மது நன்னபிநா
யகத்தின் பெருமை புறத்தினும் போகி யகன்றதுவே"

என்னும் கட்டளைக் கலித்துறைப் பாடலையும்,

"தம்பிக்குச் சொன்ன சமிக்ஞைக்குச் சார்விடைஎண்
பம்பிப் படர்கற் பகத்தரும்பூங் — கொம்பின்
சிரத்தி லிருந்து தெளிதேனுண் ணுமது
கரத்திற்கு மூவிரண்டு கால்"

என்னும் வெண்பாவினையும் கூறினார். சோதனையாளரில் ஒருவர்,

"இத்தனையும் சொல்லி யிருக்கும் சபையிலுனை
வித்தகன் என்றே விளம்பிடினும்—சித்தம்
ஒருங்கிப் பெறுமுன்னர் ஓங்கிடுமோ ஈசன்
மருங்கிற் பெறுமின்பம் வாய்த்து"

என்னும் புதிய வெண்பாவை இருமுறை கூற அதை மனத்தில் வாங்கிக் கொண்டு, அப்பாடலைக் கூறி விளக்கமும் தந்தார்.

இவ்வாறாகத் தம் உள்ளம், உரை, செயல் என்னும் மூன்றிலும் எவ்விதக் குழப்பமும் இன்றித் தம் திறமையை வெளிப்படுத்திய பாவலருக்கு அவைத் தலைவர் 'சோடசாவதானி' என்னும் பட்டத்தை வழங்கிப் பொன்னாடையும்போர்த்தினார். அவையோர் ஏராளமான ஆடைகளை அணிவித்துத் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

சதாவதானி

நாட்கள் சில நகர்ந்தன. தம் கடமை அழைக்கவே, சென்னை திரும்பினார் செய்கு தம்பிப் பாவலர். சென்னையைச் சேரு முன்னரே சோடசாவதானம் செய்து பெற்ற புகழ் மாநகரெங்கும் பரவி விட்டது. எனவே, அவரை வரவேற்க ஒரு பெருங் கூட்டம் காத்திருந்தது. சென்னையிலும் அத்திறனைக் காட்ட வேண்டு மென்ற அன்பர்களின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தார் அவதானப் புலவர். உடன் தானே அறிக்கை எழுதப்பட்டது. அச்சிடுவதற்காக அளித்திடும் தருணம் அங்கே வந்து சேர்ந்த மகாவித்துவான் இராமசுவாமி நாயுடு அவர்கள், சோட சாவதானம் செய்தோர் பலர் உள்ளனர் என்றும், முன்பு பச்சை யப்பன் கல்லூரி அரங்கில் சுப்பராய முதலியார் அவர்கள் சோட சாவதானம் செய்து காட்டியதைத் தாமே பார்த்துள்ளதாகவும் பகர்ந்து, இப்போது சதாவதானம் செய்வதே சிறப்புத் தருவ

தாகும் என்றும் செப்பினார். அச்சக முதலாளி நாயுடவர்களும் அருந்திறலார் பாவலரை அணுகி,'ஐயா,தாங்கள் சதாவதானமே செய்திட வேண்டும்' எனச் சாதித்தார். 'நூறு பொருள் எவை எவை என அறிந்து கொள்ள நூலெதுவும் இல்லையே' என்றார் பாவலர். 'அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்; என்னிடம் கையெழுத்துப்படி ஒன்றுளது' என்றார் இராமசுவாமிநாயுடு. 'அப்படியென்றால் அறிக்கையில் சோடசாவதானம் என்றிருப் பதைச் சதாவதானம் என்று திருத்தி அச்சிடுங்கள்' என்றார் பாவலர். அனைவரும் அகமகிழ்ந்தனர்.

தமிழகமெங்கணும் அறிக்கை பறந்தது. உண்மையிலேயே நூறு அவதானம் நடைபெறப் போகிறதா? என்ற ஐயம் நாலா திசைகளிலும் எழுந்தது. சிலர் கடிதங்கள் மூலமாகத் தத்தம் வியப்பை வெளிப்படுத்தினர். தந்திகளும் வந்து குவிந்தன.

1907-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10-ஆம் நாள் சென்னை விக்டோரியா மண்டபத்தில் அவதானம் தொடங்கிற்று. வித்துவான் கண்ணபிரான் முதலியார் தலைமை தாங்கினார். அங்குக் குழுமிய மக்கள் வெள்ளத்தினிடையே காஞ்சி மகாவித்து வான் இராமசாமி நாயுடு, தஞ்சை சதாவதானி சுப்பிரமணிய ஐயர், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திருவேங்கடசாமி நாயுடு, புலவர் க. நமச்சிவாய முதலியார், 'இந்து', 'சுதேசமித்திரன்' ஆகிய செய்தி ஏடுகளின் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், திரு. வி. கலியாண சுந்தர முதலியார், அக்காலையில் சட்டக் கல்லூரி மாணவராயிருந்த டி. கே. சிதம்பரநாத முதலியார், தமிழறியாத ஐரோப்பிய நீதிபதி ஒருவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாவலர் செய்ய முன்வந்த சதாவதானம் தொகையால் இருபத்தைந்தும் வகையால் நூறும் ஆகும். முன்பு சோட சாவதானத்தில் கண்ட பதினாறுடன் ஒலி எண்ணம், தொகை கூறல், உடு கூறல், நாள் கூறல், திங்கள் கூறல், ஆண்டு கூறல், வயது கூறல், நினைத்த எண் கூறல், பதினைந்து நாயும் புலியும் விளையாடல் என்னும் ஒன்பதும் சேர வரும் இருபத்தைந்தும் நான்கு வகைப்பட நூறு அங்கங்களாகின்றன.

தூய வெள்ளாடை அணிந்து கையில் இலாடச் சங்கிலியுடன் மேடையில் தோன்றிய பாவலர், 'மெய்ஞ்ஞான நாதா, மெய்ஞ் ஞான நாதா' என முணுமுணுத்தவாறு உலாவினார். சோதனை முறைப்படித் தொடங்கிற்று. முதலில் ஜி. சுப்பிரமணிய ஐயர் சிலேடையாகக் கடவுள் வணக்கப் பாடல் ஒன்றைப் பாட வேண்டினார். உடன் தானே பாவலர்,

''சிரமா றுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்''

என்னும் பாடலைப் பாடி விளக்கமும் விவரித்தார். உடனே புலவர் ஒருவர் எழுந்து, 'விராடனையே பெண் ணெலாமே' என்னும் ஈற்றடிக்கு வெண்பா ஒன்று பாட வேண்டினார். அதனைச் செவியில் வாங்கிக் கொண்டு நடக்கையில் மற்றொரு புலவர், 'மாமனுக்குக் கந்தன் மகன்' என்னும் ஈற்றடிக்கு வெண்பா இயற்ற வேண்டினார். இதையும் செவி மடுத்துச் செல்கையில் இன்னொரு புலவர் எழுந்து, 'கண்கெட்ட பின் என்றும் காணாத காட்சியைக் கண்டனரே' என்னும் ஈற்றடிக்குக் கட்டளைக் கலித்துறைப் பாவியற்றப் பணித்தார். அவற்றுக்கு முறையே,

''உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதுமொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னாய்—மண்ணில்
வராடவனை யேதெய்வ மன்னனெனும் சொற்ற
விராடனையே பெண்ணெனலாமே''

''அண்டர் முறையால் அலைகடலில் பள்ளிகொண்ட
கொண்டல்வண்ண மேனிக் குரிசிலாம்—விண்டுபெற்ற
காமனுக்கு முற்றும் கருதும் படியமைந்த
மாமனுக்குக் கந்தன் மகன்''

என்னும் வெண்பாக்களையும்,

''விண்தொட் டசையும் தருமலி கானில் மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும்
பரமன்விழி
புண்பட்ட தென்றுதம் கண்ணைப் பெயர்த்துப்
பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக்
கண்டனரே''

என்னும் கட்டளைக் கலித்துறைப் பாடலையும் பாடினார் பாவலர். இடையில் டி. கே. சி. கொடுத்திருந்த கண்டப் பத்திரிகைக்கும் மறுமொழி கொடுத்து விட்டார்.

மற்றும் இலக்கிய இலக்கண வினாக்களுக்கு விடை பகர்தல், புதிய வெண்பாக்களைக் கூறக் கேட்டுத் திருப்பிக் கூறுதல், உடுநாள்-பிறந்த நாள்-வயது கூறுதல், நினைத்த எண்ணைக்

கூறுதல் போன்ற இன்னோரன்ன சோதனைகள் அனைத்திலும் சாதனை நிறுவினார். கூடியிருந்த மக்கள் குதூகலித்தனர். பலர் பொன்னாடைகளைப் போர்த்திப் போற்றினர். இட்டா பார்த்த சாரதி நாயுடவர்கள், கைகளில் தங்கத் தோடாக்களிட்டு ஒளி யேற்றினர். அவைத் தலைவரவர்கள் பாராட்டுரையினை ஆற்றிச் 'சதாவதானி', 'மகாமதி' என்னும் பட்டங்களைச் சூட்டினர். அவையினர் 'மகாமதி சதாவாதனி செய்கு தம்பிப் பாவலர் வாழ்க' என வாழ்த்தினர். வெள்ளைக்கார நீதிபதி யவர்கள் வியந்தனர்.

திருமணம்

அவ்வாண்டின் இறுதியிலேயே பாவலர்க்குத் திருமணம் உறுதி செய்யப் பட்டது. அப்போது அவருக்கு வயது முப்பத்து மூன்று. கோட்டாறு சென்று பதினைந்து வயதுடைய முகம்மது பாத்திமா பீவியை மணம் புரிந்து விட்டு ஒரு திங்களிலேயே மீண்டும் சென்னைக்குத் திரும்பினார்.

தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்

அவதானத்தின் மூலம் புகழ் மிகப் பெற்று விட்ட பாவலரின் அருந்தமிழ்ச் சொற் பெருக்கை அடிக்கடிக் கேட்பதில் சென்னை மாநகர மக்கள் பெரிதும் அவாவுற்றனர். நகரிலும் சுற்றுப் புறங்களிலுமுள்ள மூலை முடுக்குகளிலெல்லாம் பாவலரின் சொன்மாரியில் நனைந்து திளைக்க மக்கள் திரளாகக் கூடினர். தர்க்கவாத முறையில் அமைந்த அவரது பேச்சைக் கேட்பவர்கள் தம் அலுவல்களையும் மறந்து விடுவர். அன்னோர் தம் ஆர்வத்தை வெளிப்படுத்தும் விதத்தில் பாவலர்க்குத் '**தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்**' என்ற பட்டத்தையும் ஈந்து மகிழ்ந்தனர்.

கோட்டாற்றில் குடும்ப வாழ்க்கை

பாவலர்க்கு இளமையில் நச்சுக் கடியினால் ஏற்பட்ட ஒரு வியாதி நாளடைவில் தோலில் பரவித் தொல்லை தரத் தொடங் கியது. இதனால் தொடர்ந்து சென்னையில் இருக்க விரும்பாத நிலையில் 1909 இல் கோட்டாற்றுக்குத் திரும்பி விட்டார். இல்வாழ்க்கையில் ஈடுபட்டார். நாளடைவில் சில பிள்ளை களுக்குத் தந்தையானார். தம் குடும்பச் செலவைச் சரிக்கட்ட ஏதேனும் தொழில் புரிந்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இதனால் நூல் வாணிகம் செய்தார். எனினும், தமிழார்வம் கொண்டோர் பலர் அவரது புலமை வெள்ளத்தைப் புசித்து தாகம் தணிய, நாளும் நாடி வந்தனர். அவரிடம் வந்து

படாம் கேட்டுச் சென்றனர் பலர். அவரோடு உரையாடி உவகைப் பெருக்கோடு சென்றனர் பலர். தாம் படைத்த நூல்களைக் காட்டிப் பாயிரம் பெற்றுச் சென்றனர் பலர். இவ்வாறாக, இல்வாழ்க்கை நடத்திய காலமும் இலக்கிய வாழ்க்கையிலேயே கழிந்தது.

பாவலரிடம் பாடம் கேட்டுப் புலமை பெற்றவர்களுள் பண்டித வித்துவான் சாத்தாங்குட்டிப் பிள்ளை, சுசீந்திரம் தசாவதானி ஆறுமுகம் பிள்ளை, தேரூர் வித்துவான் உ. சிதம்பரம் பிள்ளை, பறக்கைப் புலவர் மாணிக்கவாசகம் பிள்ளை, கோட்டாற்று வித்துவான் அ. மாடசுவாமி, இடலாக்குடி உடையார் பிள்ளை. பி. ஏ., ஆளூர்ச் சிதம்பரக் குற்றாலம் பிள்ளை, கோட்டாற்று சரவணப் பெருமாள் ஆசாரி, கோட்டாற்று கிருட்டிண பிள்ளை, ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இன்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புகழ் பெற்று விளங்கும் தமிழறிஞர் பலரும் பாவலரிடமிருந்தோ, அவர் தம் மாணாக்கர் எவரிடமிருந்தோ ஏதேனுமொரு விதத்தில் பாடங் கேட்டுப் பக்குவமடைந்தவர்களாகவே உள்ளனர் என்றால் அது வெறும் புகழ்ச்சியல்ல. ''பாவலர் அவர்களுடைய காலத்திலிருந்துதான் நாஞ்சில் நாட்டில் தமிழ்க் கல்வி பெருகி வளர்ந்து நறுமணம் வீசிக் கொண்டிருக்கின்றது'' என்கிறார் சாத்தாங் குட்டிப் பிள்ளையவர்கள். ''பாவலர் அவர்களைத் தற்போது நாஞ்சில் நாட்டில் உள்ள தமிழறிஞர் பரம்பரையின் தந்தை என்று கூறினால் அதில் உயர்வு நவிற்சி சிறிதும் இல்லை'' என்கிறார் வித்துவான் எஸ். ஆறுமுகம், எம். ஏ., எல். டி.[18] ''இன்று தமிழ் நாட்டில் இலங்கும் பல புலவர்களுக்குக் 'கோவில் விளக்காய்' விளங்கியவர் நம் பாவலரவர்கள்'' என்கிறார் சைவப் புலவர் வித்துவான் சி. குமரேச பிள்ளை.[19]

தேசியத் தொண்டர்

1920 ஆம் ஆண்டை ஒட்டிய காலத்தில் நாஞ்சில் நன்னாட்டில் காங்கிரஸ் இயக்கம் தோன்றியது. அவ்வியக்கத்தின் மூலவராக விளங்கியவர் டாக்டர் எம். இ. நாயுடு அவர்கள். அஞ்சா நெஞ்சம் கொண்ட அம்மாவீரரின் வலது கையாக விளங்கியவர் பாவலர். தூய கதராடையும் காந்திக் குல்லாயும் அணிந்து

---

18. சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் நினைவு மலர் (1911) பக். 92.

19. அவதானக் கலைஞர் (1968) — பக். 52.

திகழ்ந்த பாவலரின் சொல்லாற்றல் காங்கிரஸ் இயக்கத்துக்குப் பெரிதும் வலுவூட்டியது. அந்நாளில் நாஞ்சில் நாட்டில் பெரும் பான்மையான காங்கிரஸ் கூட்டங்கள் பாவலரின் சீரிய தலைமை யிலேயே நடைபெற்றன. ''ஆங்கில ஆட்சியை எதிர்த்துக் கடுமையான தாக்குதல்களைக் கேட்போர் கொதித்தெழுமாறு வாரி வழங்குவதில் அவர்கள் சற்றும் அஞ்சியதில்லை'' என்கிறார் வித்துவான் எஸ். ஆறுமுகம், எம். ஏ., எல். டி.,[20] ''நாஞ்சில் நாட்டில் தேசியப் போராட்டத்திற்கு வித்திட்ட ஒரு சில தலைவர்களுள் பாவலர் அவர்கள் சிறந்த இடம் பெறுகின் றார்'' என்கிறார் திருமதி நமச்சிவாயம் அம்மாள்.[21] ''தென் இந்தியாவில் மற்ற மாவட்டங்களை விட நாஞ்சில் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் அன்று வலுவுற்று இருந்தது என்றால் அதற்கு அவர்கள் பேச்சு ஒரு முக்கிய காரணம் எனலாம்'' என்கிறார் தேசியப் போராட்ட வீரர்களுள் ஒருவரான டாக்டர் எஸ். முத்துக் கறுப்ப பிள்ளை.[22] ''...... சிறுவனாகிய நான் முதன் முதற்கேட்ட அரசியல் சொற்பொழிவு மகாமதி செய்கு தம்பிப் பாவலருடையதே. சொற்பொழிவென்றால் போதாது; 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' என்ற பட்டம் அவர் களுக்கு முற்றிலும் பொருந்தும்; அவர்களுக்கே பொருந்தும். என் இளமை உள்ளத்தில் அன்றே நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் நட்டுச் சென்றார்'' என்கிறார் பொருளியல் நிபுணர் டாக்டர் பா. நடராசன்.[23] ''1937 இல் காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொண்ட போது பல்வேறு இடங்களிலும் சென்று பிரச்சாரம் செய்து காங்கிரசுக்கு வெற்றியைத் தேடித் தந்தவர் பாவலர்'' என்கிறார் வித்துவான் செ. சதாசிவம்.[24] இவ்வாறாப் பலரும் குறிப்பிடுமளவுக்குப் பாவலரின் தேசியத் தொண்டு ஏற்றமும் எடுப்பும் பெற்று விளங்கியுள்ளது. எனினும் பிற தேசியத் தொண்டர்களோடு-தேசியக் கவிஞர்களோடு வைத் தெண்ணி, நினைவுகூரப்படாமல் அவர் விடப்படுவதற்குக் காரணம் எதுவோ?

நிறைவு

நாட்டுப் பணியும் நற்றமிழ்ப் பணியும் நனி சிறக்க நடை பெற்ற மகாமதியாரின் மாண்புறு பயணம் அன்னாரின் எழுபத்

20. சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 9).
21. ஷை பக் — 117.
22. ஷை — பக். 127.
23. ஷை — பக். 13.
24. ஷை — பக். 44.

தாறாவது வயதில் நிறைவு பெற்றது. முன்பே நச்சுக் கடியால் நைவுற்ற உடல், முதுமையால் முழுமையாகப் பாதிப்புற்றுச் செயல் இழக்க, 1950 ஆம் ஆண்டு பிப்ருவரித் திங்கள் 13ஆம் நாளில் அவர் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்ள வேண்டிய தாயிற்று. அத்துயரச் செய்தி தமிழ் கூறு நல்லுலகத்தையே அதிர்ச்சியுறச் செய்தது. கவிமணி அவர்கள் கண் கலங்கிய வராய்,

''ஒரு மவதானம் ஒருநூறு செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச்—சீரிய
செந்தமிழ்ச் செல்வனைச் செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி''

எனக் கூறிக் கதறிய பாடல் என்றும் நினைவு கொள்ளத் தக்க தாகும்.

''நாஞ்சில் நாட்டில் இவர் போல் இலக்கண நுட்பமுடை யாரும் இல்லை; இவர் போல் சொற்பொழிவாற்றுவாரும் இல்லை; இவர் போல் குறள், கம்பராமாயணம், சீறாப்புராணம் முதலியவற்றுக்கு உரை கூறுவாறும் இல்லை; நினைவாற்றல் படைத்தாரும் இல்லை'' என்று டாக்டர் சி. சுப்பிர மணியனார்,[25] பாவலர் பற்றிக் கூறும் கூற்றுப் பொன்னெழுத் துக்களால் பொறிக்கத் தக்கதாகும்.

''அன்னார், பல நூற்றாண்டுகட்கு ஒருமுறை எங்கோ அரிதிற் றோன்றுகின்ற மேதைகளுள் ஒருவர். தமிழ் நாட்டிலே முஸ்லிம் மதத்தவராகப் பிறந்தமைக்கு மாறாக அவர்கள் ஆங்கில நாட்டிலே தோன்றி ஆங்கிலப் புலவராய் மிளிர்ந்திருப்பின் அவர்கள் பால் இருந்த அரிய பேராற்றல் அவர்கட்கு உலகப் புகழையும் நோபல் பரிசையும் பெற்றுத் தந்திருக்கும் என்பதில், சற்றேனும் ஐயமில்லை'' என்று வித்துவான் எஸ். ஆறுமுகம், எம். ஏ., எல். டி.[26] அவர்கள் கூறும் சொற்கள் ஆழ்ந்து சிந்திக் கத்தக்கன.

---

25. ஷை — பக். 70
26. ஷை — பக். 89

விற்பனம்

கலைக்கருந்தனம் பெறவிழைந்த குமரகுருபரர், கல்விப் பெருஞ் செல்வப் பேறாகிய சகலகலா வல்லியிடம்,

''சொல்விற் பனமும் அவதான முங்கல்வ சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்''[27]

என வேண்டுதல் புரிகின்றார். இத்தகைய வேண்டுதல் எதுவு மின்றியே இறையருளால் அம்மூன்றிலும் முழுவல்லமை பெற்று வளங்கினார் மகாமதிப் பாவலர். அவற்றுள்ளே அவதானமும் கல்வி சொல்லவல்ல நல்வத்தையும் கைவரப்பெற்ற சிறப்பினைப் 'பயணம்' ஒருவாறு பகர்ந்தது. சொல்விற்பனத் திறப் பாட்டினை இவ்விற்பனம் விளம்பும்.

திரு. சோமு அவர்கள் 1961-இல் எழுதிய கட்டுரை யொன்றில், ''சதாவதானம் செய்கு தம்பிப் பாவலர் என்றால் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டத் தில் ஒரே சிம்ம சொப்பனந்தான்''[28] என்று குறிப்பிட்டார். அவர் குறிப்பிடுவது பாவலரின் துளக்கலாகாச் சொல்விற்பனத் தைத்தான் என்பது சொல்லாமலேயே விளங்கும். பாவலர் தம் வாழ்நாளில் ஆற்றிய சொற்பொழிவுகள், உழுவலன்பர் களோடு நடத்திய உரையாடல்கள், மற்றும் இலக்கிய இலக்கண வளக்கங்கள் போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகளில் அவரது சொல்விற்பனம் சுடர்விட்டுத் தெறிப்பதைக் காணலாம்.

---

27. சகலகலா வல்லி மாலை — 8
28. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 114

''கம்பன் காவியத்தை நயம்பட விளக்கும் பழைய தலைமுறைப் பெரியார்களுள் நம் காலத்து வாழ்ந்தவர் பாவலர் ஒருவர் தாம்'' எனத் திரு. வி. க அவர்கள் செப்பியதாகச் சாத்தாங்குட்டிப் பிள்ளையவர்கள் சாற்றுகின்றார்கள்.[29] ''இலக்கணம், தருக்கம் இவற்றை முன்னிறுத்தி அவர் புத்துரையோ மறுப்புரையோ கூறும்போது அவர் மாமேதை பொலிவுற்றுத் திகழ்வதைக் காண்போம்'' என வித்துவான் செ. சதாசிவம் அவர்கள் விளம்புகின்றார்கள்.[30] ''அவருடைய பேச்சில் தர்க்கவாதத் திறமை நிறைந்திருந்ததாக அக்கால அறிஞர்கள் வியந்து பாராட்டியதை நான் பலமுறை கேட்டிருகின்றேன்'' என்கிறார் திரு. நாரணதுரைக் கண்ணனார்.[31] ''இராமாயணத்தில் வாலி தன்னை எதிர்ப்போரின் பலத்தில் பாதியைப் பெறும் வரம் பெற்றிருந்தான். பாவலர் அவர்களும் அத்தகைய வரம் பெற்றிருந்தார்கள் என்னலாம். எதிர்ப்பு மிகுந்தோறும் அவர்களது ஆற்றலும் மிகுந்து பெருகுதலை அவர்களது சொற் போர்களின் கண் காணலாம்'' என்கிறார் வித்துவான் எஸ். ஆறுமுகம் அவர்கள்.[32] ''பல சொற்களில் பிறர் கூறும் விடைகளைச் சில சொற்களில் அமைத்து ஆழ்ந்த பொருள் விளங்கக் கூறும் திறப்பாடு பாவலர் பெருந்தகையிடத்து இயல்பாகவே மிளிர்ந்தது'' என்கிறார் கவிராச பண்டிதர் இராம. சுப்பிரமணிய நாவலர்.[33] ''நகைச்சுவை ஒரு நல்ல கலை; பாவலர் இக்கலைக்கு ஓர் எல்லை'' என்கிறார் திரு. ம. பி. செயிக்.[34] இவர்களெல்லாம் இயம்பும் கூற்று எந்த அளவுக்கு உண்மையானவை என்பதை இந்நிகழ்ச்சிக் கோவை நிறுத்துக் காட்டும்.

ஆபாச தர்ப்பணம்.

அருட்பாவை மருட்பா என இழித்துரைத்து வந்த கூட்டத்தாருள் ஒருவர், ''இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு'' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அடிகளாரின் பாடல்களின் கண்ணேயுள்ள ஆபாசங்களை விளக்கிக் காட்டும் கண்ணாடி என்ற பொருளில் இவ்வாறு

29. ஷை — பக். 26
30. ஷை — பக். 46
31. ஷை — பக். 71
32. ஷை — பக். 90
33. ஷை — பக். 98, 99
34. ஷை — பக். 156

தலைப்பிட்டிருந்தார். இத்தலைப்பை எடுத்து வைத்துக் கொண்டு பாவலர் தம் கருத்தைக் கூறி விளக்கினார்.

''அடிகளாரின் பாடல்கள் ஆபாசம் நிறைந்தவை என்றும் அவ்வாபாசங்களை விளக்கிக் காட்டும் கண்ணாடி இந்நூல் என்றும் இதனை எழுதியவர் கருதியிருந்தால், 'இராமலிங்கம் பிள்ளை பாடலின் ஆபாச தர்ப்பணம்' என்று பெயர் அமைத் திருக்க வேண்டும். அவ்வாறு அமைக்காத காரணத்தால் அப்பெயரமைப்பே எமக்கு ஆதரவளிப்பதாக உள்ளது. அத்தொடர் 'இராமலிங்கம் பிள்ளை பாடல், ஆ, பாச தர்ப்பணம் என்றும் 'இராமலிங்கம் பிள்ளை பாடலா? பாச தர்ப்பணம்' என்றும் இருவகையாகப் பிரிவு பட்டு முறையே, 'அடிகளாரின் பாடல்கள் பாச இயல்பைக் காட்டும் கண்ணாடியாயுள்ளன'' என்றும், ''அடிகளாரின் பாடல்களையா சொல்கிறீர்கள்; அவை பாசத்தை விளக்கிக் காட்டும் கண்ணாடியல்லவா?'' என்றும் பொருள் கொள்ளுமாறு அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

இரண்டாவதாக, 'இராமலிங்கம் பிள்ளை பாடல்கள் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு' எனப் பெயரிட்டி ருக்கின்றார் இந்நூலாசிரியர். 'அல்லது' என்னும் இடைச் சொல் விளக்கப் பொருளிலும் உறழ்ச்சிப் பொருளிலும் வருவது. இங்கே, உறழ்ச்சிப் பொருளில் அன்றி, விளக்கப் பொருள் வருமாறு அமைக்கப் பட்டிருப்பதாகவே தெரிகிறது. அப்படி யெனில், கரதலாமலகம் அல்லது உள்ளங்கை நெல்லிக்கனி என்றாற் போல 'அருட்பா ஆபாச தர்ப்பணம்' என்னும் முன்ன தற்கு 'மருட்பா மறுப்பு என்னும் பின்னது விளக்கமாகுமா? இல்லையே. எனவே, பெயரமைப்பு பிழையுடையது என்பது தெளிவாகிறது. அன்றியும், 'மருட்பா மறுப்பு' என்றால், அருட்பாவினைத் துணிவது தானே. எனவே, அருட்பாவினை ஒப்புக் கொண்டு விட்டதாகத் தானே பொருள்! அடிகளாரின் அருள் திறம் தான் அவரை அவ்வாறு தலைப்பிடச் செய்ததுபோலும்.

மூன்றாவதாக, 'தர்ப்பணம்' என்று எழுதுவது தமிழ் இலக்கண வழக்கிற்கு மாறுபட்டது. 'ரழ தனிக் குறிலணையா' என்ற விதிப்படி ரகர ழகர ஒற்றுக்கள் தனிக்குறிலை அடுத்து வாரா. 'தர்ப்பணம்' என்பதில் 'த' என்ற தனிக் குறிலை அடுத்து 'ர்' என்னும் ரகர ஒற்று வந்துள்ளது. இவ்வாறு வருவது இலக்கணப் பிழையல்லவா?பெயரமைப்பிலேயே இலக்கணப்பிழை வரச் செய்த ஆசிரியர் எழுதிய நூல் முழுவதிலும் இலக்கணப் பிழையே மலிந்திருக்கும் என்பது தெளிவு தானே! பிழை மலிந்த

நூலைத் தமிழ் மக்கள் படிப்பது தவறன்றோ?'' — என்று கூறிய வாறே அந்நூலின் படியொன்றைக் கையிலெடுத்து இரண்டாகக் கிழித்தெறிந்தார் பாவலர்.[35]

நாதர் முடி

அருட்பா எதிர்ப்பு இயக்கத்தைத் தலைமை ஏற்று நடத்திய திரு. கதிர்வேற் பிள்ளை ஒரு கூட்டத்தில்,

'நாதர்முடி மேலிருந்த வெண்ணிலாவே — அங்கு
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே'[36]

என இராமலிங்கர் பாடியுள்ளதைப் பழித்துப் பேசினார். 'பக்தர்கள் ஆண்டவனின் பாதாரவிந்தங்களையே அடைய விழைவர்; அதுவே முறையுமாகும்; ஆனால் இங்கு இராமலிங்கர் அம்மரபுக்கு முரணாக ஆண்டவனது முடி மீது சென்றமர விழை கின்றார். இது முற்றிலும் அடாத ஆசை. இத்தகைய கருத் தமைந்த பாடல்களைக் கொண்ட நூலை அருட்பா என்பதும் கூடாது. ஆகவே அதை மருட்பா என்றே கொள்ளல் வேண்டும், என்றார். கூட்டத்தில் ஓர் ஓரத்தில் இருந்த வண்ணம் அவ்வுரை யினைச் செவியேற்ற செய்கு தம்பிப் பாவலர் எழுந்து சென்று தாமும் சிறிது பேச வேண்டும் என்று தலைவரின் அனுமதியைப் பெற்றார். எழுந்து நின்று சிறியதொரு சொற்பொழிவை ஆற்றி னார். அதில், முதலில் திரு. கதிர்வேற் பிள்ளையின் புலமை நலத்தையும் சொல்லாற்றலையும் புகழ்ந்தார். அவரது கருத் துடன் தாம் சற்றே மாறுபடுவதாகச் சொன்னார். அவர் எடுத்துக் காட்டிய பாடல் அடிகளில், 'நாதர் முடி' என்றிருப் பதை இராமலிங்கர் 'நாத முடி' என்றே பாடியிருக்க வேண்டும் என்றும் 'நாதர் என்பது அச்சுப்பிழையாக இருக்கலாம் என்றும் கூறினார். அப்பால், நாதம் என்ற பிரணவத்திற்கு விளக்கம் அளித்தார். அந்த நாதத்திற்கு மேலிருக்கும் சந்திர மண்டலத் திலே சென்றிருக்க விழைவதாகவே சுவாமிகள் பேசுகிறார்; எனவே, அதில் பிழை எதுவும் இல்லை என்று பேசி முடித்தார். அக்கூட்டத்திற்கு வந்து குழுமிக் குழுறிக் கொண்டிருந்த இராம லிங்கரின் பக்தர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு மட்டே இல்லை.[37]

---

35. குமரேச பிள்ளை, சி. அவதானக் கலைஞர் (1968) பக் 17, 18
36. திருவருட்பா — நான்காம் திருமுறை — வெண்ணிலாக் கண்ணி — 2
37. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 92

இறந்தார் எழுவர்

இராமலிங்கர் தம் அருட்பாடல் 'நாமாவளி' என்ற தலைப்பில் எழுதியுள்ள பாடல்களுள் ஒன்றில், "இறந்தார் எழுவர் என்று புறந்தாரை ஊது" என்று குறிப்பிட்டுள்ளார். காஞ்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில், கதிர்வேற்பிள்ளையின் கூட்டத்தார், "பிள்ளையவர்கள் இறந்தவர் எல்லாம் மீண்டும் எழுவர் என்று பாடியதால், பல விதவைப் பெண்கள் தத்தம் கணவர் தமக்கு மீண்டும் கிடைப்பர் என இவர் பின்னே சென்று வறிதே மீண்டனர்" எனக் கிண்டலாகப் பேசினர். இதனை அறிந்த பாவலர் இதற்கு மறுப்புரையாகக் கீழ்க் காணுமாறு விளக்கம் அளித்தார்.

"இவ்வடியில் அடிகளார் கூறியது உயர்ந்த தத்துவமாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்திகரணங்கள் நான்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்கள் மூன்றும் இங்கே எழுவர் எனக் கூறப்பட்டுள்ளன. அஃறிணைப் பொருள்களான இவ்வேழையும் உயர் திணையாக 'எழுவர்' என்று கூறியது இழிப்பில் கூறிய திணை வழுவமைதி. இந்த ஏழும் ஒடுங்கி ஆன்ம போதம் முற்படுதலையே இறந்தார் எழுவர் எனக் குறிப்பிடுகின்றார் அடிகளார். மேலும் உலகியல் முறைப்படிப் பார்க்கினும் அடிகளார் கூற்றுத் தவறுடைத்தன்று. 'இறந்து ஆர் எழுவர்'? என்றல்லவா கேட்கின்றார்?" இவ்வாறு கூறிய பாவலர் அவையோரை நோக்கி "இறந்தவர் யார்தான் எழுவர்?" என வினவினார். அவையோர் 'யாரும் எழார்' என ஆரவாரம் செய்தனர்.[38]

நாக்கலப்பை:

கோட்டாறு மாலிக் தீனார் பள்ளி வாயிலின் முன்னுள்ள அரங்கில் சோடசாவதானம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது கண்டப் பத்திரிகை கொடுத்துச் சோதித்த தாழைக் குடிப் பிள்ளையவர்கள் திருக்குறளிலுள்ள இருபத்தாறு எழுத்துக்களைக் கொண்ட பாடல் ஒன்றைக் கண்டித்து இலக்கமிட்டுக் குலுக்கி ஒவ்வொன்றாகக் கொடுத்தார். முதலில் பாவலரிடம் அவர், 'முதலடியின் இரண்டாம் எழுத்து தமிழ் வல்லின வரிசையில் கடை' என்றார். அதைச் செவியில் வாங்கிக் கொண்ட பாவலர் மீண்டும் அருகே வந்ததும், 'இரண்டாம் அடியில்' இரண்டாம் எழுத்தும் அஃதே என்றார். உடனே பாவலர், பிள்ளைய

---

38. குமரேச பிள்ளை, சி — அவதானக் கலைஞர் (1968) பக். 19

வர்களை நோக்கி, 'முதலடியிலும் இரண்டாம் அடியிலும் வல்லின ஒற்றுக்கள் சிறப்புற எதுகையாக வருகின்ற குறட் பாக்கள் எத்தனையோ உள' என்றார். பிள்ளையவர்கள் தொடர்ந்து 'முதலடியின் பதினான்காம் எழுத்தும் தமிழ்ச் சிறப் பெழுத்துக்கள் மூன்றனுள் ஒன்று' என்றார். மறுமுறை அருகில் வந்ததும், 'இரண்டா மடியில் ஆறாவது எழுத்து மெய்யெழுத்து வரிசையில் கடையயலெழுத்து' என்றார். இதையும் கேட்ட பாவலர், 'ஐயா, நீவிர் தமிழை நும் நாக்கலப்பையால் உழுது விடுவீர் போலும்' என்றார். அவையோர் அனைவரும் ஒன்றும் புரியாது இருவரையும் நோக்கினர். உடனே பாவலர், 'ஐயா, தமிழாகிய வயலில் நுமது நாவாகிய கலப்பை கொண்டு 'ற்' என்ற வல்லின ஒற்றைக் கூறி உழுவது நும் வழக்கம் போலும்' என்று விளக்கினார். பிள்ளையவர்கள் வேளாளராகையால் உழும்போது மாட்டை 'ற்' என்று கூறி விரட்டும் பழக்கத்தை அறிந்திருந்த அவையோர் கொல்லெனச் சிரித்தனர்.

பிள்ளையவர்கள் எதையும் பொருட்படுத்தாது தொடர்ந்து, 'முதலடியின் பத்தாவது' எனத் தொடங்கி முடிப்பதற்குள் பாவலர், 'நிறுத்தும் ஐயா, நுமது கண்டப் பத்திரிகை யான் கண்ட பத்திரிகையாயிற்று' என்றார். 'நீர் கண்டது யாது?' என வினவினார் பிள்ளையவர்கள். உடன் தானே பாவலர்,

'அஞ்சிற்கொள் வாசகமொன் றுண்டே அருமறையில்
நெஞ்சிற்கொள் வீரதனை நேர்ந்து'

என மறுமொழி பகர்ந்து, அதன் மூலம் அறியப்படும் குறட்பா,

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

எனப் புலப்படுத்தி விளக்கமும் விரித்தார்.[39]

சிரமா றுடையான்:

சென்னை விக்டோரியா மண்டபத்தில் சதாவதானம் நடை பெற்றது. தொடக்கத்தில் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் எழுந்து பாவலரிடம் சிலேடையாகக் கடவுள் வணக்கப் பாடல் ஒன்று பாட வேண்டினார். பாவலர் உடனே,

'சிரமா றுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்

39. குமரேச பிள்ளை, சி — அவதானக் கலைஞர் (1968) பக். 32

பரமா தரவா பருகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்,

என்னும் பாடலைப் பாடி, ''சிரத்தில் கங்கையாற்றையுடைய சிவன் 2. மாறுபட்ட சிரத்தையுடைய கணபதி, 3. ஆறு சிரங்களையுடைய முருகன், 4. ஆற்றின் நடுவே சிரம் வைத்துத் துயிலும் திருமால், 5. தலையாய நல்வழியைக் காட்டும் அல்லாஹ் எனப் பொருள் கூறி, அத்தகைய இறைவனின் செழுமையான திருவடியை நிலையாக மனத்தினுள் இருத்தித் தலை தாழ்த்தி வணங்கி, பிற பெண்டிர் மீது இச்சை வையாது இறைவனையே எண்ணி உருகுகின்றவர்கள் பெரிய தவத்தின ராய் விளங்கிச் சிறப்புறுவர்'' என்று விளக்கமளித்தார். அவையோர் வியந்தனர்.[40]

ஆனா ஆவன்னா

சதாவதானத்தின் போது அவரைச் சோதித்த அறிஞர் பெருமக்கள் இலக்கிய-இலக்கண வினாக்களையும் விடுத்த வண்ணமிருந்தனர். அவரிடம் கேட்கப்பட்ட இலக்கண வினாக்கள் ஐந்து. அவற்றுள் ஒன்று, ''தொடக்கப் பள்ளிகளில் மாணவர்க்குத் தமிழ் எழுத்துக்களைக் கற்பிப்போர் 'ஆனா, ஆவன்னா; கானா, காவன்னா' என்றவாறு கற்பிப்பது எந்த விதத்தில் இலக்கணத்துக்குப் பொருந்தும்,'' என்பது. அதற்குப் பாவலர்,

''மெய்க ளகரமும் நெட்டுயிர் காரமும்
ஐயௌ கானும் இருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற''[41]

என்ற நூற்பாவின்படி, எழுத்துக்கள் அகரம், ஆகாரம், அஃகான் என்றவாறு சாரியைகளுடன் வரும் என்று கூறினாரேனும், 'பிற' என்ற மிகையால் 'ஆனா ஆவன்னா' என்றவாறு சாரியை பெற்று வருதலும் இலக்கணத்துக்குப் பொருந்துவதாகும்'' என மறுமொழி கூறினார்.[42]

கரிய செம்மல்

பாவலர், திரு. சாத்தாங்குட்டிப் பிள்ளை உள்ளிட்ட தம் மாணாக்கரிடையே கம்பராமாயணப் பாடல்களை விளக்கிக் கொண்டிருக்கையில், தாடகை வதைப் படலத்தில் வரும்,

---

40. குமரேச பிள்ளை, சி — அவதானக் கலைஞர் (1968) பக். 41
41. பவணந்தி முனிவர் — நன்னூல் — 126
42. குமரேச பிள்ளை, சி — அவதானக் கலைஞர் (1968) பக். 44

''சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும்வைரக்குன்றக்
கல்லொக்கும் நிறத்தில்தங்கா தப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப்
போயிற்றன்றே''[43]

என்னும் பாடலைச் சிலர் சிதைத்தும் திரித்தும் வெளியிட்டிருப்பதை எடுத்துக் காட்டினார். முதலடியின் இறுதிச் சீரை 'ஒன்றைத்தூய' எனச்சிலர் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டி, 'கரிய செம்மல்' என்ற தொடரைக் கம்பன் பல்வேறு இடங்களில் பயன்படுத்தியிருக்கும் பான்மையையும் விளக்கினார்.

''இப்பாடலின் பயனிலை 'போயிற்று' என்பது; அஃறிணை ஒன்றன் பால் வினைமுற்று. இதற்கு எழுவாய் 'சுடுசரம்' என்பது. இப்பால்பகா அஃறிணைப் பெயர் ஒருமைக்கும் பன்மைக்கும் உபயோகப் படுவதைப் 'போயிற்று' என்னும் ஒருமை வினை முற்றினால் விளக்கியிருப்பது அழகு'' என்று கூறி, செயப்படு பொருள் விகுதி ஏற்று நின்ற ஒன்றை 'நின்று பயனின்மை' என்ற குற்றம் நீங்க அமைத்திருப்பதையும் விளக்கி அந்நூலில் உள்ள பல பாடல்களுக்கும் விளக்கம் கூறி மகிழ்வித்தார்.[44]

மலரிருந்த அந்தணனும் தலைவணங்குமவன்

சுசீந்திரம் திரு. எஸ். கே. சுவாமி அவர்கள் பாவலரிடம் நெருக்கமான தொடர்புடையவர். ஒரு நாள் அவர் பாவல ரோடு நாகர்கோவில் நகர் நோக்கி நடந்து கொண்டிருக்கையில் கம்பராமாயணப் பாடல் ஒன்றில் விளக்கம் வேண்டினார்.

''வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தலை வணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்''[45]

என்பது பாடல். இப்பாடலைக் கூறி, 'மலரிருந்த அந்தணனான பிரம்மதேவன் வணங்கும் பரதன் என்றாரே கம்பர்; எப்போது

---

43. கம்பராமாயணம் — பாலகாண்டம் — தாடகை வதைப் படலம் — 49
44. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 27
45. கம்பராமாயணம் — கங்கை காண் படலம் — 32

நான்முகன் பரதனை வணங்கினான்? ஏன் வணங்கினான்? என்று வினாவை விடுத்தார் திரு. சுவாமி. பாவலர் அதற்குச் சிரித்து விட்டு, ''தம்பி! நான்முகனுக்கு அப்பன் பரதன். அப்பனை மகன் வணங்குவது ஆச்சரியமா? நான்முகன் நல்ல பிள்ளை; தந்தையான பரதனை வணங்கினான். அதனால் நான்முகன் வணங்கும் பரதன் என்றார் கம்பர்'' என விடையிறுத்தார். திரு. சுவாமிக்கு இது புலப்படவில்லை. 'பரதனா பிரம்ம தேவனின் தந்தை! எப்படி?' என மூக்கின் மேல் விரலை வைத்து யோசித்தார்.

''தெரியவில்லையா தம்பி, கேட்டுக் கொள். திருமாலின் தொப்புளில் தோன்றியவன் நான்முகன்: ஆகவே நான்முகனுக் குத் தந்தை திருமால். பரதன் திருமாலின் அம்சம். அதனால் பரதனும் நான்முகனின் தந்தைதானே'' என்று பாவலர் விளக்கி யதும் திரு. சுவாமி அவர்களின் ஐயம் தீர்ந்தது.[46]

அஞ்சிலம்பதில் ஒன்றறியாதவன்

ஒருநாள் தமிழறிஞர் பலர் பாவலரைச் சூழ்ந்திருந்தபோது கம்பராமாயணப் பாடலொன்றை விளக்க வேண்டினார். இராமன் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு அரசு நல்கி, கார் காலம் கழிந்த பின்னர் சீதையைத் தேடுவதற்காக வருமாறு கூறி அனுப்பினான். இன்பப் போதையில் ஆழ்ந்து விட்டிருந்த சுக்கிரீவன் கார்காலம் முடிந்த பின்னர் வந்தானில்லை. இதனால் இராமன் சினம் கொண்டவனாய்த் தம்பி இலக்குவ னிடம் இயம்புகின்றான்.

''நஞ்ச மன்னவ ரைநலிந் தாலது
வஞ்ச மன்று மனுவழக் காதலின்
அஞ்சி லம்பதி லொன்றறி யாதவன்
நெஞ்சி னின்னுதி லாவதி றுத்துவாய்''[47]

என்ற இப்பாடலுக்கும் பாவலர் விரிவுரை விளம்பினார். 'கொடியவர்களைத் தண்டித்தல் குற்றமாகாது; மனுநீதியும் அதுவே; சுக்கிரீவன் அஞ்சிலம்பதில் ஒன்றறியாதவன்; அவன் நெஞ்சில் பதியுமாறு இதனை உணர்த்து' என்றும் பொழிப் புரையைக் கூறிய பாவலர், பின்பு தமக்கே உரிய பாணியில் விளக்கம் கூறினார்.

---

46. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 143
47. கம்பராமாயணம் — கிட்கிந்தைப் படலம் — 5

முதலில் 'நஞ்ச மன்னவரை 'என்னும் தொடரை மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் விளக்கினார்.

நஞ்சம் மன்னவரை—நஞ்சைப் போன்ற மன்னவர்களை
நஞ்சம் அன்னவரை—நஞ்சை ஒத்த கொடியவர்களை
நஞ்ச மன்னவரை—அறநெறியினின்றும் நைந்த கீழான மன்னவரை

என்பன அவை. இம்மூன்று பொருளும் சுக்கிரீவனையே குறிப்பதாயிற்று என்று கூறிய பாவலர், மூன்றாம் அடியில் உள்ள தொடரை எடுத்து விளக்கலானார்.

அஞ்சில் அம்பதில் ஒன்றறியாதவன் — ஐந்து வயதிலும் சரி, ஐம்பது வயதிலும் சரி, ஒன்றையும் அறியாத மூடன் — சுக்கிரீவன்.

அம் சிலம்பதில் ஒன்றறியாதவன் — அழகிய கிட்கிந்தை மலையிலே வீற்றிருக்கும் ஒரு பொருளும் அறியாதவன் — சுக்கிரீவன்.

அஞ்சிலம் பதில் ஒன்றறியாதவன் — (இவனைக் கொல்லுதல் மனுவழக்கே யாதலின்) கொல்ல அஞ்சினோம் அல்லோம்; எமக்குப் பதில் ஒன்று கூற அறியாதவன் — சுக்கிரீவன்.

அம் சில் அம்பு அதில் ஒன்று அறியாதவன் — எம்மிடம் உள்ள அழகிய சில அம்புகளில் ஒன்றின் ஆற்றலைக் கூட இன்னும் அறிந்து கொள்ளாதவன் — சுக்கிரீவன்.

அஞ்சு இல் அம்பது இல் ஒன்று அறியாதவன் — இவனை அழிப்பதற்கு ஐந்து வேண்டியதில்லை, ஐம்பது வேண்டியதில்லை. ஓர் அம்பே போதுமானது; இதனை அறியமாட்டாதவன். — சுக்கிரீவன்

அஞ்சு இல் அம்பு அதிலொன்று அறியாதவன் — (நீ, சுக்கிரீவனை நோக்கி) நீ இராமனின் அம்புக்கு அஞ்சு; இல்லாவிடில், அவன் அம்பில் உன் உடலை ஒன்றச் செய் (என்று கூறு); அவன் அறியாதவனாக இருக்கிறான்,

அஞ்சில் அம்பதில் ஒன்று அறியாதவன் — (5+50+1) அஃதாவது ஐம்பத்தாறாவது ஆண்டின் பெயர் துந்துபி. துந்துபி என்ற அசுரனைக் கொன்ற வாலியையே கொன்றவன் இராமன் என்பதை அறியாத — எண்ணிப் பார்க்காதவனாகிய சுக்கிரீவன்

என்றிவ்வாறு பொருள் கூறி, இராமனின் உள்ளக் கிடக்கையைக் கம்பர் ஒரே அடியில் இவ்வாறு கூறினார் எனப் பாவலர் கூறியதும் அங்கிருந்த அறிஞர் உள்ளம் ஆனந்தப் பரவசமுற்றதைச் சொல்ல வேண்டுமா?[48]

ஞானக் குதிரை

இராமனின் திருமணத்திற்காகத் தயரதன் தன் உற்றார் உறவினர்களோடும் நால்வகைப் படையோடும் மிதிலையை நோக்கிச் செல்கின்றான். சற்றே இளைப்பாறுதல் பொருட்டு வழியில் தங்கி உணவருந்தி விட்டுக் களைப்பு நீங்கிய பின் பயணத்தைத் தொடர்கின்றான். அப்போது குதிரைப் படை சென்ற நிலையைக் கம்பர்,

> ''மும்மைபுரி வன்கயிறு கொய்துசெயல் மொய்ம்பால்
> தம்மையும் உணர்ந்துதரை கண்டுவிரை கின்ற
> அம்மையினொ டிம்மையை யறிந்துநெறி செல்லும்
> செம்மையவ ரென்னதனி சென்றன துரங்கம்''[49]

என்ற பாடல் மூலம் வருணிக்கின்றார். பாவலரைச் சூழ்ந்த அறிஞர் கூட்டம் ஒருநாள் இப்பாடலுக்கு விளக்கம் பெற விழைந்தது.

'ஆணவம், கன்மம், மாயை என்னும் வலிமை பொருந்திய மூன்று கயிறுகளையும் அறுத்துக் கொண்டு செய்கின்ற தவத்தின் வலிமையால் ஆன்மாவின் தன்மையை உணர்ந்து, தான் சென்றடைய வேண்டிய வீட்டியல்பையும் உணர்ந்து, அதனையடையுமாறு விரைகின்ற இம்மை மறுமைப் பயனையும் உணர்ந்து, நன்னெறிக் கண் செல்கின்ற செம்மையுடைய ஞானிகளைப் போலக் குதிரைகள், தம்மைக் கட்டிய கழுத்துக் கயிறு, முன்பின் கால் கயிறுகள் ஆகிய மூன்றும் அவிழ்க்கப் பெற்றுப் பாகனது செயலின் வலிமையால் தாம் செய்ய வேண்டுவன இன்னவை என அறிந்தனவாய்த் தாம் செல்லுகின்ற தரையியல்பையுமறிந்து விரைவையுமுடையனவாய் நன்முறையிற் சென்றன—என உரை கூறி மேலும் நயத்தை விளக்கினார் பாவலர். அஃதாவது,

மும்மைபுரி வன்கயிறு கொய்து — தன்னோடு பல பிறப்புகளிலும் தொடர்ந்து வந்த பழக்கத்தால் உயிரோடு பந்தித்து

48. குமரேசப் பிள்ளை, சி — அவதானக் கலைஞர் (1968) பக். 53 & 54
49. கம்பராமாயணம் — சந்திர சயிலப் படலம் — 21

அழுந்தி இறுகிக் கிடக்கின்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் இறைவனருளால் அறுத்து வருகின்ற ஞானிகளைப் போல் கழுத்துக் கயிறு, முன் கால் கயிறு, பின்கால் கயிறு ஆகிய மூன்றும் அவிழ்த்து விடப்பட்டுச் சென்றன குதிரைகள்.

செயல் மொய்ம்பால் தம்மையு முணர்ந்து — மும்மலங்களும் கழன்று இருவினையொப்பு, மலபரிபாகம் வருகின்ற நிலையில் செய்கின்ற தவ வலிமையால் தன்னையும் தலைவனையும் உணர்ந்து கொள்கின்ற ஞானிகளைப் போல், குதிரைகள் அவிழ்த்துவிடப்பட்ட நிலையில் தமது பணியையும் தலைவன் இயல்பையும் தெரிந்து கொண்டன. ஈண்டுத் 'தம்மையுமுணர்ந்து' என்ற உம்மையால் 'தலைவனையுமுணர்ந்து' என்பது பெறப் படும்.

தரை கண்டு — பொறி புலன்களினுடையவும் உலக இன்ப துன்பங்களினுடையவும் நிலையாமை, அவைகளை அனுபவிக்குங்கால் வரும் பாவம் புண்ணியம் ஆகிய வற்றை நன்கு ஆராய்ந்தறிந்த ஞானிகளைப் போல, குதிரைகள் தாம் அணிவகுத்துச் செல்கையில் தரை யிலுள்ள மேடு பள்ளங்களை நன்கு அறிந்து சென்றன.

விரைகின்ற — மலத் தொடர்பு நீங்கப் பெற்று, அதனால் தன்னையும் தலைவனையும் உணர்ந்து உலக போகங் களில் வெறுப்பும் உண்டாகிப் பின் பிறப்பறுத்து இறைவன் தன் திருவடிகளில் கலக்க வேண்டும் என்று வேகங் கொள்ளுகின்ற ஞானிகளைப் போல், கட்ட விழ்க்கப் பெற்றுத் தன்னையும் தலைவனையும் உணர்ந்து, தரையின் மேடு பள்ளங்களையுமுணர்ந்து கொண்டு செல்கின்ற குதிரைகள், தாம் செல்வழி வேக மாகச் செல்கின்றன.

அம்மையினொ டிம்மை யறிந்து நெறி செல்லும் — மேல் வரு கின்றதாகிய வீட்டியல்பை உடன் உணர்ந்து அதனை நாடிச் செல்கின்றதாகிய நிலையில் இப்பிறவியில் முன் வினையால் தாம் அனுபவிக்க வேண்டிய கருமங்கள் இன்னவை என உணர்ந்து பற்றின்றிச் செய்து, தீவினை சாராமல் தம்மைக் காத்தொழுகுகின்ற சீவன் முக்தர் களைப் போல் குதிரைகள் தாம் செல்லுமிடமாகிய மிதிலாபுரிப் பட்டணத்தியல்பையும் தற்போது சென்று

கொண்டிருக்கின்ற இடத்தினியலபையும் அறிந்து சென்றன.

என்று கூறி முடித்தார். அப்போது ஒருவர், 'மும்மை புவன்கயிறு கொய்கிறார்கள் ஞானிகள் என்பதற்குத் தாங்கள் ஆணவம், கன்மம், மாயை என்றீர்கள்; நான் இதற்கு, காமம், வெகுளி, மயக்கம் என்று சொல்லவும் கேட்டிருக்கின்றேன்; இவற்றை விளக்கிச் சொன்னால் நலமாகும்' என்றார். உடனே, 'இஃது அறிந்து கொள்ளத் தக்கதொரு கேள்விதான். இதைப் பற்றி ஆராய்வோம்' என்று கூறித்தொடர்ந்தார் பாவலர்.

''இயல்பாகவே சீவர்களைப் பற்றியிருக்கின்ற அழுக்குகளை ஆணவம், கன்மம், மாயை என்று ஒரு சாராரும், காமம் வெகுளி மயக்கம் என்று இன்னொரு சாராரும் கூறுகின்றனர். எவையானாலும் இவை நீங்கினால் மாத்திரம் சீவனுக்கு இறைவன் பதம் சித்திக்கும் என்பது ஞான நூல்களின் வழக்கு.

'காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின்
நாமம் கெடக்கெடும் நோய்'[50]

என்றார் வள்ளுவர். 'ஆசையும், அதனால் வருகின்ற சினமும் மயக்கமும் எப்போது உயிர்களை விட்டு நீங்கி ஒழிகின்றனவோ அப்போதுதான் பிறவித்துன்பமாகிய பிணிதீரும்' என்பது இதன் பொருள்.

இனி, 'செங்கமலத் தாளிணைகள் சேரவொட்டாத் திரிமலங்கள் அறுத்து' என்றார் அருள் நந்தியார். இதில் திரிமலம் என்றது ஆணவம், கன்மம், மாயை. இம்மூன்று மலங்களும் நீங்கி ஒழிந்த நிலையில் சீவன் கடவுளை அடைவான் என்பது பொருள்.

ஆணவம் முதலாம் மும்மலங்களும் காரணமாக நிகழும் காரியப்பாட்டினை ஆண்மை மலம் அல்லது பும்சத்துவ மலம் என்பர். அஃது ஆசை, அவா, வெகுளி, மயக்கம், அகங்காரம் என ஐவகைப்படும். இவ்வைந்தனுள் ஆசையை அவாவினுள்ளும், அகங்காரத்தை மயக்கத்தின் கண்ணும் அடக்கித் திருவள்ளுவ நாயனார் காமம் வெகுளி மயக்கம் எனக் கூறினார். காரணப் பாடாகிய ஆணவம் கன்மம் மாயை எனக் கூறினும், காரியப் பாடாகிய காமம் வெகுளி மயக்கம் எனக் கூறினும் கொள்ளப்படும் பொருள் ஒன்றே. எனினும், காரியத்தைக் கூறுதலினும் காரணத்தைக் கூறுதலே சிறப்புடைத்தாதலின்

50. திருக்குறள் 360

ஆணவம் கன்மம் மாயை எனப் பொருள் கூறலே சாலப் பொருத்தமாம்'' எனக் கூறினார்.[51]

கையாயுதம் வழியே உகுத்த மாமணி

ஒரு நாள் அறிஞர்கள் கூடியபோது, பாவலரிடம் ''கூளப்ப நாயக்கன் காதல்'' என்ற நூலிலுள்ள,

''காலா யுதக்கொடியோன் கையாயு தம்வழியே
மாலா யுதம்ஈன்ற மாமணியைத் தானுகுத்தான்''

என்னுமடிகளுக்கு விளக்கம் கூறுமாறு வேண்டினர். உடன்தானே பாவலர் கூறிய விளக்கமாவது:-

''காலா யுதக்கொடி யோன்	— காலை ஆயுதமாகக் கொண்ட கோழிக் கொடியைக் கொண்ட முருகன்
கையாயுதம் வழியே	— கையிலிருக்கின்ற வேல் போன்ற கண்கள் வழியே.
மாலாயுதமீன்ற	— திருமாலின் ஆயுதமாகிய சங்கிலிருந்து தோன்றுகின்ற
மாமணியை	— சிறந்த முத்துப் போன்ற கண்ணீரை
தானுகுத்தான்	— தான் சிந்தினான்.

இது பதவுரை. இங்கே காலாயுதம், கையாயுதம், மாலாயுதம் என அடுக்கிய சொல்நயம் பாராட்டுதற்குரியது. மேலும் சங்கிலிருந்து சிந்த வேண்டியதாகிய முத்து, வேலிலிருந்து சிந்தியதாகக் கூறிய பொருள் நயம் சிந்தித்தற்குரியது. பொருள்கள் இடம் மாறிப் பிறக்கின்ற அற்புதத்தைச் சிவப்பிரகாசர் தாமியற்றிய ''பிரபுலிங்கலீலை'' என்னும் நூலில் ஓரிடத்தே காட்டுகின்றார்.

''கன்னி யத்தம் வந்தனை மணிகற் கடகத்தில்
மன்னி யுற்ற தற்புத மெனவளை பலகாக்க''[52]

என்பது அது.

கன்னி — கன்னிப் பெண்; கன்னி ராசி.
அத்தம் — கை; அத்த நாள்.
கற்கடகம் — (கல்பதித்த) காப்பு; கற்கடக ராசி.
வளைபலகாக்க — வளைகள் பல காக்க; வளைந்து பலவாறு காக்க.

---

51. குமரேசப் பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 55, 56, 57, 58 59

52. பிரபுலிங்க லீலை — மாயை பூசைகதி — 13

கன்னிப் பெண்ணின் கையில் பல இன மணிகள் பதித்த காப்புக்கள் பொருந்தியிருந்தது அற்புதமெனப் பல வளைகள் காத்துக் கொண்டிருக்க எனவும், கன்னி ராசிக்குரிய அத்த நாள் கற்கடக ராசியில் வந்து பொருந்தியிருந்தது அற்புதமெனப் பல வளைகள் காவல் செய்ய எனவும் சிலேடைப் பொருள் கொள்ளப்படும்.

இதில் கன்னி ராசிக்குரிய அந்த நாள் கற்கடக ராசியில் பொருந்திய அற்புதம் போல், சங்கிலிருந்து தோன்ற வேண்டிய முத்து, வேலிலிருந்து தோன்றியது எனக் கூறியது சிந்தித்து நுகர்தற்குரியது'' என்று பாராட்டினார்.[53]

கொல்லான் புலாலை மறுத்தானை

1938 ஆம் ஆண்டில் கோடை விடுமுறையின் போது கோட்டாறு பட்டாரியர் நெடுந்தெருவில் இலக்கியச் சிறப்புக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. நாவலர் சோமசுந்தர பாரதியார், திருவள்ளுவர் பற்றிச் சிறப்புரையாற்றிய அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவராக அறிவிக்கப்பட்டிருந்த திரு. பி. சிதம்பரம் பிள்ளை வாராமையால், மகாமதிப் பாவலர் தலைமை ஏற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். பாரதியார் தம் சொற்பொழிவில் பரிமேலழகரின் உரையில் குறை உண்டு என எடுத்துக் காட்டி வன்மையாகத் தாக்கியதோடு, அவரால் உரை கொள்ளப்பட்ட பாடல்களுக்குப் புத்துரையையும் புகன்றார். ''உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லா தவர்.[54] என்ற குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை பிழை என்றார் பாரதியார். இக்குறளுக்குப் பொருள் சொல்லுங்கால், 'முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார் உடையார்; கல்லாதவர் கடையர்' என்று இருமுற்றுச் சொற்றொடர்களாக உரைநடைப்படுத்துப் பொருள் கொள்ளலே ஏற்புடைத்து என்றும், குறளில் உள்ளபடியே 'உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்' என நிறுத்திப் பொருள் கொள்ளின் 'கற்றார்' என்னும் எழுவாய் எந்தப் பயனிலையும் பெறாது வறிதே நின்று வாக்கியம் பிழைபடும் என்றும் வாதாடினார்.

அவருரை முடிந்ததும் பாவலர் முடிவுரை கூற எழுந்தார். ''ஐயா நான் ஒரு முஸ்லிம். இஸ்லாமியக் கண்ணோடு திருக்

53. குமரேச பிள்ளை, சி.— அவதானக் கலைஞர் (1968) பக். 60 & 61
54. திருக்குறள் — 395

குறளைப் பார்ப்பவன். என் கண்ணிலே திருக்குறள் ஓர் இஸ் லாமிய நூலாகப் படுகிறது. எனவே, திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை பல இடங்களில் பிழைபட்டது என்று நானும் கூறுகின்றேன். எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டைச் சொல்கிறேன். நீங்கள் என் திருத்தத்தை ஏற்றுக் கொள்வீர் களோ மாட்டீர்களோ என அஞ்சுகிறேன். எனினும் கேளுங்கள்:

இஸ்லாமியருக்குப் பசு மாமிசம் தின்பது மறுப்பல்ல. எனினும், இஸ்லாமியர் செத்த பசுவைப் புசிப்பதில்லை. முறை யாக வேதப்படி மந்திரம் ஓதி அறுக்கப்பட்டப் பசுவின் இறைச் சியையே உண்பது முறை. இதனை வள்ளுவர் தம் குறளில் கூறு கின்றார்.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்'[55]

என்பது அக்குறள். இதற்குப் பரிமேலழகர் கொண்ட பொருளை விடுத்து நான் புதிதாகப் பொருள் சொல்கிறேன்.

கொல்லான் (கொல் ஆன்)—கொல்லப்பட்ட பசுவினது

புலாலை — மாமிசத்தை

மறுத்தானை (மல்+துத்தானை)—மிகுதியாகத் தின்பவனை
கை கூப்பி எல்லா உயிருந்தொழும் — உயிர்கள் எல்லாம் கைகுவித்து வணங்கும்.

இப்பொருளை ஏற்றுக் கொள்வீர்களென்றால், பாரதியாரது புதுப் பொருளையும் ஏற்றுக் கொள்ளலாம். இது போல எத்தனையோ குறளுக்குப் புதுப் பொருள் கூறலாம்; ஆயின் அது பல நூறு ஆண்டுகள் தமிழுலகிலே பயின்று வரும் பரிமேலழகரின் உரையை மறுத்தலாகாது.'' இவ்வாறு பாவலர் கூறியதும் மழை வந்து விட்டது. பாவலர், பாரதியாருக்கு மறுப்புரை கூற மறுநாள் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

மறுநாள் குறித்தபடி கூட்டம் தொடங்கியது. பாரதியார் வரவில்லை. பாவலர் வந்து தம் பேச்சைத் தொடர்ந்தார். ''நேற்று நாவலர் சோமசுந்தர பாரதியார் இந்த உரை மறுப் புக்குக் காட்டிய காரணங்கள் இரண்டு; ஒன்று, பயனிலை யின்றிப் பாடல் அமையாது. அப்படி ஒரு பாடலே இல்லை என்பது. இரண்டாவது, பொருத்தமான பயனிலையாக 'உடை யார்' என்ற சொல் இருக்கிறது என்பது.

55. திருக்குறள் — 260

நாவலர் கூறிய முதற்குற்றத்துக்குக் காரணம் அவருக்கிருக்கிற இலக்கிய இலக்கணப் பயிற்சியின் குறைவேயன்றி வேறல்ல. நன்னூல் என்ற இலக்கண நூலில், பதவியலில் ''ஏழாமுயிர் இய்யும் இருவும்'[56] எனத் தொடங்குகிறது ஒரு சூத்திரம். அது 'ஆஈறு ஐயும் ஈ ஈறு இகரமும்' என முடிகின்றது. மேல் வருவனவற்றைத் தழுவிக் கொள்வதற்காக ஆசிரியர் பயனிலை கொடுக்காது முடித்தார் என அதற்கு உரை எழுதியோர் அனைவரும் காரணங் காட்டியுள்ளனர். மேலும்,

''கசதப ஒழிந்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழ ஒழித் தீரெட்
டாகுமிவ் விருபால் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே'[57]

என்ற நன்னூல் சூத்திரத்தில் உடனிலை மயக்கத்திற்கு மட்டும் பெயர் குறித்து வேற்றுநிலை மயக்கத்தைக் கூறாது விட்டாராயினும், உடனிலையைக் குறித்தமையால் மற்றது வேற்று நிலை என்பது தானே பெறப்படுதல் போல் 'கல்லாதவர் கடையர்' என்ற மாத்திரத்திரத்திலேயே 'கற்றவ தலையாயவர்' என்பது தானே பெறப்படும். இதற்காக ஒரு பயனிலையை வலிந்து காணவேண்டிய தேவையே இல்லை', என்று விளக்கி, மேலும் தொடர்ந்துப் பேசிமுடித்தார். கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து, ''ஐயா நேற்றுத் தாங்கள் பேசியபோது, 'மறுத்தானை' என்பதை 'மல்துத்தானை' என்று பிரித்தீர்களே, மல்துத்தான் என்பது மற்றுத்தான் என்றே புணருமன்றி மறுத்தான் என எவ்வாறு புணரும்? என்று கேட்டார். உடன் தானே பாவலர்,

''பின்னும் பகர்வான் மகனேயிவன்பின் செறம்பி'[58] என்னுமிடத்தில் கம்பன் 'செல்தம்பி' என்பதைச் 'செற்றம்பி' என்னாது 'செறம்பி' என்றுக் கூறிய இலக்கணம் இவ்விடம் அமைவுறும்'' என்று மறுமொழிபகர்ந்தார்.[59]

பொய்ம்மையும் வாய்மையிடத்த

தம்மைச் சூழ்ந்திருந்தப் புலவர்க்கு ஒரு நாள் புலமை விருந்து படைக்கையில்,

---

56. பவணந்தி முனிவர் — நன்னூல் — 147
57. பவணந்தி முனிவர் — நன்னூல் — 110
58. கம்பராமாயணம் — நகர்நீங்கு படலம் — 147
59. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 65, 66.

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'[60]

என்ற குறளுக்கு விளக்கம் கூறினார் பாவலர். ''ஒரு சொல் பொய்யேயாயினும் அது குற்றமற்ற நன்மையை விளைக்குமாயின் வாய்மையின் பாற்படுவதாக ஆன்றோர்களால் மதிக்கப்படும்'' என்று பொருள் கூறிவிட்டுப் பின் நயம் கூறினார்.

''ஒரு பொய்ம்மைச் சொல் அது பொய்யிலிருந்து பிறந்த காரணத்தால் பிறர்க்கு நன்மை பயத்தல் அரிது. 'நன்மை பயக்கும் எனின்' என்ற இடத்தில் அமைந்த உம்மையால் இக்கருத்தை வள்ளுவர் குறிக்கின்றார். ஒருக்கால் அது நன்மை பயப்பதாக இருப்பினும் அது புரைதீர்ந்த நன்மையாக அமைதல் அரிதினும் அரிது. வள்ளுவர் கருத்தின்படி ஒரு பொய்ச்சொல் ஏதேனும் ஒரு சிறு நன்மையை ஒருவனுக்குப் பயந்து விட்டால், அக்காரணத்தால் அது வாய்மைச் சொல் ஆகிவிடமாட்டாது. அந்நன்மை யாவரும் அங்கீகரிக்கும் வகையில் புரைதீர்ந்த நன்மையாய் அமையவேண்டும். ஒருவனுக்கு ஏதேனும் சிறிதளவு நன்மையைத் தருவதாகத்தோன்றும் அப்பொய்ச் சொல் வேறு ஒருவர்க்கோ பலர்க்கோ பெருந்தீங்கை விளைவிப்பதாகவும் இருக்கலாம். இவ்வகைப் பொய்ச் சொல் ஆன்றோர்களால் வாய்மை என் அங்கீகரிக்கப்பட மாட்டாது. எத்தகைய சிறிய தீமையையும் எவர்க்கும் எந்நாளும் விளைக்காததாய், ஆனால் பலர்க்கும் பெருநன்மை அளிப்பதாய் ஒரு பொய்ம்மைச் சொல் இருக்குமானால், அதுவே வாய்மைச்சொல் போல மதிக்கப்படும் என்பது வள்ளுவர் கருத்தாகும். அத்தகைய புரைதீர்ந்த நன்மை பயக்கும் பொய்ம்மைச் சொல்லையும் வாய்மை என்று கூறிவிடுவதற்கு வள்ளுவரின் அறவுணர்ச்சி நிரம்பிய தூய உள்ளம் ஒப்பவில்லை. புரைதீர்ந்த நன்மையே தரினும் பொய், பொய் தானே! அக்களங்கம் அச்சொல்லில் நீங்காத வடுப்போல அமைந்துதானே இருக்கிறது! எனவே, மெய்ம்மைக்குரிய தூய தனி இருக்கையில் அதற்கு இடம் உண்டா? வேண்டுமானால் மெய்யின் அருகாமையில் ஓர் இடத்தை அளிக்கலாம். அதுவும் எப்பக்கத்தில்? மேன்மையைச் சுட்டும் வலப்பக்கத்திலா? இல்லை. இல்லை; வலப்பக்கத்தை அளிப்பதற்கு வள்ளுவர் உள்ளம் மறுக்கிறது. எனவே, வாய்மையின் இடப்பக்கத்தில் அதற்கோர் இடம் ஒதுக்குகிறார். புரை தீர்ந்த நன்மை பயக்கின்ற பொய்ம்மைக்குங்கூட வாய்மையின் இருப்பிடத்திலோ சிறப்புக்குரிய அதன் வலப்பக்கத்திலோ அமர்வதற்குரிய தகுதி

60. திருக்குறள் — 292

இல்லை; சிறப்பில்லாத இடப்பக்கத்தில் இருப்பதற்குள்ள சற்றுத் தாழ்ந்த நிலையே அதற்கு உள்ளது. இக்கருத்துக்களையெல்லாம் 'வாய்மை இடத்த' என்ற சொற்றொடரில் பொதிந்து வைத்து நுழை புலமுடையார் உய்த்துணரும்படி வள்ளுவர் குறளை அமைத்துள்ளார்''-இது பாவலர் கூறிய நயவுரை.[61]

உடுக்கையிழந்தவன் கை

ஒரு முறை அறிஞர் முன்னிலையில்,

'உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'[62]

என்னும் குறளுக்கு விளக்கமளித்தார் பாவலர். ''இப்பாடலுக்குப் பரிமேலழகர், 'அவையிடை ஆடையிழந்தவனுக்கு அப்பொழுதே கைசென்று தாவி அந்த இகழ்ச்சியைக் களைவது போல், நண்பனுக்குத் துன்பம் வந்தவிடத்து அப்பொழுதே சென்று அதனைக் களைவதே நட்பாகும்' எனக் கூறிய உரை சிறப்புடையதேயாயினும், ஆடையில்லாது நின்ற ஒருவனுக்கு அவனுடைய கையானது ஓரளவு உறுப்பை மறைத்து ஆடை பெறும் வரையில் மானத்தைக் காத்து நிற்பது போல் நண்பன் ஒருவனுக்குத் துன்பம் வந்துற்றவிடத்து அவனது துன்பத்தைத் தம்மால் இயன்றவரை துடைத்து அத்துன்பம் நீங்குங்காறும் உடனிருந்து உதவி செய்வதே உத்தம நட்பாகும் எனக் கொள்ளுதலும் சிறப்பாகும்'' என்று கூறினார்.[63]

மான் முருகனார் பெற்ற விளக்கம்

நாஞ்சில் நாட்டு நற்றமிழ்ப் புலவர்களுள்ளே மான் முருகனார் என்ற கவிராச பண்டிதர் இராம சுப்பிரமணிய நாவலரும் ஒருவர். இராசாக்க மங்கலம் என்னும் ஊரைச் சார்ந்த நாவலர், இளமையிலேயே தமிழை ஐயந்திரிபறக் கற்ற அறிஞர். தாம் கற்றவற்றைப் பிற புலவர்களிடம் உசாவி மேலும் தெளிவு பெறுவது இவரது இயல்பு. தொல்காப்பியத்தில் கண்ட சில இலக்கண முடிவுகள் பற்றிப் பாண்டிய—சோழ நாட்டு அவதானிகள் சிலரிடம் வினாக்களை விடுத்தும் தக்க விடை

61. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர், (1968) பக். 67, 68
62. திருக்குறள் — 788
63. குமரேசப் பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 68, 69

பெறாமையால், பொதுவாக அவதானிகளிடத்தே மாசறு கல்வி பற்றிய மதிப்பு இவருக்கு இல்லாதிருந்தது. எனினும், 'பாவலர் ஒரு பண்பட்ட புலவர்' எனச் சிலர் கூறக் கேட்டதும் அவரிடம் அவ்வினாக்களை விடுத்துப் பார்க்க விழைந்தார்.

(i) நாவலர் தக்கலையிலிருந்து, தாம் மகாராணி மீது எழுதிய ஒரு தனிப் பாடலைப் பாவலருக்கு முதலில் அனுப்பினார். பின்னர் ஒரு நாள் கோட்டாற்றுக்கு வந்து பாவலரின் நூற் கடையில் அவரைச் சந்தித்தார்.

பாவலர் : யார்?
நாவலர் : மகாராணி வாழ்த்து அனுப்பினவன்.
பாவலர் : தக்கலையா? நாவலரா?
நாவலர் : புன்னகைத்தார்.
பாவலர் : இருங்கள்.

நாவலர், பாவலர் முன்னே சிறிது ஒதுக்கமாக அமர்ந்தார்.

பாவலர் : பாடல் நன்றாயிருக்கிறது. தங்களுக்குப் பத்து நாற்பது வயதிருக்கலாம் என்று எண்ணியிருந்தேன். தோற்றத்தில் சிறுவராக இருக்கிறீர்கள்; வயதென்ன?

நாவலர் : பதினேழு.

பாவலர் : இல்லை; தங்கள் கல்விக்கு வயது நாற்பது; தங்களைப் பற்றித் திருவனந்த புரத்திலுள்ள நண்பர் சிலர் வாயலாகக் கேட்டிருக்கிறேன். சரி, என்னால் ஆக வேண்டுவது யாதேனும் உண்டா?

இவ்வினா, நாவலர் பெருமானுக்குத் தம் உட்கருத்தை முடிப்பதற்குச் சிறந்த வாய்ப்பை அளித்தது. முன்பு அவதானிகள் சிலரிடம் கேட்டு விடைபெற முடியாது போன வினாக்களைப் பாவலரிடம் விடுக்கத் தொடங்கினார்.

நாவலர் : கைகோள், புலனெறி வழக்கம் என்பவற்றிற்குப் பொருள் என்ன?

பாவலர் : கை என்பது ஒழுக்கம்; கோள் என்பது கொள்ளுதல் நெறி; எனவே, கைகோள் என்பது ஒழுக்கநெறி எனப்படும். பொதுவாக ஒழுக்கநெறி எனப் பொருள் படினும் அகம், புறம் ஆகிய ஒழுக்க நெறிகளைக் கைகோள் என்னும் தொடர், காரண இடுகுறிப் பெயராக நின்று குறிக்கும்.

புலனெறி வழக்கம் என்பது அறிவுநெறி வழக்கு. அஃதாவது 'அறிவுடைச் சான்றோர் வழங்கி வந்த வழக்கு' எனக் காரண வகையால் பொருள்படினும் அகப்பொருள் பற்றிச் சான்றோர் மேற்கொண்டு வந்த வழக்கினை இத்தொடர் குறிக்கும்.

நாவலர் : வழக்கு, நாடக வழக்கு என்பவற்றின் வேற்றுமை யாது?

பாவலர் : வழக்கு என்பது உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவழக்குகள். நாடக வழக்கு என்பது இல்லதும், உள்ளதும், இல்லதும் உள்ளதும் ஆகிய மூவகை நிலைகளையும் கொண்டு இயங்கும் வழக்கு.

நாவலர் : அகப்பொருள் இலக்கணம் களவு, கற்பு என்னும் இரு பிரிவுகளையுடையது. தலைவனும் தலைவியும் தம்முள் சந்தித்துப் பிறரறியாமல் கூடி வருகிற ஒழுக்கம் களவு எனவும், அவர்கள் யாவரும் அறியத் திருமணம் செய்து கொண்டு வாழும் ஒழுக்கம் கற்பு எனவும் கொள்ளப்படும். களவு, பெற்றோர் முதலி யோரால் அறியப்பட்டுத் திருமணம் நடைபெறக் கற்பு நெறி தொடங்கும். களவு வெளிப்பட்டும், திருமண நிகழ்ச்சி நடைபெறச் சற்று முன்னுள்ள ஒரு இடைவெளி உள்ளது. தலைவி, தலைவனேயே சார்ந்து நின்றதாகிய திருமணத்திற்கு முன்புள்ள இந்த (இடைவெளி) நிகழ்ச்சியைக் களவில் சேர்ப்பதா? கற்பில் சேர்ப்பதா? களவு வெளிப்படுவது இருவகை ஒழுக்கத்தினுள் எதனைச்சாரும்?

பாவலர் : களவு வெளிப்பட்டதும் களவொழுக்கம் முடிந்து விட்டமையாலும், பெற்றோரும் மற்றோரும் அவர்கள் உறவை அறிந்து விட்டமையாலும், தலைவி உற்றாரை விடுத்துத் தலைவனையே சார்ந்து நிற்ற லாலும், 'களவு வெளிப்படுகிற அந்நிலை கற்பு நெறியே.'

நாவலர் : 'ஆன', 'மேன' என்னும் தொல்காப்பியச் சூத்திரச் சொற்கள் எந்நெறியான் அமைந்தன?

பாவலர் : நன்னூல் பெயரியல் 318ஆம் சூத்திரமாகிய 'ஐயான் குச்செய்யுட் கவ்வும் ஆகும் ஆகா அஃறிணைக் கானல் லாதன'[64] என்றதன்படி, 'ஆன்' என்னும் மூன்றாம்

64. பவணந்தி முனிவர் — நன்னூல் — 318

வேற்றுமை உருபு, அகரச் சாரியை பெற்று 'ஆன' என்றாயிற்று. 'மேன' என்னும் சொல் சாரியை.

நாவலர் : நன்னூலார் வினா எழுத்துக்கள் பற்றிக் கூறுமிடத்து,

'எயா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினாவா கும்மே'[65]

என்றார். நன்னூலார் கூறுகின்ற இவ்வைந்து வினா எழுத்துக்களும் தொல்காப்பியத்திலேயே வழக்கில் வந்துள்ளன. எனினும் அவர் வினாவெழுத்தாக (ஏ, ஆ, ஓ என) மூன்றைக் குறித்துள்ளார். ஏனையவை வழக்கிலிருந்தும் ஏன் கூறிற்றிலர்?

பாவலர் : வினா வெழுத்துக்கள் ஏ, ஆ, ஓ-இம் மூன்றும் ஈற்றில் நின்று வினாப் பொருளைத் தருவன. ஈற்றில் வினா வெழுத்துக்களை அமைத்து வினவுதலே சிறப்புடையதாகக் கருதப்பட்டது. பெருவழக்கும் அதுவாகவே இருந்தது. 'யாவன்' என்பது வினாச் சொல்; யாவன் என்பதன் திரிபே 'எவன்' என்பது. எனவே யா, எ இரண்டையும் வினாவெழுத்தாக குறிப்பிடுதல் அத்துணைச் சிறப்புடையதல்ல. எனினும், உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தியால் பிற சூத்திரங்களில் வைத்துக் கூறினார். நன்னூலாரும் உரையிற் கோடல் என்னும் உத்தியால் எ, யா இரண்டினையும் கொண்டு ஐந்து என்றார்.

நாவலர்: நன்னூலார் இரு உயிரெழுத்துக்கள் சேருமிடத்தி லுள்ள புணர்ச்சி விதியைக் கூறுமிடத்து,

'இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்'[66]

என்றார். அதாவது,'இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களுக்கு முன்னே உயிரெழுத்துக்கள் வந்தால் 'ய்' இடையே தோன்றும். இவை நீங்கலாக உள்ள எழுத்துக்களுக்கு முன் உயிர்வரின் 'வ்' என்னும் எழுத்தும், 'ஏ' முன் முற்கூறிய (ய், வ் என்னும்) இரு எழுத்துக்களும் தோன்றும்,

65. பவணந்தி முனிவர் — நன்னூல் — 67
66. பவணந்தி முனிவர் — நன்னூல் — 162

மேற்கூறிய விதிப்படி இ+அன்—இயன் என்றும், துறை+அன்—துறையன் என்றும், மா+இரு—மாவிரு என்றும், ஆ+இடை—ஆவிடை என்றும் புணர்தல் வேண்டும். அங்ஙனமின்றி வழக்கில் இவன், துறைவன், மாயிருஞாலம், ஆயிடை எனவே வந்துள்ளன. இவற்றிற்குக் காரணம் என்ன?

பாவலர்: நன்னூல் புணரியல், புறனடை 239 ஆம் சூத்திரம்,

> 'இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
> போலியும் மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு
> இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே'[67]

என்பதன்படி, 'இடை உரி வடசொற்களில் முன்கூறிய புணர்ச்சி விதிகளுக்கு மாறுபடுவனவற்றிற்கு வழக்கை யறிந்து புணர்த்திக் கொள்ளுதல் அறிவுடையார் யாவர்க்கும் நெறியாகும்' எனக் கூறியிருப்பதால், 'இ' என்னும் இடைச்சொல்லின் முன் 'அ' வர இவன் என அமைந்ததும், மா என்னும் உரிச் சொல்லின் முன் இகரம் வர யகரம் வந்ததும் பொருந்தும்.

'துறைவன்' என்னும் சொல்லை துறை+வ்+அன் எனப் பிரித்தல் வேண்டும். அறிஞன் என்னும் சொல்லில் 'ஞ்' பெயரிடை நிலையாக நிற்பதுபோல் 'வ்' என்பதும் பெயரிடை நிலை. 'ஆயிடை' என்பது 'தூக்கில் சுட்டு நீளின் யகரம் தோன்றல் நெறியே'[68] என்னும் 163 ஆம் சூத்திரத்தின் படிப் புணர்ந்தது; அவ்வாறு நீண்டு புணர்ந்தக்கால் 'ய்' தோன்றுவதற்கு இடைச் சொல்லாயினமையே காரணம்.

இவ்வாறு ஒவ்வொருகேள்விக்கும் ஆற்றொழுக்குப்போலத் தொடர்ச்சியாகவும் விரைவாகவும் விடையளித்தார் பாவலர். அவர் உடல் வருத்தம் தோன்றுவதை உற்று நோக்கிய நாவலர், 'போதும், தங்களைத் தவறாகக் கருதிவிட்டேன்' என்று வருந்திக் கூறினார்.

பாவலர்: என்னைச் சோதிக்க விடுத்த வினாக்களே இவையல்லவா?

[நாவலர் வாளா விருந்தார்]

---

67. பவணந்தி முனிவர் — நன்னூல் — 239
68. பவணந்தி முனிவர் — நன்னூல் — 163

நாவலர்: தாங்கள் பாவலரும் நாவலருமாக விளங்குகிறீர்கள். உலகம் விழிகளை மூடிக்கொண்டிருக்கிறது. சாமிநாத ஐயர் அவர்களையும், நாராயண ஐயங்கார் அவர்களையும், இராகவையங்கார் அவர்களையும் எல்லோரும் இன்னும் அறியவில்லை.

பாவலர்: கூத்தாடியை யாவரும் அறிவார்; கொற்றவனையார் அறிவார்? அறிவார் சிலரே.

அத்துடன் நாவலர் அன்று விடை பெற்றுக்கொண்டார். அன்றிலிருந்து இருவரிடையேயும் நட்பு வளர்ந்தது.[69]

(ii) ஒருநாள், புலவர் எனத்தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டு ஒரு சுவடியுடன் ஒருவர் நாவலரைச் சந்தித்தார். 'இது நான் இயற்றிய பாடல்களைக்கொண்டது; இதைத்திருத்தி ஒரு சாற்றுக்கவி தரவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். நாவலர், பாடல்களைப் படித்துப் பார்த்தபோது அவற்றுள் பல இலக்கண வழுக்கள் இருந்தன. பல இடங்களில் குற்றியலுகரம் உயிர் முன் நிற்கவும் கெடாதிருந்தது. வந்தவரிடம், 'கெடுக்க வேண்டுமிடத்துக் குற்றியலுகரம் கெடுக்கப்படவில்லையே; புணர்ச்சி நிகழின், வழுவிய யாப்புமேலும் விழுமே' என்றார் நாவலர். அவர் கூறியது என்னவென்றே பாட்டெழுதியவருக்குப் புரியவில்லை. உடன் தானே நாவலர் அவரிடம், 'இவற்றைப் பாவலரிடம் காட்டிச் சாற்றுக் கவி பெற்று வாருங்கள்; அவர் ஒப்புக் கொண்டால் போதும்' எனக் கூறி அனுப்பினார். சின்னாட்களுக்குப் பின்னர் பாவலரைச் சந்தித்த நாவலர், அப்புலவரைப் பற்றி வினவினார். அது கேட்ட பாவலர், "உழாமலேயே விளைவு பெற முயல்பவர்கள் பலர்; அவரும் ஒருவர். அவர் தங்களிடம் வந்ததும், தாங்கள் என்னிடம் அவரை அனுப்பியதும் தெரிந்து கொண்டேன். 'சரக்கு அறுதி, செருக்கு மிகுதி; ஆயினும் கட்டாயப் படுத்தினமையால், அவரது அறியாமை விளங்கும்படி ஒரு சிலேடைக் கவி பாடிக் கொடுத்திருக்கிறேன்" என்று நகைத்தவாறு கூறினார்,[70]

(iii) மற்றொரு முறை பாவலரைச் சந்தித்தபோது நாவலர் பெருமான், 'அவை வந்தது,' 'அது எல்லாம் என்றாற்போல வழுப்பட எழுதிவிட்டு, 'ஒருமை பன்மை மயக்கம்' என்று சிலர்

---

69. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 69-75

70. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 98

விடை கூறுகின்றனரே! தங்கள் கருத்து என்ன?' என்று வினவினார். பாவலர், ''காமத்தால் மயங்கலாம்; மகிழ்ச்சியால் மயங்கலாம்; கோபத்தால் மயங்கலாம். எப்பொழுதும் மயங்குவது மரணந்தானே, வழுக்கிச்சேற்றில் விழுந்தால் கழுவிக் கொள்ள வேண்டாமா?'' எனப் பிறிது மொழிதல் அணிவகையால் விடை கூறினார். இதன் கருத்தாவது, 'காமம், உவகை, சினம் முதலியவற்றால் திணைபால் இடங்கள் மயங்கிவரலாகும். யாண்டும் இவ்வாறு [ஏதுவின்றி] மயங்கின், முற்றிலும் வழுவாய் எடுத்துக் கொண்ட இலக்கியம் கெடும். மயக்கம் எங்கும் ஆகும் எனில், அவன் வந்தாள், அவள் வந்தான் என்பதும் ஒக்கும். சேற்றில் விழுந்தவன் கழிவிக்கொள்வது போலச் சொற்கள் சிலவிடத்து மயங்கினால் கருத்தினிமை, யாப்பழகு வழுப்படா நல்லியல்புகள் முதலியவற்றின் சிறப்பினால் அம்மயக்கம் கருதப்படாவாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்' என்பதாம்.[71]

(iv) ஒருமுறை நாவலரிடம் பாவலர், ''பலசுடரை உடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தால் ஒத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானாயினும் அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று'' எனப் பரிமேலழகர் உரைகூறிய,

> 'இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
> புணரின் வெகுளாமை நன்று'[72]

என்ற குறளுக்கு' பல...செய்தானாயினும் அவ்வாறு செய்தவன் மீண்டும் வந்து நட்புக் கொள்வானாயின் அவனை வெகுளாமை நன்று எனவும் ஒரு பொருள் உரைக்கலாகும்'' என்று கூறியதாக நாவலர் குறிப்பிடுகின்றார்.[73]

(v) ஒருமுறை நாவலர் மொழிநடைபற்றிப் பாவலரிடம் வினவியபோது, ''எளிய நடை வேண்டுவதே ஆயினும், மக்களறி விற்குத் தக்கவாறு மொழி நடையைத் தாழ்க்கலாகாது; மொழி நிலைக்குத் தக்கவாறு மக்கள் அறிவு உயரவேண்டும். இழிந்த நடையாவர்க்கும் எளிது. உயர்ந்த நடை அரிது. உலகொழுக்கு இழிந்த நடை பயன்படாது'' என்று விடையிறுத்தார்.

---

71. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 99
72. திருக்குறள் — 308
73. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 99

கற்றாரைப்பற்றி வினவியபோது, ''வள்ளுவனையும் கீரனையும், இளங்கோவையும் சிலரே அறிவார். ஊர்ப் பாடியையார் அறியார்'' என்றார் பாவலர்.[74]

நிறை கோல்

'நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்'[75] என்னும் இலக்கண நூற்பா அடியில் வரும் நிறைகோலுக்கு, உரையாசிரியர்கள் யாவரும் 'தராசு' எனப் பொருள் கொண்டிருக்க, சோழவந்தான் அரசஞ்சண்முகனார் மட்டும் 'வெள்ளிக்கோல்' எனப் பொருள் கூறினார். இது பற்றிய விளக்கத்தைப் பாவலரிடம் வினவினர் அறிஞர் பெருமக்கள். அதற்குப் பாவலர் கூறிய விளக்கமாவது,

''இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு'' என்னும் மதம் பற்றி, ஒரு பொருள்பற்றி இருவர்பால் மாறுபட்ட கருத்து எழுந்து விட்டது. இருவர் கருத்தினையும் கேட்டு, அவற்றுள் நேரியதனை எடுத்துக் காட்டும் ஆசிரியனது சிறப்பியல்புகளை எடுத்துக் காட்ட நிறைகோலை உவமையாகக் கொண்டார் இலக்கண ஆசிரியர்கள். அந்நிலையைக் கொண்டு நோக்க இரு பொருளையும் தன்பால் ஏற்று, அவற்றின் ஏற்றத் தாழ்வினை அளந்து காட்டும் இயல்பு, தராசுக்கு உண்டேயொழிய ஒரு பொருளை மட்டும் தன்பால் ஏற்று அதன் அளவினைக் கூறும் வெள்ளிக் கோல் என்னும் கருவிக்கு ஆகாது. ஆகவே, தராசு என உரை கூறிய முன்னோர் உரையே ஏற்புடைத்து'' என்பதாகும்.[76]

மடவோப்பாக் குடிக்கிகள்

நாகர்கோவில் நடைபெற்ற இலக்கியக் கூட்டமொன்றில், சுசீந்திரத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் பேசுங்கால், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களைப் பற்றிக் குறிப்பிட்டு, பாடல் தொகுதியில் பிந்திய பகுதி முழுவதும் வேறு யாரோ ஒரு இந்து ஞானியால் எழுதப்பட்டது என்றும், முஸ்லிம்கள் அதைக் களவாடித் தொகுப்பில் சேர்த்துக் கொண்டனர் என்றும் பேசி விட்டார். மறுநாள் அதே இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில்

---

74. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு] மலர் (1961) பக். 99
75. பவணந்தி முனிவர் — நன்னூல் — 26
76. குமரேச பிள்ளை. சி. அவதானக் கலைஞர் (1968) பக். 61

பேச வந்திருந்த பாவலர், நாவலரின் முதல் நாள் பேச்சுப் பற்றிக் கேள்விப்பட்டார். தாம் பேசியபேச்சுக்கிடையே இதுபற்றிக் குறிப்பிட்டு, குணங்குடி மஸ்தான்சாகிபு பாடல் தொகுதியில் நாவலர் குறிப்பிட்ட பகுதியிலுள்ள,

'கெடு பூண்டாக முளைத்த
கொடுமாடு பிடிங்கிகள்
கெடு பூண்டுகளாய்த் தான்
போகட்டும்—இன்னும்
நெடுமரம் போற் கொத்த
மடவோப்பாக் குடிக்கிகள்
நெடுமரம் போற் றானே யாகட்டும்'

என்ற பாடல் பகுதியை எடுத்துக்காட்டி, இதில் வரும் 'மட வோப்பாக் குடிக்கிகள்' என்ற தொடர் நெல்லை மாவட்டத்து முஸ்லிம் மக்களிடையே மட்டுமே வழக்கிலுள்ள ஒரு வசைமொழி என்பதைப் புலப்படுத்தி, ''நாவலா, யாரைத் திருடர்கள் என்றாய்?'' எனக் கேட்டார்.[77]

தமிழின் தாயகம்

ஒரு நாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே சோழவந்தான் அரசஞ் சண்முகனார், சைவ நூல் பரிசோதகர் சுப்பிரமணிய நாவலர், இலக்கணப் பேராசிரியர் நாராயண ஐயங்கார், கந்தசாமிக் கவிராயர், சங்கத் தலைமைப் புலவர் பாண்டித்துரைத் தேவர் ஆகியோர் உரையாடிக் கொண்டிருக்கையில் பாவலரும் அங்கு நுழைந்து விட்டார். புலவர் பெருமக்கள் எதிர்பாரா வண்ணம் அங்கு வந்த பாவலர் பெருந்தகையை உளமார வரவேற்று இருக்கையில் அமர்த்திப் புலமைப் பரிமாற்றம் புரிந்து கொண்டனர்.

பாவலரின் நினைவாற்றலையும், அவதானத் திறனையும் அறிந்திருந்த புலவர் பெருமக்கள் அன்று அவற்றைச் சற்றே சோதித்து இன்புற விழைந்தனராக, உரையாடலினிடையே அரசஞ் சண்முகனார் பாவலரிடம், ''உங்களுக்கு இராமலிங்கர் அருட்பாவிலே எத்தனை பாடல் நினைவிருக்கும்?'' என்று வினவினார். பாவலர், ''ஓரளவு நினைவிருக்கும்'' என்று மறு மொழி பகர்ந்தார். ''சரி, இராமலிங்கர் மகாதேவ மாலையில் 76-ஆவது பாடலைச் சொல்வீர்களா?'' என்று கேட்டார்

77. கனி, ஆர். பி. எம்: — இஸ்லாமிய இலக்கியக் கருவூலம். (1963) — பக். 178

சண்முகனார். பாவலர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து விட்டு,

''உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லாம்
உண்மைநிலை பெறஅருளும் உடையாய் இங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கில் ஆழ்ந்து
வருந்துகின்றேன் அல்லால்உன் மலர்த்தாள் எண்ணிக்
கைகுவித்துக் கண்களில்நீர் பொழிந்து நானோர்
கணமேனும் கருதிநினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ
திருவுளத்தை அறியேன்என் செய்கு வேனே''

என்றவாறு பாடலைப் பாடிக் காட்டினார். சண்முகனார் இதனைக் கேட்டதும் வியப்பில் ஆழ்ந்தார். அப்போது நாராயண ஐயங்கார் பாவலரை நோக்கி, ''இப்பாடலில் 'உய்குவித்து' என்று வரும் தொடரில் 'கு' எப்படி வந்தது? என்று கேட்டார். ''கு, சாரியை பெற்று வந்தது'' என்றார் பாவலர்.

அடுத்து, கந்தசாமிக் கவிராயர் பாவலரிடம், ''அகப் பொருள் பாடல் ஒன்றில் இரண்டு இடத்தில் 'கலாம்' என வந்திருத்தல் வேண்டும்; அப்படியொரு பாடலைக் கூறுங்கள்'' என்றார். இதற்குப் பாவலர் சிறிது யோசித்து விட்டு,

''வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல ரெல்லாம் அறிய—ஒருகலாம்
உண்டா யிருக்கவவ் வொண்டொடியாள் மற்றவனைக்
கண்டா ளொழிந்தாள் கலாம்''[78]

என்னும் முத்தொள்ளாயிரப் பாடலை மொழிந்தார். உடனே சுப்பிரமணிய நாவலர், ''ஏதேனும் ஒரு புராண நூலில் இரண்டனுருபிலே ஏழுமுறை 'நோக்க' என்ற சொல் இணைந்து வந்துள்ள பாடல் ஒன்றினைக் கூறுங்கள்'' என்றார். பாவலர்,

''கரத்தை நோக்குவர் வாளினை நோக்குவர் கடுப்பின்
எருத்தை நோக்குவர் வீரத்தை நோக்குவர் எதிராத்
தரத்தை நோக்குவர் அவையினில் அபூஜகில் உடனே
உரைத்த வார்த்தையை நோக்குவர் நோக்குவர்
உளத்தை''[79]

---

78. முத்தொள்ளாயிரம் (அருணோதயம் 1958) — 18
79. சீறாப்புராணம்—உமறுகத்தாபீமான் கொண்ட படலம்—33

என்ற சீறாப்புராணப் பாடலைப் பாடிக் காட்டினார். மேலும் அவர்கள் கேட்ட வேறு சில வினாக்களுக்கும் தக்கபடி விடை யிறுத்தார் பாவலர். பாண்டித்துரைத் தேவர் வியப்பில் ஆழ்ந் தவராய்ப் பாவலரை விளித்து, ''நீங்கள் தமிழின் தாயகம்; அவதானிகளின் அரசர்'' என்று புகழ்ந்து விட்டு, ''வாய்ப்பு இருக்குமானால் மதுரையில் உங்களை அழைத்து அவதானம் பண்ணச் செய்வேன்'' என்று கூறினார். தேவரின் இந்த எண்ணம் நிறைவேறவில்லை; காரணம் தேவருக்கு உடல் நலம் குன்றி விட்டது.[80]

சாற்றுக்கவிக்கு வந்தவரிடம் நூலையே சாற்றல்

ஒருநாள் புலவர் ஒருவர் தாம் எழுதியுள்ள நூலுக்குச் சாற் றுக்கவி வேண்டி வந்தார் பாவலரிடம். பாவலர் அவரை அமரச் செய்து பாடல்களைப் படித்துக் காட்டுமாறு கூறினார். அவர் தம் பாடல்களைப் படித்துக் கொண்டிருக்கும் போதே 'நீர் அருந்தி வருகிறேன்' என உள்ளே சென்றார் பாவலர். அவர் வருவது வரையிலும் பாடல்கள் முழுவதையும் படிக்கக் கேட்டுக் கொண்டிருந்தார் கோட்டாற்று வேலாயுத முதலியார். நீர் அருந்தி விட்டு வந்ததும் பாவலர் அப்புலவரிடம் பாடல்களைத் தொடர்ந்து படிக்கவேண்டினார். பாவலர் நீர் அருந்தச் சென்ற போது இருந்த இடத்திலிருந்து தொடர்ந்து ஒன்றிரண்டு பாடல் களைப் படித்ததும், ''நிறுத்துமையா, இப்பாடல்கள் நீர் இயற்றி யவை தாமே'' எனக் கேட்டார் பாவலர். புலவர் வெகுண்டு 'வேறு யார் இயற்றியதாம்?' என்றார். ''இப்பாடல்களை இதற்கு முன் படித்த நினைவிருக்கிறதே'' என்றார் பாவலர்; அத்துடன் அப்பாடல்களைத் தொடர்ச்சியாகக் கூறியும் விட்டார். புலவருக்கு ஒன்றும் தோன்ற வில்லை. என்ன செய்வ தென்று தெரியவில்லை. உள்ளம் வெதும்பினார்; உடல் வியர்த் தார்; பாவலரையே உற்று நோக்கினார். உடன் தானே பாவலர் அவரை நோக்கி, ''வருந்தாதீர்; நான் நீர் அருந்தச் சென்றிருந்த போது (வேலாயுத முதலியாரிடம்) நீர் இப்பாடல்களைப் பாடினீரல்லவா? அப்போது அவை என் செவியில் விழுந்து விட்டன; சிந்தையிலும் பதிந்து விட்டன; ஓசை நயம் சிறந்த இனியபாடல்களாகையால் அவ்வாறு எளிதில் பதிந்தன. இதைவிட நும் பாடல்களுக்கு வேறென்ன சிறப்பு வேண்டும்? உள்ளத்தில் பதிந்தவற்றை உரை வெளிப் படுத்திற்று. இதோ எழுதிக் கொள்ளுங்கள் சாற்றுக் கவியை''

---

80. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 120

என்று கூறியவாறு சாற்றுக் கவியையும் சாற்றினார். புலவர், பாவலரின் அற்புதமான நினைவாற்றலைப் பற்றி என்ன சொல்வதெனத் தெரியாமல் விழித்தார். பாவலரின் பாதங்களில் விழுந்தார். அப்போது பாவலர், "பெரும் புலமைக்கு அறிகுறி இம்மாதிரியான நினைவாற்றல்; மறதியுடையவன் மந்தப் புத்திக்காரன்; அவன் எவ்வளவு படித்தாலும் பயனில்லை" என்று கூறினார்.[81]

கூடல் கம்பப் பாவலர்

1945 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 14 ஆம் நாள் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கம்பம் நகரில் 'மீலாது விழா' நடை பெற்றபோது, அதில் சொற்பொழிவு நிகழ்த்த மகாமதிப் பாவலர் அழைக்கப் பட்டிருந்தார். அவ்விழாவில் கம்பம் நகரைச் சேர்ந்தவரும் 'முத்தண்ணா' என்ற புதினத்தை இயற்றிப் புகழ் பெற்றவருமான பீர்முகம்மதுப் பாவலரும் பங்கு பற்றினார். இருபெரும் பாவலரும் இணையாக மேடைமீதமர்ந்து சிறப்பித்த அப்பெருவிழாவைக் கண்ணுற்றுக் கழிபேருவகை கொண்டார் உத்தம பாளையத்தைச் சேர்ந்தவரும் கம்பம் பீர்முகம்மதுப் பாவலரின் மாணாக்கருமான ஜனாப் கா. சீ. மூகம்மது இஸ்மாயில் அவர்கள். விள்ள முடியாத தம் உவகையை அந்த வள்ளல் பெருமான் ஒரு வெண்பா மூலம் வெளிப்படுத்தினார். அவ்வெண் பாவைக் கூட்டத்திலும் படித்து விட்டார்.

"கோட்டாற்றுப் பாவலரும் கூடல்கம்பப் பாவலரும்
பாட்டால் புகழ்மலிந்த பான்மையினால்-கூட்டாகக்
கோமான் நபியிறசூல் கொண்டாட்டப் பேரவையில்
தேமாரி பெய்வர் சிறந்தே"

என்பது அவ்வெண்பா. கூட்டம் முடிந்த மறுநாள். பல அறிஞர் களும் கூடியிருந்து அளவளாவினர். அப்போது கம்பம் பீர் முகம்மது பாவலர் தம் மாணாக்கரை நோக்கி, "என்ன, திடீரென்று பொதுக் கூட்டத்தில் தப்பும் தவறுமாக வெண் பாவைப் படித்து விட்டீர்களே! உங்கள் பாடலில் 'கூடல் கம்ப' என்ற நாலசைச் சீர் வந்துள்ளதே; காய்ச்சீரன்றோ வர வேண்டும்!" என்று கேட்டு விட்டார். அறிஞர் பலர் முன்னிலை யில் அவர் அவ்வாறு கேட்டதும் முகம்மது இஸ்மாயிலின் முகம் வெளுத்து விட்டது. என்ன கூறுவது என்றறியாத நிலையில் நாணத்தோடு தலைசாய்த்து விட்டார். அப்போது அருகில்

81. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 142

இருந்த செய்குதம்பிப் பாவலர் அவரை நோக்கி, ''நீங்கள் படித்த வெண்பா சரிதான்; அதற்கும் அமைதியுண்டு'' எனக் கூறி ஓர் இலக்கண நூற்பாவையும் எடுத்தாண்டார்.

''சொல்லாரும் வல்லின மெல்லின மோட்டிவை போன்று
மொற்று
நில்லாது அசையெனும் நேரீற்றசையை நிரையசையாய்க்
கல்லாத மாந்தர் தேமாங் கனியென்பர் கற்றுணர்ந்த
நல்லார் இதையெண்ணிக் கூவிளங் காயென நாட்டுவரே''

என்னும் அந்நூற்பாவைக் கூறி, ''இவ்வெண்பாவை அலகிடும் போது 'கூடல் கம்ப' என்பதிலுள்ள 'ல்' என்னும் ஒற்றை நழுவி அலகிட வேண்டும்'' என்றும் கூறினார். வெண்பாவை இயற்றி யவர் அடைந்த மகிழ்ச்சிக்கு மட்டில்லை. அன்று முதல் கா. சீ.மு. அவர்களுக்குத் தம் ஆசிரியர் பீர்முகம்மது பாவலரைக் காட்டிலும் மகாமதிப் பாவலரிடமே மதிப்பு வளர்ந்தது. தொடர்பும் வலுத்தது. இத்தொடர்பின் விளைவாக அவர் தம் சிறப்பியல்புகளைச் செவ்வனே கண்ட பாவலர் அவர்மீது முகம்மது இசுமாயீல் கோவை என்கிற நூலை இயற்றவும் முன் வந்தார்.[82]

கோட்டாற்றில் இருந்தவனா?

அக்காலத்தில் கணபதி ஆசாரி என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்தார். நன்கு கற்றறிந்து புலமை சான்றவர் எனினும், நாஞ்சில் நாட்டில் தம்மை விடச் சிறந்த புலமையுடையார் யாரும் இல்லையென்னும் எண்ணம் அவரை ஆட்டிப் படைத்தது. இதனால் இறுமாப்புக் கொண்ட ஆசாரி மற்றைப் புலவர்களைச் சற்றே ஏளனமாகக் கருதி வந்ததோடு, அப்புலவர் பெருமக்களைக் குறைத்துப் பேசவும் தயங்கவில்லை. பாவலரின் குருவாகிய சங்கர நாராயண அண்ணாவியைப் பற்றியும் அவர் அளந்து விட்டிருந்த பேச்சுக்கள் பாவலரின் செவித்துளைகளில் சென்று பாய்ந்தன. இதனால் உள்ளம் வெதும்பிய பாவலர் ஆசாரிக்குச் சரியாகப் பாடம் கற்பித்திட வேண்டுமென்ற எண்ணத்தினராய்த் தக்கதொரு தருணத்தை எதிர் நோக்கியிருந்தார்.

கோட்டாறு சவேரியார் கோவிலுக்கு அண்மையிலுள்ள நூலகம் ஒன்றுக்குக் கணபதி ஆசாரி நாளும் வந்து செல்வது

---

82. கா. சீ. முகம்மது இசுமாயீல் அவர்களுடன் பேட்டி — 1-10-1978

நடை முறை. அந்நூலகத்துக்கு வந்து போகும் கோட்டாற்றைச் சேர்ந்த ஒருவர் ஆசாரியிடம் அளவளாவுவது வழக்கம். ஒரு நாள் அவர் பேச்சினிடையே, சங்கர நாராயண அண்ணாவி யிடம் படித்த புலவர் ஒருவர் கோட்டாற்றில் இருப்பதாக ஆசாரி யிடம் அறைந்தார். உடனே அவர் 'சங்கர நாராயணனிடம் படித்தவனா'? அவனை இங்கே ஒரு நாள் அழைத்து வாருங் களேன், மாற்றுப் பார்த்து விடுகிறேன்' என்றார். (ஆசாரி யல்லவா?) அவர் பாவலரிடம் சென்று இதனை அறிவித்ததும், மறுநாள் தானே அந்த நண்பருடனேயே சென்று ஆசாரியின் வருகைக்குக் காத்திருந்தார் பாவலர். சற்று நேரத்தில் ஆசாரி யும் வந்து விட்டார். அவர் பாவலரிடம் ஒரு நூலைக் கொடுத்து படிக்கச் சொன்னார். பாவலர் அந்நூலைக் கையில் வாங்கிச் சிறிது நேரம் புரட்டிக் கொண்டிருந்ததைக் கண்ணுற்ற ஆசாரி, ''என் போன்ற பழுத்த புலவர்கள் எழுதிய பாடலைத் தற்போது புலவர் என்று வருபவர்களுக்கு எப்படிப் படிக்க முடியும்? நானே படித்துக் காட்டுகிறேன்'' என்று கூறிக் கொண்டு நூலை வாங்கித் தாமே படித்தார். ஒரு பாடலைப் படித்ததும் பாவலர் முகத்தைச் சுளித்த வண்ணம், ''இப் பாடல் தாங்கள் எழுதியது தானா?'' என்றார். ஆசாரி, ''நுமக்கு இதில் ஏன் சந்தேகம்?'' என்றார்.

பாவலர் : இப்பாடலை நான் முன்பே படித்திருக்கிறேனே!

ஆசாரி : நான் எழுதிய இப்பாடலை நீவிர் எப்படிப் படித் திருக்க முடியும்?

பாவலர் : இல்லை, இல்லை! இப்பாடல் திருவிளையாடற் புராணத்தில் வரும் பாடல் அல்லவா? அதை நீங்கள் உங்கள் பாடல் என்று கூறுகிறீர்களே! உங்கள் பாடல் அத்தனையும் இப்படித்தான் இருக்குமோ?

இவ்வாறு வினவிய பாவலர் உடன்தானே திருவிளையாடற் புராண நூலை எடுத்து வருமாறு ஓர் ஆளையும் அனுப்பி விட்டார். உடனே ஆசாரியார், ''எனக்கு நீர்க்குற்றம் உண்டு; வீட்டிற்குச் செல்கிறேன்'' என்று கூறிக் கொண்டே நடையைக் கட்டினார். பாவலர் அவர் பின்னே தொடர்ந்து, ''என் அண்ணாவிக்குத் தெரியாததைத் தங்களிடமிருந்து படித்துப் போகலாமென்றல்லவா வந்தேன்? நீங்கள் போகின்றீர்களே; சற்றே இருங்கள், போகலாம்'' என்றார். ஆசாரியார் நிற்க வில்லை. நூலகத்தின் வெளியே வந்து, பாவலரை அழைத்து வந்த நண்பரிடம், ''இவன் கோட்டாற்றில் இருந்தவனா? இருந்

த்வனா?'' என்று கேட்டுக் கொண்டே போய் விட்டார். 'இவ்வளவு திறமையானவன் கோட்டாற்றில் உள்ளவனா? பெரிய தவத்தையுடையவனா?' என்பது இதன் பொருள்.[83]

ஆசாரி தம்மிடம் தோற்று விட்டார் என்பதால் பாவலருக்கு அணுவளவும் அகந்தை ஏற்படவில்லை. அவரிடம் குடியிருந்த புலமைக்குப் பாவலர் மரியாதை கொடுக்கவும் தவறவில்லை தொடர்ந்து அவரை அணுகி அளவளாவி நட்புக் கொண்டு ஒழுகினார். அப்புலவர் இறந்த போது பாவலர் அளவிறந்த வேதனையும் அடைந்தார். அவர் மீது இரங்கற்பாவொன்றினையும் பாவலர் பாடினார். அப்பாடலில் மேற்கண்ட நிகழ்ச்சியையும் நினைவு கூர்ந்தார்.

''முன்னொருபோழ் தெமையழைத்து முன்னிருத்திப்
பலவினவி மொழிந்த மாற்றம்
தன்னையறிந் தடுத்திருந்த நட்பாளர்
தமைநோக்கித் தக்கோய் மிக்கோய்
என்னையிவன் கோட்டாற்றி னிருந்தவனா
இருந்தவனா என்று கேட்ட
பன்னரிய வாயுமினிப் பார்த்திடுங்கா
லுண்டுகொலோ பாவி யேமே''

என்பது அப்பகுதி.

ஆயிரங்கோடிப் பொன்னல்லவா அருள வேண்டும்?

ஒருமுறை பாவலர் உத்தமபாளையம் சென்று, தம் நீண்ட நாளைய நண்பரும், புரவலர் பெருந்தகை ஜனாப் கா. சீ. முகம்மது இஸ்மாயில் அவர்களின் மாமாவுமான ஜனாப் என். கே. எஸ். முகம்மது இராவுத்தர் அவர்களின் இல்லத்தில் தங்கினார். அப்போது உத்தம பாளையத்துத் தமிழறிஞர்களான சங்குப் புலவர், பீர்காளை வாத்தியார், கா. சீ. மு. இஸ்மாயில் ஆகியோரும் மற்றும் சில தமிழன்பர்களும் அங்கு வந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். அப்போது பாவலர், ''பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் கவித்திரட்டு உங்கள் யாரிடமாவது இருக்கிறதா?'' என்று கேட்டார். யாவரும் ''இல்லை'' என்றனர். அங்கு வந்திருந்த தமிழன்பர்களுள் ஒருவர் மட்டும் ''அண்மையிலுள்ள சின்னமனூரில் ஒரு நண்பரிடத்தே உள்ளது அந்த வேண்டுமானால் விலைகொடுத்துப் பெறலாம்''என்றார்.

83. குமரேச பிள்ளை சி. அவதானக் கலைஞர் (1968) பக். 93, 94

உடன் தானே ஜனாப் என். கே. எஸ். முகம்மது இராவுத்தர் பத்து ரூபாய்களை அந்த நண்பரிடம் கொடுத்து அதனை வாங்கி வருமாறு அனுப்பினார். அந்த நண்பர் சென்று பத்து ரூபாய்க்கும் அக்கவித்திரட்டின் மூன்று படிகளை வாங்கி வந்து விட்டார். ஒரு படியை மட்டும் பாவலர் தமக்கு எடுத்துக் கொண்டார். எஞ்சிய இரண்டில் ஒன்றை முகம்மது இராவுத்தரும் மற்றதைப் பீர்காளை வாத்தியாரும் எடுத்துக் கொண்டனர்.

மறுநாள் அதே இடத்தில் அனைவரும் கூடியபோது, பாவலர் அத்திரட்டில் உள்ள 'சந்திரவிலாசம்' என்ற நூலின் சிலேடைச் சிறப்பினை எடுத்துக் கூறி இனியதோர் சொற்பொழிவை ஆற்றினார். அங்கிருந்த ஒருவர், பாடல்களை ஒவ்வொன்றாகப் படிக்க, பாவலர் விளக்கம் சொன்னார். பத்துப் பன்னிரண்டு பாடல்களுக்கு இவ்வாறு விளக்கவுரை ஆற்றிய பின், படித்துக் கொண்டிருந்தவரிடம் பாவலர், ''இந்த நூலைச் செய்த புலவருக்குப் புரவலரான சேலம் ஜில்லா வேலுக்குறிச்சி ஜமீந்தார் என்ன பரிசு கொடுத்தார்?'' என வினவினார். ''அந்த ஜமீந்தார் ஆயிரம் ரூபாய் கொடுத்தார்'' என்றார் அவர். பாவலர் உடனே, ''இந்த நூலுக்கு ஆயிரங்கோடிப் பொன்னல்லவா அருள வேண்டும்?'' என்று கூறியதும், அங்கிருந்தவர்களுக்குப் பாவலரின் பண்பட்ட உள்ளம் புலப்பட்டது; அத்துடன் அந்த நூலில் பாவலருக்கிருந்த பயிற்சியும் வெளிப் பட்டது.[84]

''பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர் இயற்றிய சந்திர விலாசம், உமறுப்புலவரின் ஆசிரியராகிய கடிகை முத்துப் புலவர் இயற்றிய சமுத்திர விலாசம், திருமலைவேற் கவிராயரவர்கள் இயற்றிய இரத்தினாகர விலாசம் முதலிய அரிய நூல்களுக்கு இவர்களைத் தவிர வேறு எவரும் உரை சொல்ல நான் கேட்டதில்லை'' என்கிறார் பாவலரின் மாணாக்கரான சாத்தாங் குட்டிப்பிள்ளை.[85]

வித்தகமும் மத்தகமும்

புலவர் ஒருவர் பாவலரிடம் வந்து, ''வித்தகத்திற்கு எத்தனை கால்?'' என வினவினார். பாவலர் 'நான்கு' எனக் கூறி, அவை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்று புலப் படுத்தினார். பின்னர் பாவலர் அவரை நோக்கி, மத்தகத்துக்கு

84. கா. சீ. முகம்மது இசுமாயீல் — பேட்டி — 1-10-1978
85. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961), பக். 25

எத்தனை கால்?'' என வினவினார். அவர் மறுமொழி கூற இயலாது விழித்தார். உடனே பாவலர், ''மத்தகத்துக்கும் கால்கள் நான்கே'' என்றார். ''அது என்ன?'' எனக் கேட்டார் புலவர். ''மத்தகம் என்றால் யானை; அதற்குக் கால்கள் நான்கு தானே'' என்று விளக்கியவர் மேலும், ''ஆறு கால்கள் உள்ளன வும் பன்னிரண்டு கால்கள் உள்ளனவும் கூட உண்டு'' என்றதும், வந்த புலவருக்குத் தலைசுற்றியது. சற்று நேரம் அவரைச் சிந்தித்துத் திணற வைத்து விட்டுப் பாவலரே விளக்கம் கூறினார். ''மத்தகம் என்றால் 'மத்தின் அகம்; அஃதாவது. தயிர் கடையும் மத்து; ஆறுகால்களைக் கொண்ட மத்தும் பன்னிரண்டு கால்களையுடைய மத்தும் கூட உண்டென்பதை நீர் அறியீரோ?'' என்றார். வந்த புலவருக்கு இவரிடம் ஏன் வந்தோமோ என்றாயிற்று. பாவலரின் விற்பனத்தை வியந்து விடை பெற்றுச் சென்றார்.[86]

செய்கு தம்பிப் பாவலர்

ஒருமுறை பாவலர் ஒரு வழக்குத் தொடர்பாக நீதிமன்றம் செல்ல நேர்ந்தது. சாட்சிக் கூண்டில் நின்ற பாவலரிடம் எதிர் தரப்பு வழக்குரைஞர், வழக்கமாகக் கேட்பதுபோல, ''உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவர், ''என் தந்தை யார் என்னைச் 'செய்கு' என்பார்; தாயார் 'தம்பி' என்பார்; பாரோர் 'பாவலர்' எனப் பகர்வர்'' என்றார். வழக்குரைஞருக்கு இந்த மறுமொழியைச் சிந்திப்பதில்தான் கருத்து சென்றதே யொழிய, மறுவினா விடுத்திட நாவெழவில்லை. நடுவர் பாவலரை இனங்கண்டு அவர்தம் புலமையை வியந்து இருக்கை நல்கி மதிப்பளித்தார். மன்றத்துக்கு வருகை தந்திருந்தவர் அனைவருக்கும் இந்நிகழ்ச்சி நல்ல விருந்தாக அமைந்துவிட்டது.[87]

நூறு தருகிறேன்

நண்பர் ஒருவர், பாவலரிடம் நூறு ரூபாய் வாங்கி வருமாறு தம் மைந்தரை அனுப்பினார். அம்மைந்தரோ, பாவலரின் சொல்விற்பனம் கேட்க தக்க வாய்ப்பு என மகிழ்ந்து அவரிடம் வந்தார். தந்தையார் நூறு ரூபாய் வாங்கிவரக் கூறியதாகப் பாவலரிடம் பகர்ந்தார். பாவலர் உடன்தானே,

86. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 79, 80

87. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 77 & 78

"சரி, நூறு ரூபாய் தருகிறேன்" என்று கூறியவாறு எடுத்து வர இல்லினுள்ளே நுழையத் தலைப்பட்டார். நண்பரின் மைந்தரோ, நூறு ரூபாயை மட்டும் பெற்றுச் செல்ல வரவில்லை; பாவலரின் சொல் விற்பனத்தையும் துய்த்திடவல்லவா வந்துள்ளார்? எனவே அவர் பாவலரிடம் 'செலவு மிகுதியாக உள்ளது; இருநூறு ரூபாய் தந்தால் ஏற்புடைத்தாகும்' என இயம்பினார். பாவலரும் வந்தவரின் மனநோக்கைப் புரிந்து கொண்டவராய் விளையாட்டைத் தொடங்கி விட்டார். அவர் உடனே, "இரு, நூறு ரூபாய் தருகிறேன் "என்றார். வந்தவர், 'முன்னூறு ரூபாய் தந்தால் மேலாக இருக்கும்' என முணுமுணுத்தார். பாவலர், "முன், நூறு ரூபாய் தருகிறேன்" என மொழிந்தார். வந்தவர் தொடர்ந்து 'நானூறு ரூபாய் தந்தால் நலமாகும்' என நயந்தார். பாவலர், "நான், நூறு ரூபாய் தருகிறேன்" என நவின்றார். வந்தவர் மேலும் தொடர்ந்து, 'ஐநூறு ரூபாய் தந்தால் ஆதரவாகும்' என அவாவினார். பாவலர், "ஐ, நூறு ரூபாய் தருகிறேன்" என அறைந்தார். வந்தவர் இன்னும் தொடர்ந்து, "அறு நூறு ரூபாய் அருளலாமே' என்றார் பாவலர், "அறு, நூறு ரூபாய் தருகிறேன்" என்றார். வந்தவர் இன்னும் விட்டபாடில்லை. 'எழுநூறு ரூபாய் தருதல் இசைவாகும்' என இசைத்தார். பாவலர் உடனே, "எழு, நூறு ரூபாய் தருகிறேன்" என்று சலித்தவராய் உள்ளே நுழைந்து பணப்பையுடன் வெளியே வந்தார். நண்பரின் மைந்தர் எழுந்து நின்று கொண்டே, 'எண்ணூறு ரூபாய்' என்று கூறிக்கொண்டே இளித்தார். பாவலர் சற்றுக்கடுத்த குரலில், "இதோ எண், நூறு ரூபாய்" எனக் கையில் வைத்தார். வாங்கியவர் பணத்தை எண்ணினார்; நூறு ரூபாய் இருந்தது. பாதையில் செல்கையில், நிகழ்ச்சியை எண்ணினார்; நினைவு இனித்தது.[88]

கல்லா மதியே

ஒருநாள் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது 'கல்லா மதியே கதிர்வானிலவே' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை விளக்கிக் கொண்டிருந்தார். "இப்பாடலுக்குப் புவர் பலவிதமாகப் பொருள் கூறிச் சொற்கொலை பொருட்கொலை செய்து வருகின்றனர்" என்று கூறுங்கால், கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து குறுக்கிட்டுப் பேசத் தலைப்பட்டார். உடனே பாவலர், "கல்லா மதியே, கேள்" என்று அவர் பக்கம் திரும்பிக் கொண்டு செப்பியதும் அனைவரும் அடக்க முடியாத

88. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 76 & 77

திரிப்பீலாழ்ந்தனர். குறுக்கிட முனைந்தவர் கூனிக் குறுகிக் குந்தி விட்டார்.[89]

பருவரல்

ஒருமுறை உழுவலன்பர் ஒருவரின் இல்லத்துத் திருமணத்திற்கு அழைப்பு வந்திருந்தது. ஆனால் பாவலர் அம்மண விழாவில் கலந்து கொள்ளவில்லை. பின்னர் ஒருநாள் அந்த நண்பரைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் திருமணத்திற்கு வர இயலாது போயினமைக்கு வருத்தம் தெரிவித்தார் பாவலர். அப்போது, "பருவரலால் மிகப் பருவரலுற்றேன், வர இயலவில்லை" என்றார். அஃதாவது, 'முகத்தில் ஒரு பரு வந்திருந்தமையால் மிகவும் பருவரல் (துன்பம்) உற்றேன்; அதனால் வர இயலவில்லை' என்று கூற இச்சிலேடையைப் பயன் படுத்தினார்.[90]

பெருமை நாயகம் புகையிலை

பாவலர் சுருட்டுப் (புகைப்) பிடிக்கும் பழக்கமுடையவர். வாய்திறந்து பேசும் நேரத்தைத் தவிர எஞ்சிய நேரங்களில் பெரும்பாலும் சுருட்டுத்தான் அவர் வாயை அணிசெய்யும். நண்பர்களோடும் அறிஞர் பெருமக்களோடும் அளவளாவிக் கொண்டிருக்கையில், அச்சுருட்டு வாயின் ஓர் ஓரத்தில் ஒதுங்கி இருந்து கொண்டு உரையாடலில் தன் பங்கையும் ஆற்றிக் கொண்டிருக்கும். சுருட்டைக் கையில் எடுத்து விட்டார் என்றால் சூழ்ந்திருப்பவர்களுக்குப் பெருங் கொண்டாட்டம் தான். இலக்கிய விருந்து படைக்கப் போகிறார் என்ற மகிழ்ச்சியில் திளைப்பர். இவ்வாறு அடிக்கடி வெளியில் எடுத்துக் கையில் வைத்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்துவிட்டு, மீண்டு வாயில் வைக்கையில் அது அணைந்து போயிருக்கும். எனவே, அடிக்கடிப் பற்ற வைக்க வேண்டியதாகும். 'பெருமை நாயகம்' கடைச் சுருட்டுத்தான் அவருக்குப் பழக்கமானது.

ஒருநாள் நண்பர்கள் சூழ அமர்ந்திருக்கையில், பற்ற வைத்துக் கொண்டிருந்த சுருட்டு, அடிக்கடிக் கையில் எடுத்துக் கொண்டு பேசியதால், அடிக்கடி அணைந்தது. விரைவாக

89. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 80

90. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 78

வாயில் வைத்து ஓர் 'இழுப்பு' இழுக்கலாம் என்றால், அப்போதெல்லாம் அதில் புகை வரவில்லை; நெருப்பு இருந்தால் தானே புகையும்! இதனால் பலமுறை அதனைப் பற்ற வைக்க வேண்டியதாயிற்று. அதில் ஒருமுறை அதனைப் பற்ற வைக்கப் பல நெருப்புக்குச்சிகளைச்செலவிட வேண்டியதாயிற்று. நண்பர் களும் இதனைப் பார்த்துக் கொண்டே இருந்தனர். அவர்களுக்கு இக்காட்சி எரிச்சலை ஏற்படுத்தும் எனப் பாவலர் கருதினாரோ என்னவோ, ''பெருமை நாயகம் புகையிலை, பெருந்தீ வைத்து ஊதியும் புகையிலை'' என்று கூறிவிட்டார். 'இதிலும் சிலேடையா?' என மூக்கில் விரல் வைத்து வியந்தனர் முன்னிருந்தோர்.[91]

முழு உருவமா?

பாவலரிடம் அன்புள்ளங் கொண்ட ஓவியக் கலைஞர் ஒருவர் அவரது உருவப்படத்தை வரைந்து அன்பளிப்புச் செய்திருந்தார். அம்முழு உருவ ஓவியத்தை அவ்வோவியரின் வேண்டுகோளுக் கிணங்கப் பாவலர் தம் நூல் கடையில் மாட்டி வைத்திருந்தார். இதனைக் கண்ணுற்ற கோட்டாற்று வாசிகள் சிலர் பாவலரை வம்புக்கிழுக்க விரும்பியவர்களாய், ஒரு நாள் அவரது கடையில் அவரைச் சந்தித்து, 'இஸ்லாமிய நெறிமுறைக்கு மாறாக முழு உருவப்படத்தை மாட்டி வைக்கலாமா?' என்று கேட்டனர். பாவலர் தம் படத்தை உற்று நோக்கி விட்டுச் சிரித்தார். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. தொடர்ந்து பாவலர், ''இது முழு உருவப்படமல்லவே'' என்றார். அவர்களுக்கு இந்த மறுமொழி மேலும் குழப்பத்தை ஏற்படுத்திற்று. மீண்டும் தெளிந்தவர்களாய், 'தலை முதல் கால்வரை அடங்கும் நெடிய படமல்லவா? இது முழு உருவப்படம் இல்லாது வேறு என்ன வாம்? என்று கேட்டனர். ''நீங்கள் முழு உருவத்தையும் இப் படத்தில் காண்கிறீர்களா?'' என மேலும் கேட்டார் பாவலர். அவர்கள் திகைத்தனர். ''நன்றாகப் பார்த்து முழு உருவப்படம் என்பதைக் கண்டறிந்து சொன்னால் கழற்றி விடுகிறேன்'' எனத் தொடர்ந்தார். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பாவலர் முகத்தையும் அப்படத்தையும் திரும்பத் திரும்பப் பார்த்தனர். தமக்குள்ளேயும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். திருதிரு வென விழித்தனர். பாவலர், அவர்களின் திருமுகங்களைப் பார்த்தார்; மிகப் பெரிய வினாக்குறி அங்கே தென்பட்டது. உடனே பாவலர், ''நீங்கள் இப்படத்தில் எனது பின்புறத்தைப்

---

91. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 78

பார்க்கிறீர்களா?'' என்று கேட்டார். 'இல்லை' என்ற பொருளில் முகங்கள் ஆடின. பாவலர், ''இது என் முழு உருவப் படமல்ல; பாதி உருவப் படந்தான்; இஸ்லாமிய நெறிமுறைக்கு மாறாக நான் நடக்கவில்லை; தாங்கள் செல்லலாம்'' என்று கூறி வழியனுப்பி வைத்தார். வம்பிழுக்க வந்தவர்கள் வெம்பிச் சோர்ந்து வழி நடந்தனர்.[92]

அறுத்தால் கட்டு

குமரி மாவட்டத்துத் திருவிதாங்கோடு என்னும் ஊரில் ஒரு நாள் சீறாப்புராணச் சிறப்பு விழா நிகழ்வுற்றது. பாவலர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். அதில் நபிகள் நாயகமவர்களின் விதவை மணக் கொள்கையை வியந்து விளக்கினார். இஸ்லாம் விதவை மணக் கொள்கைக்கு முழு ஆதரவு கொடுக்கும் நெறி என்பதை வலியுறுத்திப் பேசினார். மற்றவர்கள்—குறிப்பாகத் தமிழ் மண்ணிலே பிறந்தவர்கள் இக் கொள்கையை வெறுப்பது பொருத்தமற்றது—நேர்மையற்றது என வாதிட்டார். அவ்வாதத்துக்குத் துணையாக வேளாண்மைப் பழமொழி ஒன்றைத் துணைக் கொண்டார். 'அறுத்தால் கட்டு; அல்லது அழியும்' என்பது அப்பழமொழி. 'நெற்கதிரை அறுத்தால் கட்டி வைக்க வேண்டும்; இல்லாவிடில் அது அழிந்து போகும்' என்பது இதன் பொருள். இப்பழமொழியின் மூலம் 'ஓர் இளம் பெண் தாலியறுத்தால், அவளை வேறொருவனுக்குக் கட்டிக் கொடு; இன்றேல், அவள் வாழ்வு அழிந்து போகும்' என்னும் கருத்தை உணர்த்தினார். இதனால் விதவை மணக் கொள்கையை வெறுத்தோர் பலர் விருப்புக் கொள்ளத் தலைப்பட்டனர்.[93]

மணமக்களா, பிணமக்களா?

இரவிபுதூர் என்னும் சிற்றூரில் காங்கிரசுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் வ. வே. சு. ஐயர், டாக்டர் எம். இ. நாயுடு, மகாமதிப் பாவலர் ஆகிய மூவரும் கலந்து கொண்டனர். மில் துணிகளைத் துறக்கவும் கதராடைகளை ஏற்கவும் வலியுறுத்தும் கூட்டம் அது. மூவரும் பேசினர். அவற்றில் பாவலரின் பேச்சுத் தான் கேட்டார்ப் பிணிக்குந் தகையதாய் இருந்தது. கை தட்டலும் ஆரவாரமும் இடியென முழங்கப் பாவலர் சொன்மாரி பொழிந்தார்.

---

92. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 75 & 76
93. அப்துற் - றகீம், எம். ஆர் எம். — முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் (1957) பக். 325

''நம்மவர் திருமணத்தின் போது கட்டுவது கூறை ஆடை எனப்படும். அது கோடி ஆடை; அஃதாவது புத்தாடை. பிணத்தைப் பொதிவதும் புத்தாடைதான்; ஆனால் அது மில் துணியாயிருக்கும். திருமணத்தின் போது மில் துணி கட்டுவது வழக்கமில்லை. கோடித்துணி கட்டுபவன் மணமகன்; மில் துணி கட்டுபவன் பிணமகன். ஐயா, நீங்கள் மணமக்களாக இருக்க விரும்புகிறீர்களா? அல்லது பிணமக்களாக இருக்க விரும்புகிறீர்களா? இல்லை, இல்லை. நீங்கள் மணமக்களா? பிணமக்களா? மணமக்களானால், கையால் நூற்று நெய்த கதராடையை இன்றே கட்டுங்கள்; பிணமக்களானால் மில் துணியைக் கட்டுங்கள்; விதவைப் பெண்களைப்போல அந்த வெள்ளைத் துணியைக் கட்டிக் கொள்ளுங்கள். மணமக்களே, நீங்கள் கதர் அணியப் போவதற்கு அறிகுறியாக உங்கள் மேலே கிடக்கும் அந்தப் பிண ஆடையை இப்பொழுதே எடுத்தெறியுங்கள்; எரிக்கு இரையாக்குங்கள்; இங்கே இப்பொழுதே ஒரு சொக்கப்பனை எழட்டும்''— என்றுபாவலர் பேசியதும் மேலாடைகள் கழற்றி எறியப்பட்டன. சட்டைகள் வந்து விழுந்தன. துணிமலை ஒன்று உருவாயிற்று; அது எரிமலையாக உருப்பெற்றது.

அந்தக் கூட்டத்திற்குப் பின் அவ்வூர் மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது, 'நீ மணமகனா? பிணமகனா?' என வேடிக்கையாகக் கேட்டுக் கொள்வார்களாம்.[94]

மஞ்சள் பெட்டி மங்கலப் பெட்டி

1937-இல் காங்கிரஸ் கட்சி தேர்தலில் போட்டியிட்டது. அப்போது அக்கட்சிக்கு ஒதுக்கப்பட்ட பெட்டி மஞ்சள் நிறப் பெட்டி. எதிரணியினருக்கு வெள்ளைப் பெட்டி ஒதுக்கப் பட்டிருந்தது. தீவிர காங்கிரசுக்காரரான பாவலரின் சொற் பொழிவுகள் காங்கிரசின் பிரச்சார மேடைகளில் சிறப்பிடம் பெற்றன. அக்கூட்டங்களில் அவர் தவறாது சொல்லி வந்த தாரக மந்திரம், ''மஞ்சள் பெட்டி மங்கலப் பெட்டி; வெள்ளைப் பெட்டி வெறும் பெட்டி'' என்பது. அம்மந்திரம் உண்மையிலேயே மஞ்சள் பெட்டிகளை மங்கலப் பெட்டிகளாகவும் வெள்ளைப் பெட்டிகளை வெறும் பெட்டிகளாகவும் ஆக்கிவிட்டது. பாளையங்கோட்டையில் காங்கிரசை எதிர்த்து நின்றவர் தாம் கட்டிய பொறுப்புத் தொகையையும் இழக்குமாறு செய்தது.[95]

---

94. குமரேச பிள்ளை, சி. அவதானக் கலைஞர் (1968) பக். 102
95. அப்துற் - றகீம், எம். ஆர். எம். — முஸ்லிம்தமிழ்ப் புலவர்கள் (1957) பக். 327

அசைவம்

அருட்பாக் கட்சிக்கு வெற்றி தேடித் தந்தமைக்காகப் பாவலரைக் காஞ்சி நகரப் பெருமக்கள் ஒரு விழாவெடுத்துப் பாராட்டினர். அக்கூட்டத்தில் பாவலர் அருட்பாவின் சிறப்பினை விளக்கிப் பேசினார். அவர் பேசி முடித்துக் கொண்டு அமர்ந்ததும், மேடையில் அவர் அருகே அமர்ந்திருந்த தமிழறிஞர் ஒருவர், 'என்ன இருந்தாலும் நீர் அசைவம்தானே!' என வேடிக்கை செய்தார். சைவர்களே மிகுந்திருந்த அக்கூட்டத்தில் இந்த அசைவர் பெறும் சிறப்பைப் பொறுத்துக் கொள்ள அவரால் முடியவில்லையோ, என்னவோ, அப்படிப் பேசி விட்டார். ஆனால் அங்கிருந்த மற்றவர்களுக்கு இஃது அருவருப்பாகவே இருந்தது. பாராட்டுப் பெற வந்திருப்பவரையே இப்படிப் பதம் பார்த்ததை அவர்கள் விரும்பவில்லை. பாவலர் இதனால் எந்த அளவுக்கு வருத்தம் கொள்வாரோ எனக் கவன்றனர். யாவரும் பாவலரின் முகத்தையே உற்று நோக்கினர். பாவலரின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. பார்த்தவர்கள் இனிப் பாவலரின் வாயிலிருந்து என்ன வெளிப்படுமோ எனப் பரபரத்தனர். பாவலர் எழுந்து நின்றார். "ஐயா, யாம் அசைவம்" என்று கூறிக் கொண்டே தம் அவயவங்களை அங்கு மிங்கும் அசைத்தார். அனைவரும் அடக்க முடியாச் சிரிப்பைச் சுமந்தனர். முன்பு 'அசைவம்' என்று கூறிப் பாவலரை அசைய வைத்தவர் மட்டும் அசையாத சிலையாக அமர்ந்தார்.[96]

காக்காயையும் கறிவைத்து மென்று தின்பர்

சைவ மாநாடு ஒன்றில் பேசிய பாவலர் பேச்சினிடையே "காக்காயையும் கறிவைத்து மென்று தின்பர் சைவர்" எனக் கூறிவிட்டார். இது அரை குறை சைவங்களுக்கு ஆத்திரத்தை ஊட்டிற்று என்றாலும், பாவலரின் விற்பனம் அறிந்த புலவர் பெருமக்கள் அவர் தொடர்ந்து சொல்லப் போவது என்னவோ என்ற பேராவலில் திளைத்தனர். பாவலர் தொடர்ந்து, "கால் காயையும் கறிவைத்து மென்று தின்பரல்லரோ சைவர்?" எனக் கேட்டதும் எதிரிருந்த தலைகள் 'ஆம்' என அசைந்தன. அனைவரின் திகைப்பு நகைப்பானது.[97]

---

96. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 79
97. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 156

கொல்லாமை

ஒருநாள் நண்பர்கள் கூட்டத்தில், "கொல்லாமை என்றால் பசுக்களையும் செம்மறியாடுகளையும் கொல்லுங்கள் என்பது பொருள்" என்றார் பாவலர். அனைவரும் திணறினர். உடனே பாவலர், கொல்+ஆ+மை எனப் பிரித்து, "ஆ என்றால் பசு; மை என்றால் செம்மறியாடு; இந்த இரண்டையும் கொல் என்று தானே பொருள்" என்று கூறியதும் 'கொல்' என அங்கெழுந்த சிரிப்பைச் சொல்லவும் வேண்டுமா?[98]

சைவம் வளர்த்த தமிழ்

மேலப் பாளையத்தில் சின்னாட்கள் தங்கியிருந்த போது பாவலர் ஒரு நாள் திருநெல்வேலிப் பேட்டையிலுள்ள நண்பர்களையும் சீடர்களையும் கண்டு வருவதற்காகக் காரில் வந்து கொண்டிருந்தார். அவருடன் மேலப் பாளையத்தைச் சேர்ந்த தமிழ்ப் பற்று மிகக் கொண்ட முஸ்லிம் சீடர் ஒருவரும் பயணம் செய்தார். நெல்லையப்பர் கோவிலின் அருகேயுள்ள கடையொன்றில் சுருட்டு வாங்குவதற்காகக் கார் நிறுத்தப்பட்டது. சீடர் காரிலிருந்து இறங்கிக் கடை நோக்கிச் சென்றார் சென்றவர் கண்ணில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. தலைமையில் கோயிலில் சொற்பொழிவு என அறிவிக்கும் பலகை தென்பட்டது. சுருட்டை வாங்கிக் கொண்டு ஓடோடி வந்து பாவலரிடம் பலகையில் கண்டதைப் பகர்ந்தார். தமது பழைய மாணாக்கரின் பேச்சைக் கேட்க இப்புதிய மாணாக்கர் ஆவல் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டார் பாவலர். "திரு. வி. க. வின் பேச்சைக் கேட்க ஆசைப்படுகிறாயா?" எனக் கேட்டார். சீடர் "ஆம்" என்றார். உடன் தானே பாவலரும் காரை விட்டிறங்கி அந்தச் சீடருடன் சொற்பொழிவு நடைபெறுமிடத்துக்குச் சென்று கடைசி வரிசையில் கிடந்த பெஞ்சு ஒன்றில் அமர்ந்தார். அவர் அருகே சீடர் நிலை கொண்டார்.

திரு. வி. க. மேடையில் பேசத் தொடங்கிய சில மணித்துளிகளில் கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. பாவலரின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மேலப் பாளையத்து சாகிபைக் கவனித்து விட்ட சைவ பக்தர்களின் சலசலப்பே அது. தம்மை இனங்காட்டும் விதத்தில் அவர் உடையணிந்திருந்தார். எனவே, கோயில் வளாகத்துக்குள் ஒரு சாகிபு வந்து விட்டதைச் சகியாத

98. குமரேச பிள்ளை, சா. — அவதானக் கலைஞர் (1966) பக். 78

பக்த கோடிகள் சலசலத்தனர். தம் சொற்பொழிவுக்கு இடையூறு ஏற்படுவதை உணர்ந்த திரு. வி. க. குழப்பம் வரும் திசையை நோக்கினார்; கூர்ந்து கவனித்தார். உடன் தானே, "ஐயா அவர்கள் அங்கே இருக்கக் கூடாது; தயவு செய்து இங்கே வரவேண்டும்; மேடைக்கு வரவேண்டும்" எனக் கைகூப்பி அழைத்தார். கூட்டத்திலிருந்தவர்கள் ஒன்றும் புரியாது குழம்பினர். கூட்டத்தின் முன் வரிசையில் இருந்தவர்கள் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், "பாவலர் ஐயா, பாவலர் ஐயா!" எனத் துடித்தனர். பேராசிரியர் சீனிவாச ராகவன், சக்கரபாணி நம்பியார், இந்துக் கல்லூரித் தமிழ்த்துறை ஆசிரியர்கள், பல்வேறு வித்துவான்கள், பண்டிதர்கள், பல்வேறு பழம் புலவர்கள் ஆகியோரே இவர்கள். தொடர்ந்து அவர்கள் எழுந்து பின்னே வந்து பாவலரை மேடைக்கு வருமாறு வேண்டினர். "சும்மா பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்; மன்னித்துக் கொள்ளுங்கள்; நான் இங்கேயே இருக்கின்றேன்" என்றார் பாவலர். "ஐயா அவர்கள் அங்கே இருக்கும் போது இக்கூட்டத்திற்கு நான் தலைமை வகிப்பது மரியாதைக் குறைவு; தாங்கள் மேடைக்கு வந்தாலன்றி நான் இங்கு இருக்க மாட்டேன்" எனக் கூறிக் கொண்டே இறங்கி வந்தார் திரு. வி. க. இதற்கிடையில் தமிழன்பர்கள் பலர் பாவலரை உடன்படச் செய்து மேடையில் கொண்டு அமரச் செய்து விட்டனர். மன நிறைவு கொண்டு திரு. வி. க. தம் சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

சற்று நேரத்தில் எல்லாம் மீண்டும் சலசலப்பு. கடைசி வரிசையில் ஒரு சாகிபு நின்று கொண்டதையே சகித்துக் கொள்ளாத சைவர்கள், மேடையிலேயே மற்றொரு சாகிபு ஏறி உட்கார்ந்து கொண்டதைச் சகிப்பார்களா? அதுவும் கோயிலின் உட்பிரகாரத்தில் அபச்சாரமல்லவா? சலசலப்பு. பெரும் பரபரப்பாகி விட்டது. இச்செய்தியை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளக் கூட நாக் கூசினர். எனவே, 'குசு குசு' எனப் பேசிக் கொண்டனர். இந்தக் குசுகுசுப்பு கூட்டம் முழுவதிலும் வியாபித்தது. இதற்கான காரணம் என்னவென்பது திரு. வி. க. வுக்குப் புரிந்து விட்டது. "இந்த மேடையில் தமிழ்த் தெய்வமாகிய பாவலர் அவர்களுக்கு இடமில்லையென்றால் எனக்கும் இடமில்லை" என்று கடுகடுப்பாகக் கூறி விட்டு அமர்ந்து விட்டார். இதற்கிடையில் காவல் துறை உயர் அதிகாரியிடமிருந்து, "யாரோ சாகிபு கூட்டத்தில் வந்து கலவரத்தை ஏற்படுத்தி விட்டாராமே" என்த்தொலை பேசியில் கேட்கப்பட்டது. தொலை பேசியில் தொடர்பு கொண்ட பேராசிரியர் சீனிவாச-

ராகவன், "இங்குஎவ்விதக் குழப்பமும் கலகமும் இல்லை; மேடையில் இருப்பவர் பாவலர் அவர்கள்; கூட்டத்தைச் சமாளிப்பதற்கு நாங்கள் இருக்கிறோம்" எனஉறுதிபடக்கூறினார். பின்னர் முக்கிய பிரமுகர்கள் ஆங்காங்கே சென்று அமைதியை ஏற்படுத்தினர். தம்மால் விபரீதம் வளர்கிறது எனக் கண்ட பாவலர் மெல்ல நழுவ முயன்றார். திரு. வி. க. வும் பிற தமிழறிஞர்களும் பாவலரை எழுந்து போய் விடாதபடித் தடுத்து அமர்த்தி விட்டார்கள். கூட்டம் ஒருவாறாக அமைதியாக நடந்து முடிந்தது.

கூட்டம் முடிந்ததும் அங்கிருந்த புலவர் பெருமக்களும் பிரமுகர்களும் பாவலரைச் சூழ்ந்து கொண்டு "சைவம் வளர்த்த தமிழ்" என்ற தலைப்பில் மூன்று சொற்பொழிவுகளை ஆற்ற வேண்டும் என வற்புறுத்தினர். பாவலர் உடன்பட்டதும், மறு நாள் கூட்டம் நிகழ்வதாக அறிவிக்கப்பட்டது. கோயிலின் வெளிப்பிரகாரத்தில் மேடை அமைக்கப்பட்டது. முதல் இரண்டு நாட்களும் பல்வேறு சைவ நூல்களினின்றும் சான்றுகளைச் சரளமாக வரவழைத்துப் பாவலர் பேசிய பேச்சு எங்கும் பேசப் பட்டது. இதனால் மூன்றாம் நாள் கூட்டம் கட்டுக்கடங்காத படிக் குழுமி விட்டது. பாவலரும் தெம்பு மிகப் பெற்று மிகவும் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார். சிவபக்தர்கள் தம்மை மறந்த நிலையில் லயித்துக் கொண்டிருந்தனர். பல்வேறு சைவ சமய சாத்திர—தோத்திரப் பாடல்களைக் கடல் மடை திறந்த வெள்ளம்போல் வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில், 'கூர்த்த மெய்ஞ் ஞானத்தார்' எனத் தொடங்கும் மாணிக்க வாசகர் பாடலைக் கூறத் தொடங்கி,

> "கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
> நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"[99]

என்ற அளவில் கூறிவிட்டு "நுண்ணுணர்வே......நுண்ணுணர்வே......" என்றவாறு இழுத்துக் கொண்டே நின்றார். மீண்டும் அவ்விரண்டடிகளையுமே கூறி 'நுண்ணுணர்வே' என இழுத்தார். எதிரே அமர்ந்திருந்தவர்களை நோக்கி அடுத்த அடியை எடுத்துக் கேட்கும் பாவனையில் சுட்டு விரலை நீட்டினார். எவரிடமிருந்தும் அடுத்த அடிவரவில்லை. "சிவ நேசச் செல்வர்களே! பாடலின் அடுத்த அடியை உங்களில் யாருக்காவது ஞாபகமிருந்தால் கூறுங்கள்" என்று கேட்டார். முன் வரிசையில் இருந்தவர்களில் ஒருவரான பேராசிரியர் சீனிவாச

99. மாணிக்கவாசகர் — சிவபுராணம் வரி 75 & 76

ராகவன் எழுந்து, ''போக்கும் வரவும் புணர்வுமிலா'' எனக் கூறத் தொடங்கியதும் பாவலர், ''ஐயா; உங்களைக் கேட்க வில்லை; நீவிர் வைணவர்'' என்று புன்முறுவலுடன் கூறிவிட்டு, ''இங்குக் குழுமியிருக்கும் சிவபக்தர்களையும் சைவ அன்பர் களையுமே பாடலின் அடுத்த அடியை எடுத்துத் தருமாறு கூறினேன்; வைணவர்களையும் இதர மத அன்பர்களையும் அன்று'' என்றார். சீனிவாசராகவனவர்கள் சிரித்துக் கொண்டே அமர்ந்து விட்டார். பாடலின் எஞ்சிய பகுதியை எடுத்துக் கொடுக்கக் கூட்டத்திலிருந்த சிவபக்தர் ஒருவராலும் முடியவில்லை. முடிவில் பாவலரே ''போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே'' என்னும் அவ்வெஞ்சிய இரண்டடிகளையும் கூறிவிட்டு, ''சைவப்பற்று மிக்கோர்களே! சிவனடியார்களே! உங்கள் ஒவ்வொருவர் நெஞ்சிலும் மனப் பாடமாக இருக்க வேண்டிய இந்த சிவ புராணப் பாடலை உங்களில் ஒருவரும் அறியாமலிருப்பது கண்டு ஆச்சரியமடை கிறேன். நான் ஒரு தமிழ் முஸ்லிம்; சீனிவாசராகவன் அவர்கள் ஒரு வைணவர். நாங்கள் தெரிந்து வைத்திருக்கிற அளவிற்குக்கூட சைவத்தைப் பற்றிச் சைவர்களாகிய உங்களுக்குத் தெரிய வில்லையே! உங்கள் சைவப் பற்றெல்லாம் வெறும் பற்றுதானா? சைவம் வளர்த்த தமிழ் பற்றிய உங்கள் ஞானம் இத்தன்மையது தானா? சைவம் பற்றியும், உங்கள் சைவம் வளர்த்த தமிழ் பற்றியும் உள்ள உங்கள் அறியாமையை நினைந்து நீங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டாமா? பேரளவிற்கு மட்டும் சைவர்களாக இருந்துவிட்டால் சைவத்தின் கதி என்னாகும்? இனியாகிலும் தமிழ் தழைத்தோங்க சைவம் வளர்த்த தமிழைத் தயைசெய்து படிக்க முன்வாருங்கள்'' எனப்பேசி முடித்துக் கொண்டு அமர்ந்தார்.

கோயிலின் உட்பிரகாரத்தில் மூன்று நாட்களுக்கு முன்னர் திரு.வி.க. பேசும்போது நடந்துகொண்ட தவறுக்குக் கிடைத்த நல்ல தண்டனையாகக் கருதிய சைவப் பெருமக்கள் பாவலரை அணுகித் தாம் முன்பு செய்த தவறுக்கு மன்னிப்பு வேண்டினர்.[100]

ஆழ்வார் திருநகரி அஞ்சுவன்னத்தோர்

நெல்லை மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரி என்னும் அழகிய ஊர்; மணவாளபுரம் என்பது அவ்வூரின் ஒரு பகுதி. அப்பகுதியில்

100. ஹமீது, கே. பி. எஸ். — இலக்கியப் பேழை (1966) பக். 271—280

முஸ்லிம் பெருமக்கள் மிகுதியாக வாழ்கின்றனர். அவர்கள் 'அஞ்சுவன்னத்தார்' என அழைக்கப்படுவர். அவர்கள் துணி நெசவு, பாய்மிடைதல் போன்ற தொழில்களைச் செய்தும் போதிய வருவாய் இன்றிச் சிரம வாழ்க்கையைக் கொண்டிருந்தனர். தம் முயற்சிகளில் முன்னேற்றம் கண்டனரில்லை. 'சதாவதானி செய்கு தம்பிப் பாவலரின் நல்வாக்குப் பலிக்குமென்கிறார்களே, அவரிடம் சென்று நம் குறைபோக்கி வரலாம்' என்ற எண்ணத்தில் பாவலரைச் சந்தித்தனர்; தம் நிலையை விளக்கினர். 'பாடல் ஒன்றினால் யாம் வளம்பெற வாழ்த்தவேண்டும்' என விண்ணப்பித்தனர். "அவ்வாறே செய்வோம்" எனப் பாவலர் கூறி அனுப்பிவிட்டு, அடுத்து வந்த வெள்ளிக்கிழமை நீராடித் தூய்மை பெற்றுப்பின் நண்பகல் நடைபெறும் ஜம்ஆத் தொழுகை முடிந்த பின்னர் இருந்து இறைவனைக் கையேந்திவிட்டு,

"ஆழ்வார் திருநகரி யஞ்சுவன்னத் தோரேநீர்
சூழ்வாச் சுகமெய்திச் சொத்தெய்தி—ஏழுலகு
மெச்சுந் தலைமையெய்தி மேவுஞ்சொற் சத்தியெய்தி
உச்சத்தில் வாழ்வீ ருவந்து"

என்னும் வெண்பாவினையும், "பல்லாண்டு பல்லாண்டு பல்கா மாதோ" என முடிவுறுமாறு ஆறு எண்சீர் விருத்தங்களையும் எழுதி, அவர்களை அழைத்துக் கொடுத்தனுப்பினார். அப் பாடல்களை அவர்கள் பல படிகளாக அச்சிட்டு ஊர் முழுவதும் விநியோகித்தனர். பின்னர் அவர்கள் குழுமியிருந்து அப்பாடல் களைப் பக்திப் பொலிவோடு படித்தனர். சின்னாட்களில் அன்னோர் தம் வறுமை போக்கிச் செல்வச் சிறப்புப் பெற்றனர்.[101]

ஆத்திரங் கொண்டு பாடிய அறம்

நெல்லையப்பர் என்னும் செல்வந்தர் பாவலரிடம் பகைமை பாராட்டினார். தம் செல்வ வலிமையால் சிறு தொல்லைகளைக் கொடுத்து வந்தார். பாவலரின் நாவன்மையை மதிக்கவும் தவறினார். பாவலர் எவ்வளவோ சகித்தும் இயலவில்லை. எனவே, சினத்துக்கு ஆளானார். வாழ்த்தும் வாயால் வைவதைத் தவிர வேறு வழி காணாத பாவலர், அந்தச் செல்வரை அறம்பாடி அழித்திட முடிவு செய்துவிட்டார். அதன்படி 'நெல்லையப்பத் திருடர்', 'நெல்லையப்ப வீணா', 'நெல்லையப்ப மாடே' என்றவாறெல்லாம் வசைமொழித் தொடர்கள் அமைய

101. கா. சீ முகம்மது இசுமாயீல் — பேட்டி 1-10-1978

நான்கு விருத்தங்களை இயற்றினார். இதன் விளைவாக நெல்லையப்பர் நாளடைவில் செல்வத்தை இழந்தார் என்பர்.[102]

செல்வர் பெற்ற பிள்ளைப்பேறு

செல்வர் ஒருவர் மகப்பேறு இன்றி வருந்தி சோதிடர் ஒருவரிடம் ஜாதகம் பார்த்தார். குறிப்புக்கு ஏற்ப ஜாதக ஏட்டைப் புரட்டிப் பார்த்த சோதிடர் ''மேற்படி ஆலயத்தில் தீபம் வையே'' என்ற தொடரினை ஒரு தாளில் எழுதிக் கொடுத்தனுப்பினார். அதனைப் பெற்ற செல்வர் எந்த ஆலயத்தில் தீபம் வைப்பது என அறியாது திகைத்தார். இறுதியில் பாவலரிடமே இதனைக் கேட்டுத் தெளிவு பெறலாம் என வந்தார். பாவலர் சோதிடம் அறியாதவர். எனினும், வந்தவருக்கு ஆறுதலாக ஏதேனும் கூறவேண்டுமென்ற எண்ணத்தில் ''மேற்படி ஆலயம் என்றால் ஏறுபடியிலுள்ள இபுறாகீம் ஷகீது ஒலியுல்லா அவர்களின் தர்காவாகும்'' என விளக்கமளித்தார். செல்வர் இதனைச் சிரமேற்கொண்டு சென்று அவ்வாலயத்தில் தீபம் வைத்தார். அதன் பயனாக மகப்பேறும் அடைந்தார்.[103]

வாழ்த்துப் பெற்றவர் வளர்ந்தார்

1925 ஆம் ஆண்டில் நாகர்கோவில் 'சரசுவதி ஹால்' என்னும் கலையரங்கில் டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம் ஒன்று நிகழ்வுற்றது. அதில் (பிற்காலக் கலைவாணர்) என். எஸ். கிருஷ்ணன் சிறு பாத்திரத்தில் நடித்தார். நகரப் பெருமக்கள் அவரைப் பாராட்டித் தங்கப்பதக்கமொன்றை வழங்க முன் வந்தனர். பாராட்டுரை வழங்கிப் பரிசினை அளிக்கப் பாவலரை வேண்டிக்கொண்டனர். பாவலர், ''நம் நாஞ்சில் நாட்டு இளஞ்சிறுவன் கிருஷ்ணன் வருங்காலத்தில் மகா மேதையாக விளங்கப் போகிறான். இவனுடைய பெரும் புகழால் நம் நாஞ்சில் நாடு மட்டுமன்றி, தமிழ்நாடே பெருமையடையப் போகிறது'' என வாழ்த்துரை கூறினார்.

தாம் புகழ் சிறக்க வாழ்ந்த காலத்தில் பாவலரின் இந்த வாழ்த்துரையை அடிக்கடிப் பெருமையோடு சொல்லி மகிழ்வாராம் கலைவாணர்.[104]

---

102. பாவலரின் மூத்த மைந்தர் காலஞ்சென்ற செ. பக்கீர் மீரான் அவர்கள் கூறக் கேட்டது.
103. அப்துற் - றகீம் எம். ஆர். எம். — முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் (1957) பக். 326 & 327
104. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 112

சதா அவதானி

பாவலர் முதுமையடைந்திருந்த காலத்தில் ஒருவர் அவரிடம் பேசிக்கொண்டிருக்கையில், "நீங்கள் இப்பொழுதும் சதாவதானம் செய்ய இயலுமா?" என்று வினவினார். பாவலர், "நான் சதாவதானி; ஆம், சதா அவதானி" என மறுமொழி புகர்ந்தார்.[105]

தஞ்சாவூர்

கடைசியாகப் பாவலர் சொற்பொழிவாற்றிய ஊர் தஞ்சாவூர். அங்குச்சொற்பொழிவினிடையே தாம் தஞ்சாவூருக்கு, தம் சாவு ஊருக்கு வந்திருப்பதாகச் சிலேடை அமைத்துப் பேசினார். ஆம், அது தம் சாவுக்கு முன் நிகழ்ந்த கூட்டமல்லவா? அவர் வாக்கு அதிலும் பலித்துவிட்டது.[106]

---

105. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 80

106. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர் (1968) பக். 106 & 107

பெட்டகம்

மகாமதி, சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் 31-7-1874இல் பிறந்து 13-12-1950இல் காலமானவர். அஃதாவது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமாக எழுபத்தாறு ஆண்டுக்காலம் இவ்வையத்தில் வாழ்ந்தவர். இளமைக் காலத்திலிருந்தே இயல்பான நினைவாற்றல் வாய்க்கப் பெற்ற பாவலர், சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடுவின் பத்மநாப விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பாசிரியராகப் பணி புரிந்ததன் பயனாக, பழைய இலக்கியங்களின் பதிவகமாகத் தம் உள்ளத்தைப் பக்குவம் செய்து கொண்டவர். கேட்டார்ப் பிணிக்குந் தகையவான சொல்லாற்றல் சிறக்கக் கைவரப் பெற்ற பாவலர், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியமாகச் சிறப்புப் பெற்றதோடு, அவ்வாற்றலின் பயனாக இராமலிங்கரின் அருட்பாக் கட்சிக்கு அழியாத வெற்றியையும் ஈட்டித்தந்தவர். 'பாவலர் அவர்களுடைய காலத்திலிருந்துதான் நாஞ்சில் நாட்டில் தமிழ்க்கல்வி பெருகி வந்து நறுமணம் வீசிக் கொண்டிருக்கிறது'[107] எனக் குறிப்பிடுமளவுக்கு இலக்கண இலக்கியப் பேராசானாகத் திகழ்ந்தவர். யாவற்றுக்கும் மேலாக நூறு அவதானங்களை நுண்ணறிவு சான்ற புலவோர் முன்னிலையில் நிகழ்த்திக் காட்டிச் 'சதாவதானி' என்ற விருதுடன் விளங்கிப் புகழ் பெற்றவர்.

இளமைக் காலத்தில் சங்கர நாராயண அண்ணாவியிடம் தமிழ்க் கல்வி பயின்ற போதே, அஃதாவது பதினைந்தாம் வயதிலேயே அந்தாதி, பிள்ளைத்தமிழ், பல்வகைச் சித்திர கவிகள் இவற்றைப் பாடும் ஆற்றல் பெற்றதோடு, சென்னை வாழ்வின் போதும் இவ்வாற்றல் வெளிப்பட்டுத் தோன்ற நின்று "பாவலர்' எனப் பலராலும் அழைக்கப்படும் பான்மை பெற்ற பாவன்மையர். இவர்தம் பெருமைமிகு பேனாவால் பிறப்

107. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 27

பெடுத்த பெட்டகங்களாகக் கிடைப்பன அவர், தம் வாழ் நாளோடு ஒப்பிடுங்கால் சிலவேயாம். அவற்றுள்ளும் அச்சேறி வெளிவந்தன மிகச் சிலவே. எஞ்சியன கையெழுத்துப் படிகள். எனினும், இச்சில இலக்கியங்களே அவரைப் பாவில் வல்லவர் எனப் பறைசாற்றப் போதுமானவை. அவ்விலக்கியங்கள் அந்தாதிகள், கோவைகள், பாமாலை, மஞ்சரி, நீதி வெண்பா என்னும் நூல்களாகவும் பல்வேறுபட்ட உதிரிப்பாக்களாகவும் உள்ளன. இவ்வகைகள் அச்சில் வெளிவந்தனவும் கையெழுத்துப் படியாகவே உள்ளனவுமாம். இவையாவற்றையும் பாவலரின் இலக்கியப் பட்டியலில் கொண்டு இரு கூறாகப் பிரித்துக் காணுதல் சிறப்பு. அவை பாவலர் இயற்றிய தனி நூல்கள், பாவலர் அவ்வப்போது இயற்றிய உதிரிப்பாக்கள் என்பன. இவையன்றிப் பாவலர் இயற்றியனவாகக் கிடைக்கப் பெறும் உரைநடை நூல்களும் உள்ளன. இவற்றைத் தனியே மூன்றாவது கூறாக்கிக் காணலாம். எனவே, பாவலரின் பெட்டகங்கள் என்பவற்றை மூன்று பெரும் பிரிவுகளில் அமைத்துக் கொண்டு காண்பது இங்கே அமைவுடையதாகின்றது.

I. பாவலர் இயற்றிய தனி நூல்கள்

மேலே குறிப்பிடப்பட்ட அந்தாதிகள், கோவைகள், பாமாலை, மஞ்சரி, நீதிவெண்பா என்பன இப்பிரிவில் அடங்குவன. இவற்றுள்ளும் அச்சேறி வெளிவந்தனவும் கையெழுத்துப் படியாகக் கிடைப்பனவும் உள்ளன.

1. அந்தாதிகள்

சதாவதானியார் இயற்றியனவாகக் கிடைக்கப் பெறும் அந்தாதி நூல்கள் இரண்டு. திருநாகூர்த்திரிபந்தாதி, திருக் கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி என்பன அவை. பாவலரின் இளமைக்காலத்திலேயே வெளிவந்தவை இவை. இரண்டு அந்தாதிகளும் ஒரே தொகுதியாக 1900 ஆம் ஆண்டில் சென்னை ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டு வெளியிடப் பட்டுள்ளன. நூலின் தொடக்கத்தில் நூலாசிரியரின் ஆசிரியரான சங்கர நாராயண உபாத்தியாயர் இயற்றிய

''வாணி மலர்ப்புகுத வாழ்சங்கம் வீற்றிய
நாணிக் குறுமுனியு நாகமுறப்—பேணிச்செய்
குத்தம்பிப் பாவலவன் கூறினா னந்தாதிக்
கொத்தம்பி னாகையார்க் கு''

என்னும் நேரிசை வெண்பாவிலான சிறப்புப் பாயிரம் ஒன்று அணி செய்கிறது.

ஒரு பாடலின் அந்தமும் அடுத்துவரும் பாடலின் ஆதியும் ஒரே சீராகவோ அசையாகவோ அமையுமாறு பாடப்படுவது அந்தாதி எனப்படும். இவ்வந்தாதி இலக்கியம் வெண்பாவிலோ கட்டளைக் கலித்துறையிலோ அமையும் என்பர் பாட்டியலார்.

'வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பாய் உரைப்பதந் தாதித் தொகையே'—(212)

என்பது பன்னிரு பாட்டியல். ஒவ்வோர் அடியிலும் முதல் எழுத்து ஒழிய, இரண்டு முதலான பிற எழுத்துக்கள் ஒத்திருக்கப் பல்வேறு பொருட்பயன் தோன்ற அமைக்கப்படும் அந்தாதி திரிபந்தாதியாகும். இத்தகைய சொல்லணியோடு செய்யப்பட்டதுதான் திருநாகூர்த்திரிபந்தாதி. நாகூர் நாயகம் சாகுல் ஹமீது ஒலியுல்லா அவர்கள் மீது பாடப்பெற்ற இத்திரி பந்தாதி நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களாலானது. நூலின் தொடக்கத்தில் நேரிசை வெண்பாவிலான காப்புச் செய்யுள் ஒன்றும் திரிபு என்ற சொல்லணியில் அமைக்கப் பட்டுள்ளது.

நாகூர் நாயகமவர்களின் பெருமைகளையும் காரணச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுவதை நோக்கமாகக் கொண்ட இந்நூலின் கண்ணே பாவலர் அந்நாயகரை,

நற்றிருவுறை நாயகர்	2
சுவன புவிதர்	2
நற்கண்ணியம்	6
கண்ணியந் தந்த கதிக்கடல்	7
மாமதி	10
பொற்சுகம்	10
நாகைக் குருபதி	11
அருட்கடல்	14
கொழும் புகழ் நாகைக் குரு	38
திருவாரண முரைத்தேத்து நன்னாகையர்	53
இன்றே வரந்தர வாய்த்தவர்	77
முது மருந்து	98

என்பன போன்ற தொடர்களால் சிறப்பிக்கின்றார். அந்நாயகர் அடக்கம் கொண்டிருக்கும் நாகூரை,

இதம்புரி நாகை

தங்கமணி தரு நாகை	2
மோனம் தவம்தர வாய்ந்த நன்னாகை	10
உயர் நாகை	18
பலன்படு நாகை	46
சொற்கடங்காத புகழ்செறிந் தோங்கிய தூயமணிக்	
கற்கடங் காதவ வீடுயர் நாகை	57
சொன்னம் படர வளர்தெரு நாகை	60
திருநாகை	82, 90

என்பன போன்ற தொடர்களால் வருணித்துச் சிறப்பிக்கின்றார். இந்நூலின் கண்ணே வரும்,

> 'பொற்பவஞ் சங்கடங் கும்பணை சூழப் புதுமணிசேர்
> பற்பவஞ் சங்கடங் குந்தட நாகைப் பதியுறுசங்
> கற்பவஞ் சங்கடங் கத்துறை காட்டிக் கவலரிய
> எற்பவஞ் சங்கட நீத்தருள் வீருய ரின்னமுதே' (59)

என்பது போன்ற பாடல்கள் திரிபுச் சொல்லணிக்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றன.

மேலும் இந்நூலின் கண்ணே வரும்,

சவி நிக ரா வடி	2
பகன்முனி மம்போல் நந்த	10
கந்த நிகராங் கரம்	14
கமலப் பதம்	15, 24
அம்பாத்திரநேர் கருணாகர	20
வாளம் பரத்தை நிகர்விழி	25
எல்சிறுக்க வரிதருங் கண்	32
பொன்னடி	44
காலத்தனம்	54
மலை போலத் தனம்	54
அடிக்காம் அன்னம் படர் அவ்வனிதையர்	60
குடந்தந்த வார்தரு சேக்கை	63
கற்றூணா வருந்திறல்	72
திருவா னலைவன நேர்பொழில்	76
மலர்ப் பதம்	80
பூம்பதம்	88

என்னும் உவமைகள் இந்நூலை அணி செய்கின்றன.

திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி கோட்டாறு ஞானியார் ஹசரத் செய்கு முகியித்தீன் மலுக்கு முதலியார் அவர்கள் மீது பாடப் பெற்றது. பப்பத்துப் பாடல் விதம் பத்து யாப்புக்களில் அந்தாதித் தொடையில் பாடப் படுவதால், பதிற்றுப் பத்தந்தாதியாயிற்று. இவ்விதமாக இந்நூல்-கலி விருத்தம் 10, கொச்சகக் கலிப்பா 10, கலித்துறை 10, தாழிசை 10, அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் இரு வண்ணங்களில் $(10+10)=20$, எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் மூன்று வண்ணங்களில் $(10+10+10)=30$, எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் 10 — என்றவாறு நூறு பாடல்களைக் கொண் டுள்ளது. பாக்கள் அனைத்தும் மடக்கு என்னும் சொல்லணி வரப் பாடப் பட்டுள்ளது. நூலின் தொடக்கத்தில் அறு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் காப்புச் செய்யுள் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

கோட்டாற்று ஞானியாரவர்களின் பெருமைகளையும் காரணச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுவதை நோக்கமாகக் கொண்ட இந்நூலின் கண்ணே பாவலர் அந்த ஞானியாரை,

'மாமேவு கோட்டாற்றில் மன்னுமுயர்
மெய்ஞ்ஞான வள்ளல்—காப்பு

கோடைக் குருமணி யானநந் தேவு	1
வஞ்ச மாற்றிய வள்ளல்	2
இனியநல் வீடரு ளையர்	5
நைவ கன்ற நலந்தரு நாதர்	10
இன்பசுக மீந்தருளு மணி	13
கோட்டாற்றின் கண்ணுறைந்த கற்பகம்	20
மருக் கொழுந்து	24
மிளிர்மதி	29
அடியார்க் கருளரசு	60
கோடை வள்ளல்	72
தவமி லங்கிய நபிக ணாயகர் சபையி லேகுநற் றகைய	91

என்பன போன்ற தொடர்களால் சிறப்பிக்கின்றார். அந்த ஞானியர் அருள் வாழ்வு கொண்ட கோட்டாற்றை,

மாமேவு கோட்டாறு	காப்பு
கோதிலாத் திருக்கோடை	7
உரத்தை யுறும் தென் கோடை	18
மிகையார் புகழின் கோடை நகர்]	92

சீதமுங்கு காவின் கோடை	33
குலத்தா லுயர் கோடை	51
சுகத்திற் பொலி கோடை	60
பவமகன் றினிதோங்கு கோடை	91
நற்சாதியா மறமேவு கோடை	99

என்பன போன்ற தொடர்களால் வருணித்துச் சிறப்பிக் கின்றார்.

'போதமற்ற நெஞ்சமேயொர் புண்ய மேனுஞ் செய்திலை
ஏத முற்ற வாழ்வைநீ ரெழுத்த தென்று மோர்கி லாய்
சீத முங்கு காவின் கோடை செல்வர் தாண்ம றந்தநின்
நீத மேது நீத மேது நீத மேது நித்தமே' - (33)

'எரியார்புழு வெனவேயென திதயம்பல துயராய்
வரியார்விழி மடவாரிடை மருவாதொரு வரமே
புரியாதுயர் கோடைக்குறும் பொறையேயடி யேனுஞ்
சரியாதவ மளேயுறிற் சருரியாதவ மருளே' - (54)

என்பன போன்ற பாடல்கள் மடக்குச் சொல்லணிக்குச் சிறந்த சான்றுகளாகக் கொள்ளத் தக்கன.

மேலும், இந்நூலின் கண்ணே வரும்

'பூவில் வாசம் பொருந்திய வாறதாய்	
மேவி யெங்கும் விளங்கு பிரான்'	1
பூவின் மெல்லடி	4
ஏடலர்த் தாட்டுணை	8
நறை மலர்த் தாள்	11
மானேர் விழியுடையார்	12
வெற்புதித்த கொங்கையர்கள்	14
நாய் போலு நாணமற்று	17
பேய் போலுந் தானுழந்து	17
வேய் போலுந் தோள்	17
தாய் போலருள்	17
மலர்த்தாள்	21
பூம் பதம்	25
அம்புயப் பதம்	31
செப்பை யொத்த கொங்கை	35
அன்னமென் னடையினார்	37
துவலை நேரருள்	44
திவலை போலும்	44

மலர்ப் பதம்	49
மஞ்சே துணிகரத்தீர்	52
பிணிகள் பஞ்சேரெரிநிக ராயற	52
எரியார் புழுவென	54
அரமே நிகர்த்த விழி	61
கனிவாய்	66
மலைப்புயம்	72
மீனன் முகப் பனியைப் போலப் பொன்னுற	73
மையினை யகற்றி நல்கு மதியென	74
எள்ளள வெனினும்	81

என்னும் உவமைகள் இந்நூலை அணி செய்கின்றன.

கோவைகள்

கோவை என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும்.

''ஆய்ந்த கலித்துறைதான் நானூ றகப்பொருண்மேல்
வாய்ந்தநற் கோவையாம்'' (15)

என வெண்பாப் பாட்டியலும்,

''முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முகந்து
களவு கற்பெனும் வரைவுடைத் தாகி
நலனுறு கலித்துறை நானூ றாக
ஆறிரண் டுறுப்பும் ஊறின்றி விளங்கக்
கூறுவ தகப்பொருட் கோவை யாகும்''-(56)

என இலக்கண விளக்கப் பாட்டியலும்,

''கோவை என்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப''-(135)

எனப் பன்னிரு பாட்டியலும் கோவை பற்றி இலக்கணம் கூறுகின்றன.

கோவை என்பது அகப்பொருள் பற்றியது; கட்டளைக் கலித்துறைப்பா நானூற்றில் அமைவது எனச் சுருக்கமாக இதனை வரையறுக்கலாம். நாற்கவிராச நம்பியின் 'அகப்பொருள் விளக்கம்' கூறும் வரன் முறையில் இக்கோவையின் அகத்துறை நிகழ்வுகள் அமைகின்றனவாதலால், நம்பியகப் பொருள் இலக்

கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்வது கோவை என மேலும் சுருக்கமாக வரையறுத்து விடலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன் முதலாகத் தோன்றிய கோவை இலக்கியம் திருக்கோவையார் என்பர்.[108] இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர், தஞ்சைவாணன் கோவை, அம்பிகாபதிக் கோவை, திருவாரூர்க் கோவை, திருவெங்கைக் கோவை, கோடீசுவரக் கோவை என்பன புகழ்மிக்க கோவைகளாக அறியப்படுகின்றன. இவையன்றி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரிசையில் திருமக்காக் கோவை விஜயன் அப்துர் ரகுமான் அகப்பொருட் பலதுறைக் கோவை என்பனவும் உள்ளனவாகக் குறிப்புக் கிடைக்கின்றது.[109]

சதாவதானியார் இயற்றியனவாக அறியப்படும் கோவை நூல்கள் நான்கு. அவை ஷம்சுத்தாசீன் கோவை, அழகப்பக் கோவை, உத்தம பாளையம் முகம்மது இசுமாயில் கோவை, சசிவோத்தமக் கோவை என்பன. இவற்றுள்ளே ஷம்சுத்தாசீன் கோவை மட்டுமே அச்சில் வெளிவந்துள்ளது. அழகப்பக் கோவையின் 184 பாடல்கள் மட்டும் கையெழுத்துப் படியில் கிடைக்கப் பெறுகின்றன. எஞ்சிய இரண்டும் கிடைத்தில.

ஷம்சுத்தாசீன் கோவை, திருநெல்வேலி மாவட்டம் மேலப் பாளையத்தில் வாழ்ந்த வணிகரும் வள்ளலும் கோட்டாற்று ஞானியார் சாகிபின் ஞான மார்க்கத்தைச் சேர்ந்தவருமான ஷம்சுத்தாசீன் தரகனார் மீது பாடப் பெற்றது. 425 கட்டளைக் கலித்துறைப் பாடல்களையும், கட்டளைக் கலித்துறையிலான ஒரு காப்புச் செய்யுளையும் கொண்டது. மேலப்பாளையம் வித்துவான் வ. அ. மல்க்கான் அலி சாகிபவர்களின் அரும்பதவுரையுடன் 1919-ஆம் ஆண்டில் சென்னை ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. களவியல், வரைவியல், கற்பியல் என்ற மூன்று இயல்களிலும் முறையே 284, 84, 57 பாடல்களைக் கொண்டது.

> ''மாவே தழைத்து வனசமுங் கோங்கு மருவியல்லிப்
> பூவே புணர்ந்து புதுநற வேற்றளி பூண்டுபுகழ்க்
> கோவே யெனவரு வோன்ஷம்சுத் தாசீன் குளிர்சிலம்பின்
> காவே சிறப்ப நடுவிலொர் பூங்கொடி காண்கின்றதே''—

108. சுப்பிரமணியன், ச. வே. — இலக்கிய உணர்வுகள் (1978), பக். 15 & 16

109. அல்ஹாஜ் கலாநிதி முகம்மது உவைஸ் — இஸ்லாமும் இன்பத் தமிழும் (1976) பக். 21

என்பது இந்நூலின் முதற்பாடல். கைக்கிளைத்திணையில் காட்சி என்ற துறையில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது. இங்குத் தலைவியின் மேனியழகை மாந்தளிர் என்றும், முகத்தை வனச மென்றும், கொங்கைகளைக் கோங்கரும்புகளென்றும், வாயை அல்லிமலர் என்றும் கண்களை அம்மலரை மொய்க்கும் வண்டு களென்றும் வருணிக்கும் பாவலர் இவையனைத்தையும் தாங்கித் தளர்வுறும் பூங்கொடியாக அத்தலைவியைப் புனைந்து காணும் பாங்கு பாராட்டத்தக்கது.

> ''போர்தந்த வாட்கைப் புமான்ஷம்சுத் தாசீன் பொருந்
> தலர்போன்
> மார்தந்த கொங்கை மகிழ்நலம் வேட்டு வரவழைத்திக்
> கார்தந்த கங்குற் கனையிருட் சாரலில் கைவிட்டுவெஞ்
> சூர்தந்த நஞ்சே யுனக்கே னொருகொம்பு சூடுதற்கே''—
> (197)

என்பது இரவுக் குறியிடையீடு என்னும் துறையில் தலைவன் தான் குறிப்பிட்ட இடத்திற்குத் தலைவி அல்ல குறியடைந்து வாராமையால் வருந்தித் தன்னூருக்குப் போதல் என்னும் நிகழ்ச்சியில் அமையும் பாடல். தன் நெஞ்சை நோக்கிக் கூறும் தலைவன், தனக்கு ஏமாற்றத்தைத் தந்த அந்தநெஞ்சை 'நஞ்சு' என்க்கொண்டு'சூர்தந்த நஞ்சே' என அழைக்கின்றான். நஞ்சாகிய நீ ஒரு கொம்பையும் (மெ)சூடிக்கொண்டு நெஞ்சாக வந்துள்ளாய். 'உனக்கேன் ஒரு கொம்பு?' எனக் கேட்கும் ஆற்றாமையில், பாவலரின் உருவக அமைப்புத் திறனோடு பாநயம் அமையப் பாடும் நாநயமும் வெளிப்படுதல் காணலாம்.

புகழ்க்கோவே யென வருவோன் 1
தண்டமிழ்க் கோர் கோனோ வென வருள்வோன் 2
தேடித் தனந்தருவோன் 5
சொற்கண்ட வாணர் தொடையொடு பூந்தொடை
சூடுமுயர் மற்கண்ட திண்புய மால் 9
பாட்டாற்றி வந்தநற் பாவலர் வேண்டும்
பரிசனைத்தும் கேட்டாற்ற வல்ல புமான் 13
யோகத்திற் சீரி லுயர்விற் றகையி லுற்ற பல
போகத்திற் சீர்த்த புமான் 27
நீடாழி வைய நிலைபிறழ்ந் தாலு நிலாப்பகலற்
றோடா தொழியிறு மொண்டமிழ் தேர்ந்துணர்ந்
தோர்க்கொருத்தல் கோடானு கோடிதந் தோன் 42
சங்கைக் குரிய புமான் 236

என்னுமிவையெல்லாம் பாவலர் புகழ விரும்பும் ஷம் சுத்தாசீனுக்களித்த புகழ்மாலைகள். இவ்வாறே, ஒவ்வொரு பாடலிலும் புகழ்ச்சி மொழிகள் புனைந்துரைக்கப்படுகின்றன.

மேலும், இந்நூலின் கண்ணே வரும்,

வல்லாருங் கொங்கை	10
அரவந்தத் திருப்பதம்	11
விடங்கொண்ட வேல்விழி	19
இந்திரனுஞ் சசியுங் கடுத்தோங்கி	34
கோரை வளர்ந்துயர் கோபுர மாய்த் தெனும் கொள்கைத் தன்றே	46
மனமாய் விரைந்து	60
விண்பட்ட சோமனும் வெண்மையும் போலவாம் மேதினிக்கோர் பண்பட்ட வள்ளல்	80
கட்புங்கம்	81
கண்ணைப் பொருவு கண்ணாள	110

என்பன போன்ற சிறந்த உவமைகள் இந்நூலை அணிபெறச் செய்கின்றன.

அழகப்பக் கோவை என்பது, காரைக்குடி கல்வி வள்ளல் இராம. அழகப்பச் செட்டியார் மீது பாடப் பெற்றது. இந்நூல் அச்சில் வெளிவரவில்லை. முதல் இயலான களவியலில் உள்ள 184 பாடல்களும் கட்டளைக் கலித்துறையில் அமைந்த காப்புச் செய்யுள் ஒன்றும் கிடைக்கின்றன. இவை கையெழுத்துப்படியாகவே உள்ள பாடல்கள். பாவலர் அழகப்பச் செட்டியாருக்கு எழுதியுள்ள ஒரு சீட்டுக்கவியின் ஐந்து பாடல்களில், மூன்றாவது நான்காவது பாடல்கள் இக்கோவை பற்றிய விவரங்களைக் கூறுகின்றன.

''சொன்னோக்கும் பொருணோக்கும் தொடை
நோக்கும்
நடைநோக்கும் தொடர்ந்த மற்ற
என்னோக்கும் நன்னோக்கா யியலவணி
கற்பனைக ளியைந்து தோன்ற
முன்னோக்கும் புலவரவர் நன்னோக்குத்
தன்னோக்காய் மொழிய யாண்டும்
பன்னோக்கு மால்கவிதை யொருநானூற்
றையைந்து பரிவிற்பெய்து, (3)

''கற்றவருக் காரமிழ்தாய்க் கலையுலகுக்
கருஞ்சுடராய்க் கவினா ரின்பம்

பெற்றவருக் குள்ளொளியாய்ப் பேருலகுக்
கணிநலனாய்ப் பீடு சான்ற
மற்றவருக் காருயிராய் வயங்குநெறி
நீதியறம் மல்கக் காட்டி
அற்றவருக் கருந்துணையா மழகப்பக்
கோவை யென்றொன் றமைத்திட்டேனால்'' (4)

என்பன அப்பாடல்கள். நூலின் பெயர் அழகப்பக் கோவை என்பதும், 425 பாடல்களைக் கொண்டமைந்தது என்பதும் இப் பாடல்கள் கூறும் செய்திகள். கையெழுத்துப் படிகூட முழுமை யாகக் கிடைத்திடாதது கவலைக்குரிய செய்தி. கிடைக்கும் பாடல்களைக் கொண்டு நோக்க,

''மலையே முலைவிழி வாளே மதிமுகம் வாய்குமுதம்
சிலையே நுதலுரை தேனே துடியிடை தேரல்குலென்
னிலையே கெடவெதிர் நின்றாட் கியலிட நீள்புவிக்கோர்
தலையே யெனவரு வோனழ கப்பன் தடம்பொழிலே'
(53)

என்பன போன்ற சுவைமிக்க பாடல்களையும், அப்பாடல் களின் கண்ணே வரும்,

விழிக்குக் குத்திரஞ் செய்யுங் குவளை	7
பாற்கடல்சேர் மாலைப் பொருபுகழான்	14
வாடும் பயிர்க்கொரு மாமழை வந்தென	19
சொற்போ லொருமைய துரம்	29
சைய மொத்தாள்	47
தெளிக்கு மமுதச் செழுமொழி	75

என்பன போன்ற உவமைகளும் இந்நூலின் சிறப்பை வெளிப் படுத்துகின்றன.

அறிஞர் நாமேல் நடமிடுவோன்	1
பண்ணே நிகர் மொழியான்	3
உற்றார்க் கருள் பெருமான்	5
கண்ணேந்து மாமணியான்	11
ஓங்கிய மாதவத்தோன்	13
ஓங்கி வளர்குணத்தோன்	21

என்னுமிவையும் பிற பாடல்களில் வரும் இத்தகைய தொடர் களும் அழகப்பருக்குப் பாவலர் சூட்டும் புகழாரங்கள். இப் புகழாரங்களைப் பெற்ற பின்னரும் வள்ளலின் கை வழங்கிய தாகக் குறிப்பில்லை. வழங்கியிருப்பின், நூல் முழுமையாக அச்சிடப் பெற்று வெளி வந்திராதா?

உத்தம பாளையம் முகம்மது இசுமாயில் கோவை என்பது, மதுரை மாவட்டம் உத்தம பாளையத்தைச் சேர்ந்த மிராசுதாரும் புலமை சான்ற புரவலருமான ஜனாப் கா. சீ. முகம்மது இசுமாயீல் இராவுத்தர் மீது பாடப் பெற்ற தாகத் தெரிகிறது. இந்த நூல் நாயகரின் ஆசிரியர் என்று அறியப்படும் கம்பர் பீர்முகம்மது பாவலருக்கு, சதாவதானிப் பாவலர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் இப்படி ஒரு கோவை எழுதப்படுவதாகவும் அது 425 பாடல்களைக் கொண்டமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார். நூலை இயற்றி முடித்ததாகத் தகவல் இல்லை. பாடல்களும் கிடைக்கவில்லை.

சசிவோத்தமக் கோவை என்பது, திருவிதாங்கூர் அரசின் திவானாக இருந்த டாக்டர் சர். சி. பி. இராமசுவாமி ஐயர் மீது பாடப்பட்டதெனத் தெரிகிறது. பாவலரின் மாணாக்கர் தா. சாத்தான் குட்டிப் பிள்ளையவர்கள் எழுதியள்ள ஒரு கட்டுரை[110] மூலம் இத்தகவல் கிடைக்கிறது. நூலின் ஒரு பாடலேனும் கிடைக்கப் பெறவில்லை.

இவ்வாறு நான்கு கோவை நூல்களைப் பாவலர் இயற்றி யுள்ளார் என அறியப்பட்டாலும், ஷம்சுத்தாசீன் கோவை ஒன்று மட்டுமே முழு நூலாக அச்சிடப் பெற்று வெளிவந்துள்ளது என்பதையும் அழகப்பக் கோவையின் காப்புச் செய்யுள் உள்ளிட்ட 185 பாடல்கள் மட்டுமே கையெழுத்தில் கிடைக் கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாமாலை

'இரக்கத்தின் மொழி[111] என இனங்காட்டிக் குறிப்பிடப்படும் இனிய தமிழில் எழுந்த இடைக்கால இலக்கியங்கள் பலவும் பக்திச் சுவை நனிசொட்டப் படைக்கப் பெற்றவை; இரக்க உணர்வை இதயத்தே ஏற்றி வைப்பவை. சைவ அடியார்களின் தேவார திருவாசகப் பாடல்களும் வைணவ ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தப் பாடல்களும் உண்டு பண்ணும் கனிவையும் பக்திச் சுவையையும் மாந்திய தமிழுள்ளங்களுக்குப் பாவலர் தரும் மற்றுமொரு சுவை விருந்துதான் கல்வத்து நாயகமவர்கள் இன்னிசைப் பாமாலை என்ற நூல். காயல்பட்டினத்தில் தோன்றிக் கீழக்கரையில் புகழோடு வாழ்ந்த அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் மைந்தராகத் தோன்றி

110. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 26

111. தனிநாயக அடிகள் — தமிழ்த் தூது (1961) — பக். 3

அருள் வாழ்வு வாழ்ந்து 'கல்வத்து நாயகம்' என்ற காரணப் பெயரோடு திகழ்ந்த செய்யிது அப்துல் காதிர் என்ற செம்மலின் மீது செப்பப்பட்டதுதான் இப்பாமாலை. கல்வத்து நாயகரின் காரணச் சிறப்பையும் கருதத் தக்க புகழையும் பாடுவதும், அன்னாரை முன்னிலைப்படுத்தி வேண்டுதல் புரிவதன் மூலம் வேண்டுதல் வேண்டாமையிலானின் விழுமிய அருளை நாடுவதும் இந்நூலின் நோக்கம்.

நெஞ்சை நெக்குருகச் செய்ய வல்ல நூறு தரவுக் கொச்சகக் கலிப்பாக்களான இந்நூலின் தொடக்கத்தில்,

''செல்வத்துட் செல்வமெனச் சீர்கெழுகீ ழக்கரைவாழ்
கல்வத்து நாயகத்தின் கண்ணியமே—பல்விதத்து
மல்கவரும் இன்னிசைப்பா மாலைசொல வாய்ந்தவருள்
நல்கவரு மென்றிறையோ னட்பு''

எனவரும் நேரிசை வெண்பாவிலான காப்புச் செய்யுள் உள்ளது. இந்நூல் முதன் முதலாகப் பாவலராலேயே 1940-ஆம் ஆண்டில் நாகர்கோவில் எம். எஸ். எம். பிரஸ்ஸில் அச்சிடப் பெற்று வெளியிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு சென்னை பாவலர் பதிப்பக வெளியீடாக 1960-இல் வெளிவந்துள்ளது.

'கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலையை மற்றுமொரு திருவாசகம் எனலாம்' என்றும், 'இன்னிசைப் பாமாலை ஒரு பக்தி நூலுக்கு வேண்டிய தகுதிகள் அனைத்தும் கொண்டிலங்குகிறது' என்றும் குறிப்பிடுகின்றார் செ. அய்தர் அலி.[112]

'மண்ணாடிப் பெண்ணாடி மாநிதியந் தானாடிப்
புண்ணாடி நின்றநெஞ்சப் புல்லனையு மாளீரோ
உண்ணாடி வந்தவெலா முற்றுணர்ந்து மற்றுரைத்துங்
கண்ணாடி யானீரென் கல்வத்து நாயகமே' (16)

என்ற பாடலில் அமைந்துள்ள ஓசையும் பக்திப் பெருக்கும் மேலே கூறப்பட்ட கருத்துக்குக் கட்டியங் கூறுகின்றன.

'காருறு கண்ணியர் ஐம்புல னாற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதி கண்டாய்'
— (நீத்தல் விண்ணப்பம்)

என்று மாணிக்கவாசகர்[113] பெண் இன்பத்தில் சிக்கித் தவித்ததைக் கூறி அதனின்றும் விடுதலை வேண்டி நின்றதினும்

112. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 149 & 151

113. மாணிக்கவாசகர் — திருவாசகம்

மேலாகப் பாவலர் மண், பெண், பொன் இவற்றின் ஆசையில் சிக்கித் தவித்ததினின்றும் விடுதலை வேண்டி நிற்பது நம்மை வெகுவாகக் கவர்ந்து மெழுகாக உருக வைக்கின்றது. மேலும்,

'விள்ளுண்ட மாமுலையார் வெங்காம வெள்ளம்'-(32)
'பொய்கண்ட நுண்ணிடையார் பூட்டுமைய லார்கலி'-(15)
'பண்ணூறு மென்மொழியார் பார்வை வலை'-(17)
'வரையேற்ற மென்முலையார் மாயவலை'-(25)

என்பன போன்ற தொடர்களால் பெண்ணின்பத்தை வெறுக்கும் பக்திப் புலவராகத் தம்மைப் பறைசாற்றுகின்றார் பாவலர். அத்துடன்,

'முட்குடியை நச்சுணவை முந்நீரை யுற்றருந்த
மட்குடிக ளெண்ணாத வாறென்னை நண்ணீரோ'-(14

எனவும்,

'கள்ளுண்ட நாய்நிகர்த்தேன்'-(32)

எனவும் கட்குடியின் தீமையைச் சுட்டிக் காட்டித் தூய உள்ளம் சிறக்கத் தூண்டுகின்றார்.

பாவலர், சொல்லினைச் செப்பமுற அடுக்கிச் சிறந்த ஓசை நயத்தை வருவிப்பதிலும் அதன் மூலம் கவியைக் கனியாகத் தருவதிலும் வல்லவர் என்பதற்கு இந்நூலே தக்க சான்றாக உள்ளது.

'வானாடும் பூநாடு மற்றனவுந் தானாட'-(9)
'மேல்சோரக் கைசோர மெய்சோர வாய்சோர'-(48)
'மல்லுருக நெஞ்சுருக மாண்புருக'-(69)

என வரும் தொடர்களையும் அத் தொடர்கள் அமையும் பாடல் களையும் வாய்விட்டுப் படிக்குங்கால் இதனை உணரலாம்.

பக்திப் பெருக்கில் விஞ்சித் தம்வயமிழக்கும் நிலையைப் புலப்படுத்தும்,

'பேணுவது நும்மருளே பேசுவது நுந்நாமம்
பூணுவது நும்மலர்த்தாள் போற்றுவது நும்புகழே
நாணுவது நும்மறதி நண்ணுவது நுஞ்சமுகம்
காணுவது நுங்காட்சி கல்வத்து நாயகமே'-(10)

என்ற பாடலும், கல்வத்து நாயகரிடம் 'சரணாகதி' யடைவது போல வீழ்ந்து வேண்டுதல் புரியும்,

'கூட்டுவிப்பீர் சன்மார்க்கம்-கொள்ளுவிப்பீ
ரன்பொழுக்கம்
ஊட்டுவிப்பீர் பொன்னருளை யோங்குவிப்பீ ரின்பநலம்
சூட்டுவிப்பீர் நும்மலர்த்தாள் தோற்றுவிப்பீர்
ஞானநெறி
காட்டுவிப்பீர் முத்திநிலை கல்வத்து நாயகமே'-(99)

என்ற பாடலும் படிப்போர் உள்ளத்தை நாயகர்பால் ஆற்றுப் படுத்த வல்ல நல்ல பாடல்கள். சூஃபி ஞான மார்க்கத்தை வழி நடத்திச் செல்பவரைச் 'செய்கு' என்றும், 'பீர்' என்றும் அழைப்பது வழக்கம். கல்வத்து நாயகரைத் தமக்கு ஞான வழி காட்டும் பீராகக் கருதுவார் போல, மேற்கண்ட 'கூட்டுவிப்பீர்' எனத் தொடங்கும் பாடல் அமைந்துள்ளதோடு, அப்பாடல் கூறும் கருத்துக்கள் ஒருபுறமிருக்க, அதிலுள்ள தொடர்களை அழுத்த மாக வாய்விட்டுப் படிக்குங்கால் 'பீர்', பீர் என ஓலமிட்டு அழைப்பது போன்ற தொனி ஏற்படுவதையும் இப்பாடலின் நயமாகக் கொள்ள இடமுள்ளது.

மேலும், பாவலர் கல்வத்து நாயகர் மீது தாம் கொண்டுள்ள அன்புள்ளத்தையும் ஆர்வப் பெருக்கையும் பக்தியுணர்வையும் வெளிப்படுத்தும் விதத்தில் சூட்டும் புகழாரம் நம்மையும் அந் நாயகர் பால் ஈடுபடுத்த வல்லனவாக உள்ளன.

'கற்பூர தீபமொத்த கல்வத்து நாயகம்'	1
'கண்கண்ட சற்குருவே'	2
'கை கண்ட மாமருந்தே'	15
'கலை வைத்த மாமதியே'	21
'கல்லாரை யும்புரக்கும் கல்வத்து'	35
'நற்றவரும் ஞானநெறி நாடுநரும் நான்மறைநூல் கற்றவரும் போற்றுமெங்கள் கல்வத்து'	75
'கான்கண்ட கற்பகமே.'	95

என்பன அவற்றுட் சில.

இந்நூலின் கண்ணே வரும் உவமைகள் பல எண்ணி வியக்கத் தக்க விதத்தில் புதுமை சான்றனவாகப் பொலிகின்றன.

'விள்ளுண்ட மாமுலையார்
வெங்காம வெள்ளமுண்டு
கள்ளுண்ட நாய் நிகர்த்தேன்' 32

என்பது அதில் ஒன்று. முற்றிலும் புத்தம் புதிய சிந்தனை களைத் தோற்றுவிக்கத் தக்க உவமை இது. பாவலர் தம்மை ஓர் உதவாக்கரையாகி விட்டதாகக் குறிப்பிடும்,

'கக்கிவிட்ட தம்பலொத்தேன்' 19

என்னும் உவமையைப் பாவலரின் தனிப் பெருஞ்சொத்து என லாம். இத்தகைய யாரும் கூறாத—கூற நினைக்காத புதுமை யான உவமைகளைக் கூறிய புலவர் பலர் சங்க காலத்தில் தோன்றித் தம் உவமைத் தொடர்களாலேயே பெயர் பெற் றமையை அறிவோம். செம்புலப் பெயனீரார், தேய்புரிப் பழங் கயிற்றினார், அணிலாடு முன்றிலார் ஆகியோர் இவ்வாறு பெயர் பெற்றோர். இவர்களின் இயற் பெயரை அறியோம், 'கக்கி விட்ட தம்பலொத்தேன்' என்ற உவமையைக் கூறிய பாவலரின் இயற்பெயரும் பின்னோர்க்குத் தெரியாது போயிருக்குமாயின், அவரும் 'கக்கிவிட்ட தம்பலார்' என்ற பெயரிலேயே அறிமுகமாகி யிருப்பார். அந்த அளவுக்குப் புதுமையான-அருமையான உவமை. இத்தொடரின் முன்வரும் பகுதியுடன் சேர்த்து,

'உக்கிவிட்ட நெஞ்சினனா
யுள்ளுடைந்து மெய்ம்மயங்கிக்
கக்கிவிட்ட தம்பலொத்தேன்'

எனப் படித்துச் சிந்திக்கும் போதுதான் இவ்வுவமையின் விளக்கம் புரியும்; பாவலரின் கவித்துவமும் தெரியும். அன்றியும்,

'ஆட்டி வைத்த பம்பரம் போல் அல்லலுற்று' 6
'மால்பிடித்த யானையென மாழாந்து' 18
'கொக்கிவிட்ட சங்கிலிபோல் கூண்டெழுந்து' 19
'ஈற்றாடியுள்ளுதிரும் ஈர்ஞ்சருகு' 27
'துள்ளுண்ட மெம்மறிபோல்' 32
'ஓலெடுத்த பாற்கடலின்
உண்டெழுந்த பைம்புயலின்
சாலெடுத்த மாரியென' 41
'வேட்டகத்தி லுண்ணவெகு
வேட்கைகொளு வீணனென' 57
'மழைப்பால் பட்ட பைந்தளிர்போல்' 68
'மருத்துவந்து நோயகற்று வார் போலும் தாட்கமலம்
பொருத்துவந்து தீதகற்றி 87

என்பன போன்ற சிறந்த உவமைகளும் இந்நூலை மேலும் அணி செய்கின்றன.

கல்வத்து நாயகரால் இந்நூல் சிறப்புற்றதா? பாவலரின் பாவன்மையால் சிறப்புற்றதா? என மருள நினைக்குமளவுக்கு நூற்பொருளும் நுவல் திறனும் ஒன்றை ஒன்று போட்டியிடு கின்றன. இந்நூலை, 'தென்பாண்டி நாட்டு இலக்கியச் சோலை யில் கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை ஒரு வாடாத நறு மலர்; தோத்திரப்பா வரிசையிலே ஒரு காத்திரப்பா; இஸ்லாமிய இலக்கிய வானிலே ஒரு இன்னிலா; தமிழிலக்கியக் கடலிலே ஓர் அறிய முத்து' என வருணனை மொழிகளால் மதிப்பீட்டுச் சான் றிதழ் மூலம் பாராட்டுகின்றார் பேராசிரியர் அப்துல் கபூர்.[114]

பாவலரின் இலக்கியங்களில் இதுவரையில் இரண்டு பதிப்புக் களைக் கண்ட ஒரே நூல் இந்தப் பாமாலையே என்பது ஒரு பேருண்மை.

மஞ்சரி

'குறையில் வாய்மையும் வணக்கமும்
கோதறு குணமும்
நிறையு மானமும் இரக்கமும்
கொடையுநன் னெறியும்
பொறையும் வீரமும் போதமும்
நீதமும் புகழும்
மறையு மோர் உரு வாய்த்திரண்
டெழுமுகம் மதுவே'[115]

என உமறுப் புலவரால் மதிப்பீடு செய்யப்பட்டும் மதிப்பிட இயலாத மாண்புகளைக் கொண்ட, மறை தந்த இறைத்தூதர்— நபிகள் கோமான் முகம்மது (சல்) அவர்களின் வரலாறு, பண்பு, கொள்கை, அறிவுரை என்னுமிவற்றில் அமையும் சிறப்புக்களை - அஃதாவது மான்மியங்களை அந்தமிலாப் புகழ் செந்தமிழின்பம் சிறக்கத் தரும் 'நபிகள் நாயக மான்மிய மஞ்சரி', தமிழுலகுக்குப் பாவலர் அளித்த ஒரு தங்கப் பனுவல். ஒரோவடிமிக்கு வந்த கொச்சகக் கலிப்பாவாலான இக்கனிப்பா மஞ்சரி நூற்றிரண்டு பாடல்களைக் கொண்டது. நூலின் தொடக்கத்தில் நேரிசை வெண்பாவிலான காப்புச் செய்யுள் ஒன்று அணி செய்கின்றது.

இந்நூலின் பாடல்கள், சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'முஸ்லிம்' என்ற நாளேட்டின் வெள்ளி இதழ்

114. அப்துல் கபூர், கா. சதகத்துல்லா அப்பா கல்லூரி ஆண்டு மலர் (1975) பக். 23
115. சீறாப்புராணம் — தாதுற்றஹூாக்குப் படலம் — 102

களில் கிழமை தோறும் தொடர்ச்சியாக வெளி வந்து கொண்டிருந்த போது, படித்து மனப் பாடமாக்கிக் கொண்டவர்களும் கையெழுத்துப்படி எடுத்துப் பொன்னே போல் போற்றிக் காத்து வைத்துக் கொண்டவர்களும் பலர். அன்னோர்களில் ஒருவரான உத்தமபாளையம் கா. சீ. முகம்மது இசுமாயில் அவர்கள் தம் சொந்தப் பொருட் செலவில் அச்சிட்டு இலவச வெளியீடாக 1976-இல் வெளியிட்டுள்ளார்.[116] இந்நூலின் முதற்பதிப்பு இதுவே.

> வையமெலாம் வாழ்த்தெடுப்ப வந்த நபிநாயகத்தின்
> துய்யசெழு மான்மியத்தைச் சொல்லுதற்கே—ஐயமறக்
> கூராதோ வான்கருணை கூர்ந்துவந்து வாய்மைநலந்
> தாரோரோதோ எம்மிறையோன் சார்பு'

என்றவாறு காப்புச் செய்யுளிலேயே தாம் கூறப்புகும் பொருளை அழகும் ஆற்றலும் நிறைந்த சொற்களால் கூறும் பாவலர், நூலின் முதற்பாடலில்,

> சுத்தபர வெட்டவெளி தோன்றுபொரு ளத்தனைக்கும்
> ஒத்தமுதற் காரணமாய் ஓங்குமொளி தாங்கியுறு
> வித்தரிய மக்கநகர் வீற்றிருந்து மாற்றமற
> இத்தரையில் பெற்றபுகழ் ஏத்தற் கெளிதோயோ
> இன்பநபி நாயகமே ஏத்தற் கெளிதோயா?' —(1)

என்று கூறி, எவ்வளவுதான் ஆற்றல் மிக்க புலவராயினும் போற்றத்தக்க மொழியிலாயினும் ஏற்றமிகு நாயகரை—அந்நாயகர் பெற்ற புகழை ஏத்திக்கூற இயலுமோ என வினா எழுப்புவதன் மூலம் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தினாலும், கல்வியிற் பெரிய கம்பன் இராம காதையை 'ஆசை பற்றி அறையலுற்றது' போல,[117] அண்ணலார் மான்மியத்தை அறைகின்றார் போலும். அடுத்து வரும்,

> 'ஒன்றுதெய்வம் ஒன்றுமதம் ஒன்றுமக்கள் சாதியென
> நன்றுபெறக் கூடியவை நாட்டிநவில் நான்மறையும்
> குன்றுபெறு தீபமெனக் கோத்தளித்துக் காத்தவுங்கள்
> துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கெளிதோயோ?' (2)

என்ற பாடலில் அமையும் 'உயர்மாபெருமை' என்ற அடைமொழித் தொடர் மூலம் அம்மாநபி நாயகரின் பெருமை அளவிட முடியாத உயர்வுடையது என்பதையும் புலப்படுத்துகின்

116. இதன் பதிப்பாசிரியர் நாஞ்சில் ஆ. அரிது
117. கம்பராமாயணம் — பாயிரம் — 4

றார். இவ்வாறு அடைமொழித் தொடரால் தாம் எண்ணியதைச் சாதித்துவிடும் சதாவதானியார், இதே உத்தியைக் கையாண்டு வேறுபல பொருள்களையும் வேறு பல இடங்களில் அடைமொழித் தொடர்களைப் பயன்படுத்திக்கூற வந்த பொருளுக்குத் தாம் கருதிய விசேடமான பொருட்பயன் ஏற்படச் செய்வதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இவ்விதத்தில் அமையும்

மாமசையன்	16
மாண்ட சவம்	25
தூய தொழுகை	26
அற்றமிலா வண்கணர்	32
அற்றமிலா வெந்துயர்	34
செம்மையறு கைம்மை	35
துய்ய மணம்	41
துய்ய சலாம்	51
நல்ல அடை	61
தூய இசுலாம்	85
செய்ய புகழ்	91
துய்ய செழும் போர்வை	92

என்னும் அடை மொழித் தொடர்கள் இந்நூலின் தனிச்சிறப்பு. இங்ஙனம் தக்க சொல்லைத்தக்கஇடத்தில் பயன்படுத்திச் சிறந்த பொருளைப் பெறவைத்திடும் முறை சிறந்த கவிஞனுக்கு இயல்பு எனவும், அடைமொழி என்று கருதி நாம் அதனைத்தள்ளி விடுதல் ஆகாது என்றும் கூறுவர்.[118]

இந்நூலின் கண்ணே ஓசை நயம் சிறக்க வரும் சொற்றொடர்களான,

'ஓங்குமொளி தாங்கியுறு'	1
'கோத்தளித்துக் காத்தவுங்கள்'	2
'அட்டல் வெட்டல்'	6
'ஊறு செய்து மாறினரும்'	10
'செம்மையறு கைம்மை'	35
'மண்டியிட்டுப் பண்டிவிம்ம'	43
'நண்ணாரும் எண்ணுநெறி'	89

என்பன போன்ற தொடர்கள் பாவலரின் சொல்லாட்சித் திறனுக்கு நல்ல சான்றுகளாகின்றன.

---

118. ஞான சம்பந்தன், அ. ச. — இலக்கியக் கலை (1960) பக். 117, 118

தெள்ளத் தெளிவான ஆதாரங்களோடு கூடிய-உவமை களுக்கப்பாற்பட்ட தனி நாயகமாக விளங்கும் நபிநாயகரின் வாழ்க்கை வரலாற்றை, நிகழ்ச்சிகளை, அறிவுரைகளைப் பொருளாகக் கொண்டு பாடப்படும் மான்மிய மஞ்சரி யாதலால், இந்நூலின் கண்ணே உவமையணிக்குச் சிறப்பிடம் கொடுக்கத் தேவையில்லையெனினும், அவ்வரலாற்று நாயகரை யும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் எவ்விதத்திலும் பாதிக்காத விதத்தில் அமையும்,

'குன்றுபெறு தீபமென'	2
'மாமழை போல்'	9
'பெண்ணினத்தை ஆடவர்தாம் பெற்றுவக்கும் சங்கமமாய்'	33
'உன்மத்த நாய்போலும் உள்ளுணர்வு தேக்கி'	45
'சோம நபி'	48, 92
'திங்கள் நபி	84

என்னும் உவமைகள் பாவலரின் கவித்துவத்துக்குச்சான்று கூறி நிற்கின்றன. எனினும், இந்நூல் குறிப்பிடப்பட்ட உவமைகளால் அழகு பெறாமல் நுவலும் பொருளர்லேயே அழகு பெறுகின்றது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

நீதிவெண்பா

மக்கள் குலம் மாண்பும் மகத்துவமும் பெற்று உய்வதற்கான நீதிகளைக்கூறும் வெண்பாக்கள் சில பாவலர் பாடியுள்ளன வாகக் கிடைக்கின்றன. இவ்வாறு கிடைப்பன எட்டு வெண் பாக்கள். இவை, 'நீதிவெண்பா' என்ற தலைப்பில் 'சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் நினைவு மலரில்' வெளியிடப்பட்டுள்ள ஆறும், அம்மலரில் பாவலரின் மாணாக்கர் முதுபெரும் புலவர் தா. சாத்தாங் குட்டிப்பிள்ளை எழுதியுள்ள கட்டுரை யொன்றில் மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ள ஒன்றும், பாவலரின் மைந்தர் ஜனாப் கே. பி. எஸ். ஹமீது அவர்கள் வைத்திருக்கும் கையெழுத்து ஏட்டில் ஒன்று மாகக்கிடைக்கின்றன. இது ஒரு தனிநூல் என்றும் நூறு வெண்பாக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றார் உத்தம பாளையம் கா. சீ. முகம்மது இஸ்மாயில் அவர்கள்.[119]

கிடைக்கப் பெறும் எட்டு வெண்பாக்களில் கல்வியின் சிறப்பு, கற்றோரிடம் அமையும் பணிவு, ஏவாமக்கள் மூவா

119. கா. சீ. முகம்மது இஸ்மாயீல் — பேட்டி — 1-10-1978

மருந்து, நட்பாராய்தல், உயர்ந்தோரின் உளச்சீர்மை, கூடியோர் பிரிந்தால் உயிர் வாழார் என்பது, பொல்லார்க் குரைக்கும் நல்லபோதனைகள் நில்லா, பொல்லாவழக்குத் தொடுத்தல் கூடாது-என்னும் விழுமிய பொருள்கள் விளம்பப் படுகின்றன. இப்பொருள்களைத் தெளிவுபடுத்தப் பாவலர் பயன் படுத்தும் பொருத்தமான உவமைகள் இப்பாக்களைப் பெரிதும் நயம் சிறக்கச் செய்கின்றன.

'காய்த்தகிளை
பாரம் பொறாமல் படிந்துதலை தாழ்த்தலல்லால் நேர
நிமிருமோ நின்று' 2
'ஆடுமயில் பச்சோந்தி பாற்படா' 4
'அந்திமுல்லை தன்மணத்தை யென்சொலினும்
தந்தருள்வ தன்றி மற்றோர்புன்மணத்தை
நல்கிடுமோ பூத்து' 5
'பாலுற்ற நீருமப் பாலாம் பகுப்பிலல்லால்
மேலுற்றுத் தீக்குளித்து வேகுங்காண்' 6
'இல்லிக் குடத்தகத்தே யள்ளியள்ளிக் கொட்டுநீர்
மற்றத்தடத்தகத்தே நின்றிடுமோ சார்ந்து' 7

என்பன அவை.

'பாவலர் அவர்களுடைய வெண்பாக்களை நான் படிக்கும் போது நளவெண்பா இயற்றிய வெண்பாவிற் புகழேந்தி தான் மீண்டு வந்து மகாமதிப் பாவலராய் அவதரித்தாரோ என எண்ணி என் உள்ளம் மகிழ்ந்திருக்கின்றேன்' என்கிறார் தா. சாத்தாங் குட்டிப்பிள்ளை.[120] 'ஒருசோறுபதம்' என்பதற் கிணங்கக் கிடைக்கும் எட்டுவெண்பாக்களைக் காணும் நமக்கு, ஒருபானைச் சோறாகிய நூறு வெண்பாக்களும் கிடைத்தால் எவ்வளவு மகிழ்வு கொள்ள முடியும்? கிடைக்குமா?

இதுகாறும் கண்டவற்றால், விளக்கப்பட்ட நூல்களில் அச்சில் வெளிவந்தவை ஐந்து நூல்கள் எனவும், கையெழுத்துப் படியாகவே பாடற்குறையுடன் உள்ளவை இரண்டு நூல்கள் எனவும் பெயர் மட்டும் கிடைப்பன இரண்டு என்றும் அறிய முடிந்தது. அச்சில் வெளிவந்த ஐந்து நூல்களையும் கூட அறிஞருலகம் அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. இந்த நிலையில் நான் இங்கே குறிப்பிட விரும்புவது பாவலரின் சதாவதானத்தை மட்டும் நினைத்துக் கொண்டிராமல் அவரது

120. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 25

இலக்கியங்களைப் பலரும் படிக்கும் படிச்செய்ய என்னென்ன செய்ய இயலுமோ, அத்தனையும் செய்ய முன்வரவேண்டும் மென்பதே.

முதலாவதாக, அச்சில் வெளிவந்துள்ள ஐந்து சிறந்த நூல் களுக்கும் மறுபதிப்பு வரவேண்டும்.

இரண்டாவதாக, அரைகுறையாகக் கையெழுத்துப் படியாகக் கிடைக்கும் அழகப்பக்கோவை, நீதிவெண்பா இரண்டின் முழுவடிவத்தையும் தேடிப்பிடித்துப் பதிப்பிக்க வேண்டும்.

மூன்றாவதாக, பெயர் மட்டும் கிடைக்கும் இரண்டு கோவை நூல்களையும் கண்டுபிடித்து வெளியே கொணரவேண்டும்.

இவற்றுக் கெல்லாம் மேலாக வெளிவந்த வெளிவரப் போகும் மேற்படி நூல்களைப் பலரும் படித்திடவகை செய்ய வேண்டும்.

இச் செயல் திட்டங்கள் நிறைவேற இக்கூட்டம் ஏதேனும் இயன்றதைச் செய்யவேண்டும். செய்யும் என்றே நம்புகிறேன்.

II உதிரிப் பாக்கள்

சதாவதானியார் தம் வாழ்நாளில் பல்வேறுபட்ட காலங் களின் பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் தன்னுணர்ச்சியாகவும், பிறர் தூண்டுதலாலும் வேண்டுதலாலும் பாடிய பாக்களாகக் கிடைக்கப் பெறுவன அனைத்தும் இங்கே உதிரிப்பாக்கள் எனப் படுகின்றன. இவற்றுள் சில சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலரிலும், வேறு சில, பலர் எழுதிய கட்டுரைகளில் மேற்கோள்களாகவும், பல கையெழுத்து ஏடுகளிலிருந்தும் கிடைக்கின்றன. கிடைக்காதவை எத்தனை எத்தனையோ? கிடைப்பனவற்றைத் தொகுத்து வைத்தால் அறிவுரைப்பாக்கள் அவதானப்பாக்கள், ஆற்றுப்படை, கடவுட்பாக்கள், கண்டனப் பாக்கள், கையறு நிலைப்பாக்கள், சாற்றுக்கவிகள், சிலேடை, சீட்டுக்கவிகள், நபி புகழ்பாக்கள், மனிதரைப் புகழும் புகழ்ச்சிப் பாக்கள், மொழிபெயர்ப்பு, வாழ்த்துப்பாக்கள், பிற தனித்தனிப் பாக்கள் என்றவாறு பாகுபாடு செய்யலாம். இவை வெண்பா, அகவல், விருத்தம், கட்டளைக் கலித்துறை, கொச்சகம் ஆகிய யாப்பு வடிவங்களையும் இசை வடிவங்களையும் கொண்டு இயற்றப்பெற்றவை.

1. அறவுரைப் பாக்கள்

'நோன்பை மறவாதே', 'கள்ளைக் குடியாதே' என்னும் தலைப்பு களிலான பாக்கள் இரண்டும் இதில் அடங்குவன; ஒவ்வொன்றும்

தனித்தனியாக ஒரு பல்லவி, ஏழு சரணங்கள் கொண்ட இசைப் பாடல். இவற்றுள் முறையே இஸ்லாத்தின் ஐந்து கடமைகளுள் ஒன்றான நோன்பின் மாண்பும், இஸ்லாம் வெறுக்கும் கட்குடியின் தீங்கும் தெளிவாகக் கூறப்படுகின்றன. அஃதாவது, நோன்பின் பயன்களையும் கட்குடியின் கேடுகளையும் பட்டியல் போட்டுக் காட்டி அறிவுறுத்துகின்றார் பாவலர். இங்கே,

'பித்தம் பிடித்தலையும் பேய்ப்பட்டி போலும்'
(கள்-குடி-5)

என்ற தொடரில் வரும் உவமை கட்குடித்தவன் நிலையைப் படம் பிடித்துக் காட்ட வல்லது. அதில் வரும் 'பட்டி' என்ற சொல் நாயைக் குறிக்கும் குமரிமாவட்டத்து வழக்கு. ஏதேனுமொரு விதத்தில் பித்துப்பிடித்து அலைபவர்களைப் 'பேய்ப்பட்டி' என்றே பட்டப்பெயர் சூட்டி அழைக்கும் வழக்கம் அம் மாவட்டத்தில் இன்றும் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

2. அவதானப் பாக்கள்

கோட்டாற்றில் 1906 ஆம் ஆண்டில் நிகழ்வுற்ற சோடசாவதானத்தின்போது பாடப்பெற்ற மூன்று பாக்களும், சென்னையில் 1907 ஆம் ஆண்டில் நடைபெற்ற சதாவதானத்தின் போது பாடப்பெற்ற நான்கு பாக்களும் இதில் அடங்குவன. குறள்வெண்பா ஒன்றும், நேரிசை வெண்பா மூன்றும், கலிவிருத்தம் ஒன்றும், கட்டளைக்கலித்துறை இரண்டுமாக அமைந்துள்ளன. இவற்றுள்ளே, சதாவதானத்தின்போது பாடப் பணிக்கப் பெற்ற கடவுள் வாழ்த்துப் பாடலான,

'சிரமா லுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்'

என்ற பாடலில் வரும் 'சிரமாறுடையான்' என்ற தொடர், சிரத்தில் கங்கையாற்றையுடைய சிவன், மாறுபட்ட சிரத்தை யுடைய கணபதி, ஆறு சிரங்களையுடைய முருகன், ஆற்றின் நடுவே சிரம் வைத்துத் துயிலும் திருமால், தலையாய நல்வழியைக் காட்டும் அல்லாஹ் என்றவாறெல்லாம் பொருள் விரியப்பெற்றுப் பாவலரின் சிலேடைத் திறனோடு சமயப் பொதுமையையும் காட்டி நிற்கும் சிறப்புப் பெற்ற ஒன்றாகும்.

'விராடனையே பெண்ணெனலா மே'

என ஈற்றடி கொடுக்கப்பாடிய நேரிசை வெண்பாவில் மூன்றாம் அடி இறுதியில் 'சொன்ன' என்பதன் வலித்தல் விகாரமான

'சொற்ற' என்ற சொல்லை அமைத்துச் சொல்+தவிராள்+தனையே எனப் பிரித்துப் பொருள் கொள்ள வைத்த பாவலரின் சொல்விற்பனத்தை வியவாதார் யாரே? இவ்வாறே அவதானப் பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புப் பெற்று விளங்குகின்றன.

3. ஆற்றுப்படை

சதாவதானியார் இயற்றியதாகச் சிறிய ஆற்றுப்படை ஒன்று கிடைக்கின்றது. அது காரைக்குடி வள்ளல் அழகப்பச் செட்டியாரிடம் புலவர்களை ஆற்றுப்படுத்தும் விதத்தில் அமைவது. பழைய ஆற்றுப்படை நூல்களின் யாப்பு வகையைப் பின்பற்றாமல், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பத்தில் இவ்வாற்றுப்படையை அமைத்திருக்கின்றார்.

'புத்தம் புதிய தமிழ்தேடிப்
புல்லர்க் கென்றும் புகழ்பாடி
நித்தம் சலித்தீர் கவிப்புலவீர்' —1

'ஈயாக் கொடியர் வாயில்தொறு
மேறி யிறங்கி யேதுமின்றிப்
பேயாப் பறந்தீர் கவிப்புலவீர்' —2

'வாணாள் முழுதும் மிடிக்கொடுமை
வருத்த வருந்தி மனங்கலங்கி
வீணா யலைந்தீர் கவிப்புலவீர்' —3

'பொன்னே யனைய பன்னூலும்
போற்றிப் படித்துப் புகழ்படைத்துங்
கொன்னே யலைந்தீர் கவிப்புலவீர்'—4

'பேணுங் கலைகள் முழுதுணர்ந்தும்
பிழைக்கும் வழியொன் றோராமல்
வீணுக் கலைந்தீர் கவிப்புலவீர்' —5

'வருமுன் னோடிக் கதவடைத்து
மறையுங் கயவர் தமைவாழ்த்திப்
பெருமன் னனென்பீர் கவிப்புலவீர்' —6

'ஊரும் நாடும் ஒன்றுவிடா
தோடி யலுத்தே யுள்ளுடைந்து
சோரும் பெரிய கவிப்புலவீர்' —7

'கொடுக்கக் கருதாக் கொடியோரைக்
கொண்மூ தாரு கொழுந்தேனென்
றடுக்கத் துணிந்தீர் கவிப்புலவீர்' —8

'புலையும் புரட்டும் புனைசுருட்டும்
பொய்யும் படைத்த புல்லோர்க்கென்
னிலையும் இசைப்பீர் கவிப்புலவீர்' —9

'கோவை மாலை தூதுசந்தம்
கூறித் தினமும் கொடியோர்தஞ்
சேவைக் கெழுந்தீர் கவிப்புலவீர்' —10

என்றெல்லாம் அழகப்பரிடம் செல்லாத புலவர்களை விளிக்கின்றார்.

'கல்லாத ஒருவனைநான் கற்றா யென்றேன்
காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே யென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின்றேனே'

எனப் புலவன் ஒருவன் வருந்திப் பாடியதாகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.[121] இப்பாடலை நினைவூட்டுவது போலப் பாவலரின் மேற்கண்ட அடிகள் காணப் பட்டாலும் இப்பாணி முற்றிலும் புதிய பாணி.

'உடுக்கப் படுக்க மடுக்கவெலாம்' —(8)

எனவரும் தொடர் பாவலர்க்கே உரிய அடுக்குத்தொடர் மிடுக்கு நடை.

'பொன்னே யனைய பன்னூல்' —(4)
'காவை நிகர்த்த அழகப்பன்' —(10)

என்பன இதில் வரும் உவமைகள்.

4. கடவுட் பாக்கள்

அச்சக அதிபர் இட்டா பார்த்தசாரதி நாயுடுவின் வேண்டுகோளுக்கிணங்கப் பாடப்பட்டதாகக் குறிப்பிடப்படும்,

உருமகளை அயனாவில் உறைமகளைப்
பொறிமகளை உலகுக் கெல்லாம்
குருமகளை அன்பர்புகழ் குலமகளை
மலர்மகளைக் குறைதீர் செல்வத்

121. தமிழின் மறுமலர்ச்சி (1953) பக். 47

திருமகளின் மருமகளை நிலமகட்கும்
கலைமகளைச் செவ்வி வாய்ந்த
ஒருமகளை எனக்கருள வருமகளைப்
பெருமகளை உன்னல் செய்வாய்'

என்ற சரசுவதி துதியும், நண்பர் ஒருவரின் வேண்டுகோளுக் கிணங்கப் பாடப் பெற்றதாகக் குறிப்பிடப்படும்,

'கன்றெடுத்துக் கனியுகுத்துக் கருதுமுல
கோரடியிற் கவினச் சேர்த்துக்
குன்றெடுத்துப் பகுநிரைகாத் தாயர்குலக்
கோபியர்கள் கொண்ட கூறை
சென்றெடுத்துத் தூதுரைத்து வெண்ணெயொடு
தயிர்நெய்பால் சேர ஒன்றாய்
அன்றெடுத்துத் தின்றதகை யாதவனை
மாதவனென் றகத்துள் வைப்பாம்!

என்ற கிருஷ்ணதுதியும் இத்தலைப்பில் அடங்குவன. பிறர் வேண்டுகோளுக்கிணங்கப் பாடப்பெற்றவையாதலால், இவ்விரண்டும் பாவலரின் சொந்தக் கடவுட் கொள்கையைப் பாதிக்காதவை என்லாம். எனினும், பாவலன் பரந்த உள்ளத்துக்கு எடுத்துக்காட்டாக இவற்றைக் கருதலாம். சரசுவதி துதியில் வரும் உருமகளை, உறைமகளை, பொறி மகளை, குருமகளை, குலமகளை, மலர்மகளை திருமகளின் மருமகளை, கலைமகளை, ஒருமகளை, வருமகளை, பெருமகளை என்ற தொடர்கள் படிப்போர்க்கும் இன்பம் தந்து பாவலரின் சொல்லாற்றலைப் புலப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. அவ்வாறே, கிருஷ்ணதுதியில் வரும் கன்றெடுத்து, குன்றெடுத்து, சென்றெடுத்து, அன்றெடுத்து என்ற தொடர்களும் இன்பம் பயப்பன.

5. கண்டனப் பாக்கள்

தமக்குத் தீங்கு செய்த நெல்லையப்பர் என்ற செல்வந்தரை வசைபாடிச் சபிக்கும் விதத்தில் அமைந்த அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் நான்கினைக்கொண்ட **'நெல்லையப்பர் அறம்'** என்ற பாடலும், சீரிய சூரியர் என்பவர் விடுத்த பாடலுக்கு விடையாகக் கொடுத்த நேரிசை வெண்பா ஒன்றும் கண்டனப் பாக்கள் எனக் கொள்ளத்தக்கன.

6. கையறு நிலைப் பாக்கள்

சதாவதானிப் பாவலர் பாடியனவாகக் கிடைக்கப் பெறும் கையறுநிலைப் பாக்கள் மூன்று. கணபதி ஆச்சாரி என்னும்

புலவர் பெருமான் மறைந்தபோது பாடிய அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஐந்தும், ஒரோவடிமிக்கு வந்த கொச்சகக் கலிப்பா ஏழும் கொண்டது; திருவதாங்கூரை ஆண்டுகொண்டிருந்த சித்திரைத் திருநாள் மன்னரின் மருமகனான அவிட்டந் திருநாள் மறைந்தபோது பாடிய நேரிசை வெண்பா நான்கும் இன்னிசை வெண்பா ஒன்றும் கொண்டது; சென்னைச் செல்வந்தரும் வள்ளலுமான ஹாஜிஜமால் முகம்மது மறைந்தபோது பாடிய நேரிசை வெண்பா ஒன்றும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பத்தும் கொண்டது என்பன அம்மூன்றும். கையறுநிலைப் பாக்களுக்கெனத் தனியான ஒரு யாப்பு வகையைப் பின்பற்றாமல் தாம் விரும்பியவாறு பல்வேறு யாப்பு வகைகளைப் பாவலர் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவிட்டந்திருநாளுக்குப் பாடிய கையறுநிலைப் பாடல் உயிர் கவர்ந்து சென்ற எமனையே முன்னிலைப்படுத்திப் பாடும் புதுமையான தொன்று.

'பாவிக் கொடுங்கூற்றே நீதருமன்
என்றபே ரேற்ற தெதற்கு?'—(2)
'எருமைப் புறத்தலைந்த ஈன மதியல்லால்
பெருமைகொள வேறுமுண்டோ பேசு'—(5)

என்ற தொடர்கள் அவலச் சுவையிலும் ஒருநகைச் சுவை கலந்த அற்புதமான தொடர்கள்.

7. சாற்றுக் கவிகள்

''பாவலர் அவர்களிடம் பாடம் கேட்டு வந்த நாளில் சாற்றுக்கவிக்காகவும் வாழ்த்துப் பாக்களுக்காகவும் பலரும் வருவதுண்டு. வருவார் விருப்பத்தை அறிந்து உடன்தானே செய்யுட்களை எழுதிக் கொள்ளும் படிச் சொல்வார்கள்-எனது இருபத்தைந்தாண்டு பழக்கத்தில் செய்யுட்கள் கேட்டு வருவாரிடம் முடியாது என்று சொல்லவோ பின்னர் வாருங்கள் எழுதித் தருகிறேன் என்று சொல்லவோ நான் கேட்டதில்லை'' என்கிறார் பாவலரின் மாணாக்கர் சாத்தாங் குட்டிப் பிள்ளை.[122] இக்கூற்றுப் படிப் பாவலரிடமிருந்து சாற்றுக்கவிகளைப் பெற்றோர் பலர் எனத் தெரிய வந்தாலும் நமக்கு இப்போது இருபத்து மூன்று சாற்றுக்கவிகளே கிடைக்கின்றன.

1. கடைய நல்லூர் செமகுதுமான் லெப்பை சாகிபு, மேலப் பாளையம் செய்கு பசீறு லெப்பை சாகிபு ஆகியோர் இயற்றிய

---

122. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர் (1961) பக். 25

ஞானோதய புஞ்சம்' (1901) என்ற நூலுக்கு எழுதிய தோத்திரப் பதிகம், எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் பத்துக் கொண்டது.

2. கோட்டாறு செய்கு முகம்மது மதீனா ஆலம் சாகிபு அவர்கள் இயற்றிய 'வேதாந்த ரத்தினமாலை' (1903) என்ற நூலுக்கு வழங்கிய சிறப்புப்பாயிரம், அறுபது வரிகள் கொண்ட நிலை மண்டில ஆசிரியப்பா.

3. கோட்டாறு மஷாயிகு செய்கு முகம்மது மீரான் முகியித்தீன் காதிரிய்யா சாகிபு இயற்றிய 'புகழ்ச்சி மாலை' (1913) என்ற நூலுக்கு வழங்கிய சாற்றுக்கவி, பதினெட்டு வரிகள் கொண்ட நிலை மண்டில ஆசிரிப்பா.

4. கோட்டாறு செய்கு பாவா செய்கு சுலைமானுல் காதிரி இயற்றிய 'மெய்க்குருக்கும்மி,முனா ஜாத்து' (1910) என்ற தொகுதிக்கு எழுதிய சாற்றுக்கவி, பதினெட்டு வரிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பா.

5. மேற்படி செய்குபாவா இயற்றிய 'மெய்ஞ்ஞானத் தங்கப் பாட்டு மாலை' (1916) என்ற நூலுக்கு வழங்கிய சாற்றுக்கவி, இருபத்திரண்டு வரிகள் கொண்ட நேரிசை ஆசிரியப்பா.

6. மேற்படி செய்கு பாவாவின் 'சிபா மாலை' (1916) என்ற நூலுக்கு எழுதிய சாற்றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

7. மேற்படி செய்கு பாவாவின் 'திரு மெய்ஞ்ஞானச் சாகரத் திருப்பாடற்றிரட்டு' (1922) முதல் இரண்டு பாகங்களுக்கான சாற்றுக்கவி நாற்பது வரிகளைக் கொண்ட நிலை மண்டில ஆசிரியப்பா.

8. மேற்படி நூலின் மூன்றாம் பாகத்தின் (1926) சாற்றுக்கவி பத்தொன்பது வரிகளைக் கொண்ட நிலை மண்டில ஆசிரியப்பா.

9. மேற்படி நூலின் நான்காம் பாகத்திற்கான (1926) சாற்றுக்கவி முப்பத்திரண்டு வரிகள் கொண்ட நிலை மண்டில ஆசிரியப்பா.

10. நாகூர் தர்கா வித்துவான் குலாம் காதிறு நாவலர் இயற்றிய 'ஆரிபு நாயக வசனம்' (1904) என்ற நூலுக்கு இயற்றிய பாயிரம், அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஐந்து.

11. இலங்கை பதுறுத்தீன் புலவர் இயற்றிய 'முகியுத்தீன் புராணம்' (1907) என்ற நூலுக்கு இயற்றிய சிறப்புப்பாயிரம். இருநூற்றெண்பத்தெட்டு வரிகளைக் கொண்ட நேரிசையாசிரியப்பா.

12. அருட்கவி முகம்மது ஹனீபா புலவர் இயற்றிய 'அனு கூல புஞ்சம்' என்ற நூலுக்கு இயற்றிய சாற்றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

13. இலங்கை முகம்மது காசீம் லெப்பை இயற்றிய 'உம் தத்துல் இஸ்லாம்' என்ற நூலுக்குக் கொடுத்த சாற்றுக்கவி, அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஐந்து.

14. அப்துல் கனி என்பார் இயற்றிய ஞான நூல் ஒன்றுக்கு வழங்கிய சாற்றுக்கவி, நாற்பத்திரண்டு வரிகளைக் கொண்ட நிலை மண்டில ஆசிரியப்பா.

15. 'நண்பன்' என்ற பெயரில் வெளிவந்த இதழுக்கு அளித்த வாழ்த்துப்பா, நேரிசை வெண்பா ஒன்று.

16. செண்பக ராமன் பள்ளு என்ற நூலுக்கு அளித்த சாற் றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

17. பதுமனாபன் என்பார் இயற்றிய நூல் ஒன்றுக்குக் கொடுத்த சாற்றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

18. கவிஞர் தே. ப. பெருமாள் இயற்றிய 'சொன் மாலை' என்னும் நூலுக்கு வழங்கிய சாற்றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

19. ஆனந்தம் பிள்ளை என்பார் இயற்றிய 'தென் சுசிந் தைத் தாணுமாலை' என்னும் நூலுக்குக் கொடுத்த சாற்றுக்கவி, எண் சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்று.

20. சிவராமலிங்கம் பிள்ளை என்பார் இயற்றிய 'ஆய்க்குடி முருகன் பிள்ளைத் தமிழ்' என்ற நூலுக்கு அளித்த சாற்றுக்கவி, அறு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்று.

21. அரிதாசன் என்பார் இயற்றிய நூல் ஒன்றுக்கு எழுதிக் கொடுத்த சாற்றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

22. செல்லையா என்பார் இயற்றிய நூல் ஒன்றுக்களித்த சாற்றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

23. ருக்மணியம்மாள் என்பவர் இயற்றிய நூலுக்கு அளித்த சாற்றுக்கவி, நேரிசை வெண்பா ஒன்று.

இச்சாற்றுக் கவிகள் சிலவற்றுள் இறைவனையும் இறைத் தூதர் நாயகம் (சல்) அவர்களையும் புகழ்வதோடு, ஒருசில வற்றுள் சில ஊர்களின் இயற்கை வளத்தையும் தம் கற்பனை யாற்றல் வெளிப்படுமாறு வருணிப்பதைக் காண முடிகிறது.

8. சிலேடை

சொற்களையும் சொற்றொடர்களையும் சேர்த்தும் பிரித்தும் வேறு வேறுபட்ட பொருள்களை உணருமாறு செய்யத் தக்க பாக்களை இயற்றுவதை முந்தைய தமிழ்ப் புலவர்கள் தம் திறமைக்குச் சான்றாகக் கருதி வந்துள்ளனர். இவ்வாறு இயற்றுங்கால் முற்றிலும் வேறுபட்ட பொருள்களைச் சில ஏதுக்களால் ஒன்று எனக் காட்டி வியக்க வைப்பர். இத்தகு திறமை பெரிதும் வாய்க்கப் பெற்றவராகக் கவிகாளமேகம் விளங்கியதை அறிவோம். பாவலரும் 'சிரமாறுடையான்' என்ற தொடர் மூலம் பல்வேறு கடவுளரையும் நினைக்க வைத்த திறனை அவரது அவதானப் பாடலில் கண்டோம். அது மட்டுமன்றிப் பாவலர் காளமேகப் புலவரின் பாணியில் சிலேடையாகவே இயற்றிய பாடல் ஒன்று கிடைக்கின்றது. தம் மாணாக்கருள் ஒருவரான பன்னிருகைப் பெருமாள் என்பவர் பயன்படுத்திய பேனாவை, முற்றிலும் வேறுபட்ட யானையாகக் கண்டுசிலேடைப் பாடலைச் செய்துள்ளார்.

'அங்கை யிருப்பதனால் ஆகங் கறுத்ததனால்
வெங்கண் முனைநோக்கும் வெம்மையினால்—
எங்களுயிர்
பாநாறும் வாயான்நல் பன்னிருகைப் பெம்மான்கைப்
பேனாவும் யானையெனப் பேசு.'

என்பது பாடல். விளக்கம் இதோ:—

அங்கை—அகங்கை—பேனா இருக்கும்கை;
அழகியகை—யானையின் துதிக்கை.

ஆகங்கறுப்பு—கரிய நிறப் பேனா; யானையின் உடல் கறுப்பு.

வெங்கண் முனை நோக்கல் — கண்ணோடுகூடிய முனை பேனாவுக் குரியது; வெம்மையான போர் முனையை நோக்குதல் யானைக்குரியது.

எனவே பேனாவும் யானையாயிற்று. முற்றிலும் வேறுபட்ட இரு பொருட்களை ஒன்றாக்கிவிட்டார்.

9. சீட்டுக் கவிகள்

பாவலர் சென்னையில் வாழ்ந்த காலத்தில், கோட்டாற்றில் வாழ்ந்த தம்முடன் கல்வி பயின்ற பாக்கியம் பண்டாரத்துக்கு

எழுதப்பட்ட கடிதங்களாக நான்கு கிடைக்கின்றன. தாம் ஒரு பாவலர் என்பது தெரியும் விதத்தில் இக்கடிதங்களைப் பாவடிவில் படைத்துள்ளார். அவை, நேரிசை வெண்பா எட்டு, அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் எட்டு, வசன ரூபக வெண்பாக்கள் என்ற பெயரில் நேரிசை வெண்பா ஆறும் இன்னிசை வெண்பா ஒன்றுமாக மொத்தம் ஏழு, தொண்ணூற் றேழுவரிகளைக்கொண்ட நேரிசை யாசிரியப்பா ஒன்றுஎன்றவாறு கிடைக்கின்றன.

காரைக்குடி அழகப்பச் செட்டியாருக்கு 'அழகப்பக் கோவை' நூலை அச்சிடப் பொருளுதவி வேண்டி எழுதப்பெற்ற அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஐந்து கொண்ட சீட்டுக் கவி ஒன்றும் உள்ளது. இச்சீட்டுக்கவியில் தம் புலமைப் பெருக்கும், இயற்றியுள்ள நூலின் சிறப்பும் கூறப்பட்டு, அந்நூலை அச்சிட அருள வேண்டி,

'அன்னவரு நூலச்சி லியற்றியரங்
கேற்றியிந்த அவனி முற்றும்
துன்னவரு நிலையளிப்பான் நின்சமுகத்
துணைநாடிச் சூழ்ந்து நின்றேன்
பன்னவரும் புகழ்படைத்த பாக்கியவ
ரோதயபூ பாலா நானும்
மன்னவரும் போற்றரிய மகராசா
நீ கருணை வ்ழங்கு வாயே'-(5)

என முடித்திடுதல் காணத் தக்கது. மரபுவழி வந்த சீட்டுக் கவியென இதனைக் கருதலாம்.

தாம் புதிய வீட்டில் குடிபுகும் போது அவ்வில்லுக்குத் தேவையான அம்மிக் கல்லும் குழவியும் வேண்டித் தாமரை குளம் ஊரைச் சேர்ந்த தம் நண்பர் சிவதாணு பிள்ளைக்கு எழுதிய கடிதம் ஒன்று அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஒன்றில் அமைகிறது.

'ஆயுமகத் தாரகத்து ளனுதினமும்
அகலாம லன்போ டச்சம்
தோயுமகத் தாயென்றன் தூயகுணச்
சிவதாணுத் தோன்றல் யானின்
றேயுமகத் தென்றென்று மிருந்துபணி
யிருந்துசெய யிருங்கல் லாலோர்
தாயுமக வுந்தருவாய் தகுவிலையே
தருவலிசை தழைக்குந்தானே'

என்னுமப் பாடலின் இறுதியடியைக் காண்க. அம்மி குழவியை அன்பளிப்பாகக் கேட்கவில்லை. 'தகுவிலை தருவல்' என் உறுதியும் கூறுகிறார். விலைக்கு விற்ற பின்னரும் சிவதாணுவுக்கு இசை தழைக்குமாம். இசை (புகழ்) என்ற கரும்பைத் தின்னக் கூலியும் கொடுக்க முன் வருகிறார் பாவலர். உண்மையில் இப் பாடல் உள்ளளவும் சிவதாணுவின் பெயரும் நிலைக்கும் என்பது திண்ணம்.

10. நபி புகழ் பாக்கள்

நபிகள் நாயகமவர்களைப் போற்றிப் புகழும் இரண்டு கும்மிப் பாடல்கள் பாவலர் இயற்றியனவாகக் கிடைக்கின்றன. 'எங்கள் திருநபி' என்ற தலைப்பில் அமையும் அவற்றுள் ஒன்று நான்கடியிலான பல்லவி ஒன்றும், நான்கடிச் சரணங்கள் பதினேழும் கொண்டது. மற்றது நான்கடிச் சரணங்கள் ஐந்து மட்டும் கொண்டு முதல் பாடலின் பல்லவியோடு பாடத்தக்கது. இப்பாடல்களில்,

1. வையமுழுதும் ஓரினம் என வழங்கப் பணித்தது,
2. ஆண் பெண் இருபாலார்க்கும் சமஉரிமை அளித்தது,
3. மாதர் மறுமணம் செய்துகொள்ள வழிவகுத்தது,
4. இறுக்க முடியாத கடன் சுமைகளைப் பலிசையுடன் தாமே ஏற்றுக்கொண்டு தள்ளுபடி செய்தது,
5. 'தலாக்' என்னும் மணவிலக்கு உரிமை தந்தது,
6. செம்பு, கல், மண் உருவ தெய்வங்களைப் பணிவோர் நரகடைவர் என நவின்றது,
7. ஏவல்-விலகல் என்னவென ஓராமல் வாழ்வோர்க்குப் பயனில்லை என்றது,
8. சன்யாசமும் புரோகிதமும் இல்லை என்றது,
9. குடிப்பழக்கத்தைக் கடிந்தது,
10. சாதிபேதம் ஒழித்துச் சாத்திரக் குப்பையைத் துடைத்தது,
11. நீதி வழுவாப் பிறப்புரிமையை நிலத்துக்களித்தது,
12. சூது, களவு, வஞ்சதோஷம், வாது, பகை, கொலை இவற்றை உலகில் மருவாது ஒழித்தது,
13. பெண் குழந்தைகளைப் புதைக்கும் பொல்லா வழக்கத்தைத் தீர்த்தது,

14. தந்தை மறுமணம் செய்த பெண்ணை, மைந்தர் பின்பு மணந்து வந்த தீய வழக்கத்தை ஒழித்தது,

15. சுவர்க்கமிருப்பது தாயின் பாதத்தடியில் என அறிய வகைப் செய்தது,

16. சீனஞ்சென்றாயினும் கற்றல் நன்றென நவின்றது,

17. அஞ்ஞான மூடமனைத்தையும் ஒழித்து விஞ்ஞான ஒளிவீசச் செய்தது,

18. ஒருமைத் தௌஹீது என்னும் ஏகதெய்வ வணக்கத்தை வகுத்துப் புகழ் பெற்றது,

19. இல்லறத்தில் இருமைப் பயன் பெறவழி செய்தது,

20. சொன்ன மொழிப்படிச் செயலாற்றச் சொன்னது, என்பன முதற்பாடலிலும்;

1. சுத்தசன் மார்க்கம் வகுத்தது,

2. மக்கள் சொகுசாயுயிர் வாழச் செய்தது,

3. சத்திய மாமறை தந்தது,

4. சமயச் சழக்கை யழித்தது ,

5. உண்மையான தௌஹீத் என்னும் ஏக தெய்வவணக்க முறையைத்தந்து புகழ் பெற்றது,

6. ஐங்கால வணக்கத்தை அகிலத்திற்களித்தது,

7. முப்பது நாள் நோன்பை மக்கள் ஏற்கவைத்தது,

8. 'ஜகாத்' என்னும் ஏழைவரி ஏற்படுத்தியது,

9. மக்கா செல்லும் 'ஹஜ்' கடமையை வகுத்தளித்தது,

10. இறை யொளியில் வந்த வெல்லாம் தம் ஒளியாகப் பொருந்த நின்றது,

11. எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நெறி எல்லோரும் ஓர் சமம் என்றது,

12 ஒற்றுமை சகோதரத்துவம் ஏற்படவழி செய்தது- என்பன இரண்டாவது பாடலிலும் நபிநாதர் செயல்களாக வரிசைப்படுத்திக் கூறப்படுகின்றன.

11. மனிதரைப் புகழும் புகழ்ச்சிப் பாக்கள்

மாநிலத்தின் மணிவிளக்காம் இறைத்தூதர் நாயகரைப் புகழ்ந்த பாவலர், சாமானிய மனிதச் சான்றோர் சிலரையும்

புகழ்ந்து பாடியுள்ளமை அறியப் படுகின்றது. புகழொடு தோன்றிய சிலரை-பாவலர் புகழத்தக்கோர் எனக் கருதித் தேர்ந்தெடுத்த சிலரை மட்டும் புகழ்ந்து பாடுவதாகத் தெரிகிறது. இவ்வாறு பாடப்பட்டோரில் தலையாயவர் செத்துங் கொடுத்த சீதக்காதி எனலாம். இவரைப் பற்றிப் பாவலர் பாடியதாக,

'துட்டென்றால் வாயைத் திறந்து துடித்தெழுந்து
கொட்டென்று கேட்டு நிற்கும் கோளர்கட்கோ—
இட்டென்றும்
வற்றாத் தனம்படைத்த வள்ளல்சீ தக்காதி
பொற்றா மரைக்கோ புகழ்'

என்ற வெண்பா ஒன்று கிடைக்கின்றது. 1944 ஆம் ஆண்டில் காயல்பட்டினத்தில் சீதக்காதித் திருநாள் ஒன்று நடைபெற்றதாகவும், அவ்விழாவில் படிப்பதற்கெனப் பாவலர் பத்து அல்லது பன்னிரண்டு வெண்பாக்களை எழுதியனுப்பினார் என்றும் அவற்றில் ஒன்றுதான் இது என்றும் கூறுகின்றார் உத்தமபாளையம் கா. சீ. முகம்மது இசுமாயில்[123]. எஞ்சிய வெண்பாக்களின் நிலை என்னவாயிற்றோ?

திருவிதாங்கூர் மன்னர் சித்திரைத் திருநாள் மீது இரண்டு நேரிசை வெண்பாக்களும், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர்களின் எழுபதாம் ஆண்டு நிறைவின்போது வாழ்த்தாக இரண்டு நேரிசை வெண்பாக்களும், காரைக்குடி அழகப்பச் செட்டியார் மீது 'உவமை விலக்கு' என்ற தலைப்பில் அமைந்த பத்து எழுசீர் விருத்தங்களும், அவர் மீதே 'தரிசனப் பத்து' என்ற தலைப்பில் பாடப்பட்ட பத்து எண்சீர் விருத்தங்களும், சென்னை ஷெரீபாகநியமனம்பெற்றிருந்த எஸ். ஏ. ஷபீமுகம்மது மீது தரிசனப்பத்து என்ற தலைப்பில் பத்து எண் சீர்விருத்தங்களும், திருச்சிராப் பள்ளி செல்வந்தர் காஜா மியான் மீது 'தரிசனப்பத்து' என்ற தலைப்பில் பாடப்பெற்ற இரண்டு அறுசீர் விருத்தங்களும் பாவலர் பாடியனவாகக் கிடைக்கின்றன. இவற்றுள், அழகப்பர் மீது பாடப்பெற்ற 'உவமை விலக்கு' சுவைக் களஞ்சியமாகத் திகழ்கிறது, இதில் பொன், கடல், சந்திரன், மேகம், சோலை, மலை, கண், மாணிக்கம், முத்து, கன்னன் என்னும் பத்துடன் அழகப்பரை ஒப்பிட வந்து விலக்குவதாக அமைந்துள்ளது. திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்துக்கு ஒருலட்சம் ரூபாயை நன்கொடையாக அளித்த

123. கா. சீ. முகம்மது இஸ்மாயீல் — பேட்டி — 1-10-1978

வள்ளல் அழகப்பரைப் பாராட்ட இப்பாவினைப் புனைந்திருக்கிறார் பாவலர். இதே அழகப்பர் மீது தான் ஒரு கோவையையும் ஓர் ஆற்றுப்படையையும் பாவலர் இயற்றியுள்ளார் என முன்பு கண்டோம். ஆக, கோவை, ஆற்றுப்படை, உவமை விலக்கு, தரிசனப்பத்து என நான்கு வடிவங்களில் பாவலர் பாராட்டு மளவுக்கு அவர் தேர்ந்தெடுத்த மனிதப் புனிதராக அழகப்பர் விளங்கியிருக்கிறார் என்பது அறியத்தக்கது.

ஷபீ முகம்மது மீது பாடப் பெற்ற தரிசனப் பத்தில் புதுமை இல்லை. 22-12-1949இல் எழுதப் பட்டனவாகக் குறிப்புக் கிடைக்கும் இப்பாடல்கள் ஷபீ முகம்மது என்றவாறு பெயரும் ஆங்காங்கே ஒரு சில சொற்றொடர்களும் மாற்றப் பட்டுவரும் அழகப்பர் தரிசனப் பத்துப் பாடல்களேயன்றிவேறல்ல.

'காஜாமியான் தரிசனப்பத்து' என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது என்பதைத் தலைப்பு அறிவித்தாலும் இரண்டு பாடல்களே கிடைக்கின்றன. இரண்டும் புதுமையானவை எஞ்சியவை என்னவாயிற்றோ?

12. மொழிபெயர்ப்பு

புகழ்மிக்க உருதுப் பெருங்கவிஞர் அல்லாமா டாக்டர் சர். முகம்மது இக்பால் பாடிய இஸ்லாமிய சமுதாய கீதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாவடிவில் தந்த பெருமை பாவலர்க்குரியது. மற்றொரு புலவரின் பாடலுக்கான மொழிபெயர்ப்பு ஆதலால், பாவலரின் சொந்தக் கருத்துக்கு இதில் இடம் இல்லை. உருதுமொழியில் அமைந்த அருங்கவிதையின் செழுங்கருத்து தமிழ் நெஞ்சங்களுக்கு எட்டும் விதத்தில் செய்த பெருமை பாவலரைச் சார்கிறது. ஆனந்தக் களிப்பு என்ற தலைப்பிடப்பட்ட இரட்டைக் கண்ணிகள் பன்னிரண்டால் அமைந்த இப்பாடல் 'கோட்டாறு நத்வதுல் ஆரிபீன் சொஸைட்டி'யின் தன் முயற்சியால் அச்சிடப்பட்டு, துண்டுப் பிரசுரமாக வெளியிடப் பட்டது.

13. வாழ்த்துப் பாக்கள்

கன்னியப்பன்—சாரதை தம்பதிகளின் திருமணத்தின்போது வாழ்த்திப் பாடிய நேரிசை வெண்பா ஒன்றும், அறுசீர் விருத்தம் ஐந்தும் கொண்ட வாழ்த்துப் பா ஒன்றும், ஆழ்வார் திருநகரி ஐக்கிய முஸ்லிம் ஜமா-அத்தார் தம் வறுமை நீங்க வாழ்த்துமாறு வேண்டியபோது பாடிக்கொடுத்த நேரிசை வெண்பா ஒன்றும் எண்சீர் விருத்தம் ஆறும் கொண்ட பாடல் ஒன்றும் இதில்

அடங்குவன. திருமணவாழ்த்தில், தாம் இஸ்லாமிய சமயப் புலவராயினும், தம்பதிகளின் சமய நம்பிக்கைக்கு இயைய,

'மெய்யு முயிருங் கைலைமலை
மேவு மரனு முமையுமென' —1
'மணமும் மலரும் பாற்கடல்சேர்
மாலும் கமல மாதென' —2
'கண்ணில் இமையே செந்தில்வளர்
கந்தன் வள்ளி யம்மையென' —3
'மணியும் ஒளியு மைங்கணை சேர்
மதனும் ரதியும் போல' —4
'கரும்பும் சுவையு மமராவதிக்
காவ லிறையும் சசியுமென' —5

என்றவாறு உவமைப்படுத்தி வாழ்த்தும் பாங்கில் அமைவது குறிப்பிடத்தக்கது.

தம் சமயக்கோட்பாட்டின்படி அல்லாவிடம் பாவலர் ஆழ்வார்திருநகரிஐக்கியமுஸ்லிம்ஜமா அத்தார்க்குஅருள்வேண்டி வாழ்த்துவதாக அமைவது அவர்களுக்கு எழுதியளித்த வாழ்த்து மடல். இவ்வாழ்த்து துண்டுப் பிரசுரமாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

மண்பூத்த வளமனைத்தும் மனைவாய் பூப்ப
மதிபூப்பத் துதிபூப்ப வாய்மை பூப்ப
கண்பூத்த மணிமுழுதுங் கருணை பூப்பக்
கார்முகிலுங் கைமலரிற் கனிந்து பூப்ப
அண்பூத்த சுகிர்தநிலை யடைவிற் பூப்ப
அழகியநல் மணவாள புரத்துள் மேவும்
பண்பூத்த ஐக்கியமுஸ் லீம்ஜ மாத்தார்
பல்லாண்டு பல்லாண்டு பல்க மாதோ' —(6)

எனவரும் இவ்வாழ்த்தின் இறுதிப் பாடல் பாவலரின் சொல்லாட்சிக்குச் சிறந்த சான்றாக உள்ளது.

14. பிற தனிப் பாக்கள்

1947 ஆம் ஆண்டில் திருச்சி வானொலி நிலையத்தில் ஒலி பரப்பப்பட்ட 'அன்பு' என்ற தலைப்பிலான கவியரங்கக் கவிதை ஒன்று தொண்ணூற்றிரண்டு வரிகளைக் கொண்ட நேரிசை யாசிரியப்பாவில் அமைந்துள்ளது. இப்பாடலில் சைவம், பௌத்தம், கிருத்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களின் அடிப்படை நெறியாக அன்பு விளங்குவதை எடுத்துக்கூறிச்

சமயப் பொதுமை நெறியைக் காட்டும் பாவலரின் உளப் பான்மையை உணரமுடிகிறது.

தாம் பிறந்த கோட்டாறு பற்றி 'ஆழ்கடலுடீஇ' எனத் தொடங்கும் பாடல் ஒன்று முப்பத்தொரு வரிகளைக்கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது. இதில் கோட்டாற்றின் இயற்கை வளம் வெகுவாகப் புனையப்பட்டுக் கற்பனை நயம் தோன்ற விளங்குகிறது. எந்தச் சூழ்நிலையில் இயற்றப்பட்டது என்பது விளங்கவில்லை. ஏதேனும் நூலுக்கு எழுதப்பட்ட சாற்றுக்கவியின் முற்பகுதியாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

'தமிழ்த்தாய்' என்ற தலைப்பில் அத்தாயை முன்னிலைப் படுத்திப் பரவும் பாணியில் ஈரடிகளைக் கொண்ட அறுசீர் விருத்தம் பன்னிரண்டு கொண்ட பாடல் ஒன்று உளது. இப் பாடலில் மலையிற் பிறந்தது, உலகை ஒளிரச் செய்தது, நல்லோர் புந்தியிடத்தில் போந்தது, குமரிவேங்கடம் குடகு கடல் இவற்றைத் திசையாகக் கொண்டது, தெலுங்கு துளு கன்னடம் மலையாளம் ஆகியவற்றை மகவாக ஈன்றது, கன்னியாகவே இருப்பது, ஆரியம் வழக்கொழிந்து இடபாலாகச் செய்தது, சேர சோழ பாண்டியரின் கொலுவில் வீற்றிருந்தது, சங்கப் பலகையில் தவழ்ந்தது, நீரின் எதிரே நடந்தது, நெருப்பில் மூழ்கி எழுந்தது, முதலையுண்ட பாலனை அழைத்தது, நாதன் தூதாய் நடந்தது, வேதக் கபாடம் திறந்தது என்னும் சிறப்புக்களைப் பட்டியல் போட்டுத் தமிழினைப் போற்றுகின்றார் பாவலர். இறுதியில்

'எல்லாம் வல்ல நின்பெருமை
இயம்பற் கரிய வாயிடினும்
வல்லார் நாவி லெந்நாளும்
வாழாய் வாழாய் தமிழ்த் தாயே' (12)

என முடித்திடும்போது தமிழ் உணர்வு தலைதூக்குகின்றது.

'பெண்மாட்சி' என்ற தலைப்பில் பெண்ணின் பெருமையைப் பெருகப் போற்றும் பாடல் ஒன்று ஈரடிகளைக் கொண்ட அறுசீர் விருத்தம் பன்னிரண்டில் உள்ளது. இப்பாடலில்,

'பூமா தேவி நீயானாய்
புகழின் மகளும் நீயானாய்
நாமா மகளும் நீயானாய்
நளினத் தலைவி நீயன்றோ' (2)

என்ற பாடல் தொடங்கி, ஒருவன் நாவிலும் ஒருவன் மார்பிலும் வைத்த பெருமையெல்லாம் கூறப்பட்டு, தீக்குளித்த சீதையாய்,

கணவன் உயிர்மீட்ட சாவித்திரியாய், உரிய உரியத்துகில் காட்டிய திரௌபதியாய் எல்லாம் விளங்கும் பெண்ணினத்தைப் போற்றி இறுதியில்,

'வாய்ந்த வுன்றன் மாட்சியெலாம்
வவ்விப் பறித்த மக்களினி
ஆய்ந்து தெளியும் காலமிதோ
அடுத்த தடுத்த தறிவாயே' (12)

என முடித்திடும் பாங்கு, பாவலரின் தாய்க்குலம் போற்றும் தகைமையை வெளிப்படுத்துகிறது.

பாவலரின் 'மதுவேண்டும்' என்ற தலைப்பிலான இசைப் பாடல், அவரை ஒரு சூஃபிஞானப் புலவராக உயர்த்திக் காட்ட வல்லது. ஞானமறிந்து மோன நிலையில் இருத்தலை 'மது' எனக் கொண்டு, அந்நிலைவேண்டும் எனப் பாவலர் பாடும் இப்பாடல் ஒரு பல்லவியும் பன்னிரண்டு சரணங்களும் கொண்டது.

'பேச்சற்று மூச்சற்றுப்
பேணுந் தொழிலற்று
நீச்சற்ற சுத்த
நிலையி லிருப்பதற்கே'—கொஞ்சம் மதுவேண்டும் (72)

எனவரும் இறுதிக்கண்ணி, சும்மா இருக்க அருள்புரிய வேண்டி நிற்கும் முந்தைய ஞானிகளின் நிலைக்குப் பாவலரைக் கொண்டு செல்வதைக் காணலாம்.

இவ்வாறாகப் பாவலர் பாடியுள்ளனவாகக் கிடைக்கப் பெறும் உதிரித்தலைப்புக்கள் 62; பாடல் தொகை 215. இவை, வெண்பா—42, ஆசிரியம்—12, அறுசீர் விருத்தம்—63, அறுசீர் ஈரடி விருத்தம்—24, எழுசீர் விருத்தம்—20, எண்சீர் விருத்தம்—27, கலிவிருத்தம்—1, கொச்சகம்—7, கட்டளைக் கலித்துறை—2, இரட்டைக் கண்ணிகள்—12, இசை—5 என்ற விதத்தில் அமைந்துள்ளன. இவையன்றிக் கிடைக்காதன எத்தனையோ? கிடைப்பனவற்றையாவது தொகுத்து நூல் வடிவில் அச்சிட்டு வெளியிடலாமல்லவா? இக்கூட்டம் அதற்கு வழிவகை செய்யும் என நம்புவோமாக.

iii பாவலரின் உரைநடை நூல்கள்

பாவலர் இயற்றியனவாகக் கிடைக்கப்பெறும் தேவலோகக் கிரிமினல் கேசு, வேதாந்த வியவகாரக் கிரிமினல் கேசு என்னும் இரண்டு உரைநடை நூல்களும் வேதத் தத்துவங்களை நகைச்

சுவையோடு கூறுவன. இவ்விரண்டு நூல்களும் முறையே 1912 ஆம் ஆண்டிலும், 1923 ஆம் ஆண்டிலும் அச்சில் வெளி வந்துள்ளன. தம் காலத்துப் பேச்சுநடை, எழுத்துநடை இரண்டினையும் கொண்டு விளங்குவன இவை.

பாவலர் 'சீறா நாடகம்' என்றொரு நாடக நூலையும் 'கெடுவான் கேடு நினைப்பான் அல்லது மஸ்தான் நமூனா என்றொரு புதினத்தையும் உரைநடையில் இயற்றியிருப்பதாகக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. அந்த நூல்கள் நம் பார்வைக்குக் கிடைத்தில.

'சீறாப்புராணம்' என்னும் செம்மைசேர் காப்பியப் பாடல் களுக்குப் பொழிப்புரை வரைந்துள்ளார் பாவலர். இவ்வுரை நூலின் இரண்டாம் பதிப்பு 1912 ஆம் ஆண்டு ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளி வந்துள்ளது. இவ்வுரை நூலும் பாவலரின் உரைநடை வன்மைக்குக் கட்டியங் கூறும். பண்டைய உரையாசிரியர்களின் சாயல் இவ்வுரை நூலில் காணக்கிடக்கின்றது.

தமிழில் உரைநடை இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றி வளர்ச்சிநிலை எய்த வழிவகுத்த 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாவலரின் உரைநடை நூல்கள் அவ்வகை இலக்கிய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பன என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனினும், தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றி ஆராய்ந்து நூல்களை எழுதுவோர் தம் கண்களில் பாவலரின் உரைநடை நூல்கள் தென்படாது போயினமை வியப்பினை ஊட்டுகிறதல்லவா?

துணை நூல்கள்

1. அப்துற் - றகீம், எம். ஆர். எம். — முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்.
2. அல்ஹாஜ் கலாநிதி முகம்மது உவைஸ் — இஸ்லாமும் இன்பத் தமிழும்.
3. கனி, ஆர். பி. எம். — இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்
4. குமரேச பிள்ளை, சி. — அவதானக் கலைஞர்.
5. சதாசிவம், செ. — சேரநாடும் செந்தமிழும்.
6. சதாசிவம், செ. — சேரநாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் வரலாறு.
7. சிவஞானம், ம. பொ. — வள்ளுவர் கண்ட ஒருமைப்பாடு.
8. சுந்தரம் பிள்ளை, பெ. — மனோன்மணீயம்.
9. சுப்பிரமணியம், ச. வே. — இலக்கிய உணர்வுகள்
10. ஞானசம்பந்தன், அ ச. — இலக்கியக் கலை.
11. தனிநாயக அடிகள் — தமிழ்த் தூது.
12. ஹமீது, கே. பி. எஸ். — இலக்கியப் பேழை.
13. சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர்.
14. சதகத்துல்லா அப்பா கல்லூரி ஆண்டு மலர் — 1977.

சொல்லகராதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1.	தமிழில் விடுகதைகள்	... ரூ. -1020
2.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?	... ரூ. 6-00
3.	தமிழர் தோற்கருவிகள்	... ரூ. 10-00
4.	தமிழும் தமிழரும்	... ரூ. 5-00
5.	தமிழர் இசை	... ரூ. 70-00
6.	ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள்-ஓர் மதிப்பீடு	... ரூ. 20-00
7.	இளங்கோவின் இலக்கிய உத்திகள்	... ரூ. 12-00
8.	திராவிட மொழி இலக்கியங்கள்	... ரூ. 35-00
9.	தமிழ் இலக்கியக் கொள்கை - 8	... ரூ. 20-00
10.	தமிழ் இலக்கியக் கொள்கை - 9	... ரூ. 20-00
11.	தொல்காப்பியம் புணரியல்	... ரூ. 10-00
12.	தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல்	... ரூ. 12-00
13.	தொல்காப்பியம் - விளிமரபு	... ரூ. 6-00
14.	தொல்காப்பியம் - பெயரியல்	... ரூ. 12-00
15.	தொல்காப்பியம் - வினையியல்	... ரூ. 20-00
16.	பிரபந்த தீபிகை	... ரூ. 12-00
17.	கண் மருத்துவம்	... ரூ. 50-00
18.	வர்ம சூத்திரம்	... ரூ. 10-00
19.	தன்வந்திரி குழந்தை வாகடம்	... ரூ. 14-00
20.	வெள்ளைக்காரன் கதை	... ரூ. 7-00
21.	மெய்க்கீர்த்திகள்	... ரூ. 20-00
22.	சிந்து இலக்கியம்	... ரூ. 8-00
23.	தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	... ரூ. 6-00
24.	தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்	... ரூ. 12-00
25.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 1	... ரூ. 12-00
26.	இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 2	... ரூ. 22-00
27.	இஸ்லாம் வளர்த்த தமிழ்	... ரூ. 15-00
28.	உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள்	... ரூ. 10-00
29.	டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள்	... ரூ. 10-00
30.	தமிழரின் தாயகம்	... ரூ. 10-00
31.	பாவாணரும் தனித்தமிழும்	... ரூ. 12-00
32.	தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு	... ரூ. 10-00
33.	விவிலியம் - திருக்குறள் - சைவசித்தாந்தம்	... ரூ. 20-00
34.	செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள்	... ரூ. 25-00
35.	மொழி பெயர்ப்பியல்	... ரூ. 10-00
36.	தமிழர் திருமணம்	... ரூ. 5-00
37.	தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்	... ரூ. 35-00
38.	தமிழ் நாவல்கள் (அகர வரிசை)	... ரூ. 40-00
39.	எண்பத்திரண்டில் தமிழ்	... ரூ. 90-00
40.	Siddha Medicine (Heritage of the Tamils)	... Rs. 45-00
41.	Cultural Heritage of the Tamils	... Rs. 20-00
42.	Literary Heritage of the Tamils	... Rs. 50-00
43.	Papers on Tamil Studies	... Rs. 15-00
44.	Tamil Drama	... Rs. 20-00
45.	Dr Mu. Va.	... Rs. 20-00
46.	Thiru Murugan	... Rs. 5-00
47.	A Study of the Perunkatai	... Rs. 12-00
48.	Tamil Writers Directory	... Rs. 10-00
49.	Dissertations on Tamilology	... Rs. 10-00
50.	Tamil-Text (An-Auto Instructional Course)	... Rs. 25-00
51.	Siddha Medical Manuscripts in Tamil	... Rs. 8-00
52.	Karaikkal Ammaiyar	... Rs. 6-00
53.	Heritage of the Tamils-Temple Arts	... Rs. 50-00
54.	Tolkāppiyam (An English Translation)	... Rs. 25-00